# தமிழ்மொழிப் பாடத்திட்டம் 2024
# தொடக்கநிலை

# Tamil Language Syllabus 2024
# Primary

CURRICULUM PLANNING & DEVELOPMENT DIVISION
MINISTRY OF EDUCATION, SINGAPORE

# உள்ளடக்கம்

**அறிமுகம்**


அ முன்னுரை 3
ஆ கல்வியின் விரும்பத்தக்க விளைவுகள் 4
இ இருமொழிக் கல்விக்கொள்கை 4
ஈ தாய்மொழிக் கல்வி 5
உ ஆய்வுகளும் பரிந்துரைகளும் 6
ஊ தமிழ்மொழிக் கல்வியின் தொலை இலக்கு 6
எ தமிழ் மொழிப்பாடத்திற்குரிய பாடவேளைகள் 7
ஏ பாடத்திட்ட அமலாக்கம் 8


**இயல் 1**

**தமிழ் மொழிப்பாடக் கலைத்திட்டம்**


1.1 தமிழ்மொழி கற்றல் கற்பித்தலுக்கான நோக்கங்கள் 10
1.2 தமிழ் மொழிப்பாடக் கலைத்திட்டம் 2024-இன் உருவாக்கம் 12
1.3 முக்கியக் கூறுகளும் முனைப்புகளும் 16
1.4 நற்பண்பு குடியியல் கல்விப் பாடங்களோடு ஒருங்கிணைப்பு 18
1.5 சிறப்புக் கல்வித் தேவையுள்ள மாணவர்களுக்குரிய ஆதரவு 19


**இயல் 2**

**பாடப்பொருள்**


2.1 கற்றல் களங்கள் 21
2.2 தமிழ் எழுத்துகளைக் கற்பித்தல் 23
2.3 இலக்கணமும் மொழிமரபுகளும் 25
2.4 செய்யுள், பழமொழிகள் 26
2.5 அடிப்படை மொழித்திறன்கள் 27
2.6 இருவழிக் கருத்துப்பரிமாற்றத் திறன்கள் 46
2.7 21-ஆம் நூற்றாண்டுத் திறன்கள் 49


**இயல் 3**

**கற்பித்தல் முறைமை**


3.1 மகிழ்வுறு கற்றல் 55
3.2 சிங்கப்பூர்க் கற்பித்தல் முறைமை 55
3.3 உரையாடல்வழிக் கற்பித்தல் 62
3.4 வினவல்வழிக் கற்றல் 64


**இயல் 4**

**மதிப்பீடு**


4.1 முழுமையான மதிப்பீடு 67
4.2 சமச்சீரான மதிப்பீடு 67
4.3 மதிப்பீட்டின் வகைகள் 69
4.4 மதிப்பீட்டில் முத்தரப்பினரின் பங்கு 72
4.5 வாழ்நாள் கற்றலை நோக்கிச் செல்லுதல் 72


**பின்னிணைப்புகள்**



1 இலக்கணம், மொழிமரபுகள் பட்டியல் (1 & 2) 74
2 இலக்கணம், மொழிமரபுகள் பட்டியல் (3 - 6) 76
3 செய்யுள், பழமொழிகள் பட்டியல் 78

# அறிமுகம்

# அறிமுகம்

## அ. முன்னுரை

சிங்கப்பூரில் மொழிச்சூழல் என்பது விரைந்து வளர்ந்துவரும் பொருளாதாரம், உலகமயமாதல், தொழில்நுட்ப வளர்ச்சி முதலிய பல்வேறு காரணிகளின் தாக்கத்தால் மாறிவருகிறது. மாறிவரும் இச்சூழலுக்கு ஏற்பவும் வாழ்க்கைச் சவால்களைச் சந்திக்கவும் மாணவர்களுக்குப் பாட அறிவு, மொழித்திறன்கள் ஆகியவற்றோடு 21-ஆம் நூற்றாண்டுத் திறன்களும் அவசியமாகின்றன. கல்வியமைச்சின் 21-ஆம் நூற்றாண்டுத் திறன்களுக்குரிய பணிச்சட்டம் இதனையே வலியுறுத்துகிறது.




21-ஆம் நூற்றாண்டுத் திறன்களை நம் மாணவர்கள் எளிதில் கைவரப்பெறும் வகையில் தமிழ்மொழி கற்றல் கற்பித்தலில் தகுந்த பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. தமிழ்மொழி பயிலும் மாணவர்கள் மொழித்திறன்களில் தக்க பயிற்சி பெறுவதோடு 21-ஆம் நூற்றாண்டுத் திறன்களையும் வளர்த்துக்கொண்டு, தொழில்நுட்பம் வழங்கும் வாய்ப்புகளை நன்முறையில் பயன்படுத்திக் கல்வியில் மேம்பாடு காண நாம் வழிவகை செய்தல் வேண்டும்.

## ஆ. கல்வியின் விரும்பத்தக்க விளைவுகள்

முறைசார்ந்த கல்விப் பயணத்தின் நிறைவில் ஒவ்வொரு சிங்கப்பூரரும் பின்வரும் கல்வியின் விரும்பத்தக்க விளைவுகளைப் பெற்றிருக்க வேண்டும். இந்த விரும்பத்தக்க விளைவுகள் கற்றல் கற்பித்தலுக்கான பொதுவான நோக்கங்களை வரையறுத்துக் காட்டுகின்றன. இவற்றை அடிப்படையாகக்கொண்டே சிங்கப்பூரின் கல்விக் கொள்கைகள் அமைகின்றன. நமது கல்விமுறை எவ்வாறு செயற்படுகிறது என்பதைச் சீர்தூக்கிப் பார்க்க இவை உதவுகின்றன. இந்தக் கல்விமுறையில் கற்கும் ஒவ்வொரு பிள்ளையும் தன்னம்பிக்கை மிக்கவராகவும் சுயமுனைப்புடன் கற்பவராகவும், துடிப்புடன் பங்களிப்பவராகவும் அக்கறை கொண்ட குடிமகனாகவும் திகழ்வார்.

**தொடக்கநிலைக் கல்வியின் நிறைவில் மாணவர்களிடம் எதிர்பார்க்கப்படுவன:**

- எது சரி, எது தவறு என்று வேறுபடுத்தி அறிதல்
- தம் ஆற்றலையும் அதை மேம்படுத்துவதற்கான வழிமுறைகளையும் அறிதல்
- ஒத்துழைத்தல், பகிர்ந்துகொள்ளுதல், பிறர்மீது அக்கறைகொள்ளுதல்
- எதையும் அறிவார்வத்தோடு அணுகி அறிதல்
- சுயமாகச் சிந்தித்துத் தம் கருத்துகளைத் தன்னம்பிக்கையுடன் வெளிப்படுத்துதல்
- செய்யும் செயலில் பெருமிதங்கொள்ளுதல்
- நல்ல பழக்கவழக்கங்களோடு கலையுணர்வுமிக்கவராகவும் இருத்தல்
- சிங்கப்பூரைப்பற்றி அறிந்திருந்தலோடு அதனை நேசித்தல்

மேலும் விவரங்கள் அறிய, பின்வரும் இணைப்புகளைப் பார்க்கவும்:
- கல்வியின் விரும்பத்தக்க விளைவுகள்
- Desired Outcomes of Education

## இ. இருமொழிக் கல்விக்கொள்கை

சிங்கப்பூர்க் கல்வித்திட்டத்தின் முக்கியக் கூறாக இருமொழிக் கல்விக் கொள்கை விளங்குகிறது. இதன் அடிப்படையில் ஆங்கிலமும் தாய்மொழிகளும் பள்ளிகளில் கற்பிக்கப்படுகின்றன. பல்லினச் சமுதாயமாக விளங்கும் சிங்கப்பூரில் ஆங்கிலம் முக்கியத் தொடர்புமொழியாகவும் அலுவல்மொழியாகவும் பயன்படுகிறது. அதே வேளையில், ஒவ்வோர் இனத்தவரையும் அவரவர் பாரம்பரியத்தோடும் ஆசிய பண்பாட்டு மூலங்களோடும் இணைப்பதற்குத் தாய்மொழிக் கல்வி ஒரு பாலமாக அமைந்துள்ளது.

மேலும் விவரங்கள் அறிய, இருமொழிக் கல்விக் கொள்கை என்னும் இணைப்பைப் பார்க்கவும்.

## ஈ. தாய்மொழிக் கல்வி

உலகமயமாகிவரும் சூழலில் உலக நாடுகளுடன் தொடர்புகொள்ளவும் தனித்தன்மைமிக்க ஆசிய மரபுகளைக் கட்டிக்காக்கவும் தாய்மொழிக் கல்வி துணைபுரிகிறது. பண்பாட்டு எல்லைக்கோடுகளுக்கு அப்பால் செல்லும் ஆற்றலைப் பெறுவதோடு, தாம் யார், இந்த உலகில் தமக்குரிய இடம் என்ன என்பனவற்றிலும் உறுதியான நம்பிக்கை கொண்டவர்களாக இளந்தலைமுறையினரை உருவாக்குவதற்கும் தாய்மொழிக் கல்வி உதவுகிறது.

மாணவர் ஒவ்வொருவரையும் அவரவர் திறனுக்கேற்பத் தாய்மொழியைத் தடையின்றியும் தகுதிக்கேற்பவும் கற்க வகைசெய்தல் என்பது தாய்மொழிக் கல்விக்கொள்கையின் அடிப்படை இலக்காகும். தாய்மொழியை மகிழ்வுறக் கற்றுத் தன்னம்பிக்கையுடன் பயன்படுத்துவோரை உருவாக்குவதற்கு மூன்று குறிக்கோள்கள் வரையறுக்கப்பட்டுள்ளன:

**கருத்துப்பரிமாற்றம்**

இது நடைமுறை வாழ்க்கையில் ஒவ்வொருவருக்கும் தேவைப்படும் அடிப்படைத் திறனாகும். மாணவர்கள் தம் தாய்மொழியிலும் ஆங்கிலத்திலும் தடையின்றிக் கருத்துகளைப் பரிமாறிக்கொள்ளும் திறனைப் பெற்றிருப்பது உலக அளவில் சிங்கப்பூரின் போட்டித்தன்மையை வலுப்படுத்தும்.

**பண்பாடு**

மொழிப்பாடக் கலைத்திட்டத்தின் வாயிலாக நம் பண்பாடு, மரபு, இலக்கியம், வரலாறு முதலானவை குறித்து இளந்தலைமுறையினரிடையே புரிந்துணர்வை வளர்ப்பதும் அவற்றைப் போற்றிப் பாதுகாப்பதன் அவசியத்தை உணர்த்துவதும் இன்றியமையாதவையாகும். இவை நம் மாணவர்கள் தங்கள் தனித்தன்மையை உருவாக்கிக்கொள்ள உதவுவதோடு தமக்கென ஓர் அடையாளத்தை ஏற்படுத்திக்கொள்ளவும் வழிகாட்டும்.

**தொடர்பிணைப்பு**

21-ஆம் நூற்றாண்டுத் திறன்களுள் முக்கியமாகக் கருதப்பெறும் தொடர்பிணைப்புத் திறன் என்பது ஆசியாவில் மட்டுமன்றி, உலகின் பிற பகுதிகளில் வாழும் அதே மொழி பேசும் மக்களுடன் தொடர்புநிலைகளை ஏற்படுத்திக்கொள்ள உதவுவதோடு, அவர்தம் பண்பாட்டுப் பழக்கவழக்கங்களைப் புரிந்துகொள்ளவும் சிங்கப்பூரர்களுக்கு உறுதுணையாய் அமையும்.



## உ. ஆய்வுகளும் பரிந்துரைகளும்

2005, 2010 ஆகிய ஆண்டுகளில் தாய்மொழிக் கல்வி குறித்து மேற்கொள்ளப்பட்ட முக்கிய மறு ஆய்வுகள் தமிழ்மொழி கற்றல் கற்பித்தலில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்படக் காரணங்களாயிருந்தன. இந்த இரண்டு ஆய்வுகளிலும் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளைக் கருத்திற்கொண்டு தமிழ் பயிலும் மாணவர்களின் மொழித் தேவைகளுக்கேற்பப் பொருத்தமான முறையில் தொடக்கநிலைக்குரிய மொழிப்பாடக் கலைத்திட்டம் மேம்படுத்தப்பட்டது.

மேலும் விவரங்கள் அறிய, ஆய்வுகளும் பரிந்துரைகளும் என்னும் இணைப்பைப் பார்க்கவும்.

இவற்றின் தொடர்ச்சியாக, 2015-ஆம் ஆண்டின் மொழிப்பாடக் கலைத்திட்டம் மறு ஆய்வு செய்யப்பட்டு, 2024-ஆம் ஆண்டின் புதிய மொழிப்பாடக் கலைத்திட்டத்திற்குரிய பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டன. நடப்பிலிருக்கும் மொழிப்பாடக் கலைத்திட்டத்தின் பயன்மிகு கூறுகளைத் தக்கவைத்துக்கொள்வதோடு மேலும் சில முக்கியக் கூறுகள் புதிய மொழிப்பாடக் கலைத்திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இவை **மகிழ்வுறக் கற்று மொழியைத் தன்னம்பிக்கையோடு பயன்படுத்துபவரை உருவாக்க உதவும்.** புதிய மொழிப்பாடக் கலைத்திட்டத்தைப் பயனாக்க முறையில் அமல்படுத்துவதன்மூலம் தமிழ்மொழி கற்றல் கற்பித்தலை அடுத்தடுத்த மேம்பட்ட நிலைக்குக் கொண்டு செல்லக் கல்வி அமைச்சு தொடர்ந்து பல முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

## ஊ. தமிழ்மொழிக் கல்வியின் தொலை இலக்கு




தமிழ் பயிலும் மாணவர்கள் ஒருவரோடு ஒருவர் சரளமாகவும் தன்னம்பிக்கையுடனும் உரையாடுவதற்குத் தேவையான அடிப்படை மொழியாற்றலைப் பெற்றிட மொழி கற்றல் உறுதுணை புரிதல் வேண்டும். மேலும், அவர்கள் தமிழில் தயக்கமின்றிக் கருத்துப்பரிமாறிக்கொள்வதற்குத் தேவையான மொழிவளத்தையும் சொல்வளத்தையும் பெற்றிட வழிவகைசெய்தல் வேண்டும். சிங்கப்பூரில் தமிழை வாழும் மொழியாக நிலைபெறச் செய்தல் என்னும் தொலை இலக்கை அடைய இவை அவசியமாகும்.

## எ. தமிழ் மொழிப்பாடத்திற்குரிய பாடவேளைகள்

| தொடக்கநிலை | | பாடவேளைகள்* |
|---|---|---|
| தமிழ் | 1 | 12 |
| | 2 | 12 |
| | 3 | 9 |
| | 4 | 8 |
| | 5 | 9 |
| | 6 | 9 |
| உயர்தமிழ் | 5 | 2 |
| | 6 | 2 |
| அடிப்படைத் தமிழ் | 5 | 5 |
| | 6 | 5 |

* 1 பாடவேளை – 30 நிமிடம்

## தொடக்கநிலை 3, 4 மிகுநிலை மாணவர்களின் மொழித்திறனை வளப்படுத்தும் உயர்தமிழ்ப் பாடம்

சிங்கப்பூரில் 1992-ஆம் ஆண்டுமுதல் தமிழ்மொழியில் அதிக ஆர்வமும் ஆற்றலுமுடைய தொடக்கநிலை ஐந்தாம், ஆறாம் வகுப்பு மாணவர்களுக்கு உயர்தமிழ் ஒரு தனிப் பாடமாக வழங்கப்பட்டு வருகிறது. இதனைத் தொடர்ந்து மாறிவரும் மாணவர்களின் கற்றல் தேவைகளுக்கேற்பத் தமிழ்மொழியில் மிகுந்த ஆர்வமுடைய மாணவர்களை முன்னதாகவே அடையாளங்கண்டு அவர்களின் மொழித்திறனை இளம்பருவத்திலிருந்தே வளப்படுத்தக் கல்வியமைச்சின் தாய்மொழிகள் துறை முனைந்தது. அதனை முன்னிட்டுத் தாய்மொழியில் சிறந்து விளங்கும் மாணவர்களின் மொழித்திறனை மேலும் வலுப்படுத்துவதையும், இலக்கியம், பண்பாடு ஆகியவற்றில் ஆர்வத்தையும் ஈடுபாட்டையும் ஏற்படுத்துவதையும் நோக்கமாகக்கொண்டு தொடக்கநிலை மூன்றிலும் நான்கிலும் உயர்தமிழ்ப் பாடம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. உயர்தமிழ்ப் பாடம் மிகுநிலை மாணவர்களின் படித்தல் திறனையும் எழுதுதல் திறனையும் மேம்படுத்தும் விதமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. மாணவர்களின் கருத்துணர் திறன் மேம்படவும் அவர்களின் சொல்வளம் பெருகவும் வழிவகை செய்வதற்கென நடவடிக்கைகள் உருவாக்கப்பட்டுள்ளன. மாணவர்களின் எழுத்துத் திறனை மேம்படுத்தப் பொருத்தமான பயிற்சிகள் தயாரிக்கப்பட்டுள்ளன. அவற்றின்மூலம் மாணவர்கள் மொழியை முறையாகப் பயன்படுத்துவதற்கும் எழுத்துவழிக் கருத்துகளைப் பரிமாறிக்கொள்வதற்கும் வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், பாடத்தோடு தொடர்புடைய சுவைத் தகவல்களும் மகிழ்வூட்டும் மொழி விளையாட்டுகளும் பயிற்றுவளங்களில் சேர்க்கப்பட்டுள்ளன.

## தொடக்கநிலை 3, 4 மாணவர் மொழியாற்றலை மேம்படுத்த உதவும் தாய்மொழி ஆதரவுத் திட்டம்

தமிழைத் தாய்மொழியாகப் பயிலும் மாணவர்களுள் மெதுநிலை மாணவர்களது மொழியாற்றலை மேம்படுத்துவது என்பது ஒரு முக்கியச் சவாலாக இருந்து வருகிறது. இதற்கு வீட்டுமொழிச் சூழல், குடும்ப ஆதரவற்ற சூழல், சிறப்புத் தேவை ஆகியவை முக்கியக் காரணிகளாக அமைகின்றன. மொழியில் திறன் குறைந்து காணப்படும் இத்தகைய மாணவர்கள் தமிழ்மொழியைக் கற்பதில் பொதுவாக ஆர்வம் காட்டுவதில்லை. ஆசிரியர்கள் இவர்களது மொழியாற்றலை மேம்படுத்துவதில் சிரமத்தை எதிர்நோக்குகிறார்கள். தமிழ்மொழிப் பாடக்கலைத்திட்டமானது வேறுபடுத்தப்பட்ட கற்றலுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டிருந்தாலும் பலதரப்பட்ட மாணவர்கள் பயிலும் தமிழ் வகுப்பில் இந்த மாணவர்கள் தங்கள் மொழியாற்றலை மேம்படுத்திக்கொள்வதில் அதிகச் சிரமத்தை எதிர்நோக்குவதால், நாளடைவில் மிகவும் பின்தங்கிய நிலையை அடைகிறார்கள். இதனால், அவர்கள் தன்னம்பிக்கை இழந்து காணப்படுவதோடு மொழி கற்றலில் குறைவான ஈடுபாடு கொண்டவர்களாகவும் இருக்கிறார்கள். இத்தகைய மாணவர்களின் மொழியாற்றலை மேம்படுத்தும் பொருட்டுக் கல்வியமைச்சின் தாய்மொழிகள் துறை மூன்றாம் நான்காம் வகுப்புகளிலுள்ள மெதுநிலை மாணவர்களுக்கெனத் தாய்மொழி ஆதரவுத் திட்டத்தை வடிவமைத்துள்ளது; இதற்குப் பொருத்தமான பயிற்றுமுறைகளையும் பயிற்றுவளங்களையும் தயாரித்து வழங்கியுள்ளது.

## ஏ. பாடத்திட்ட அமலாக்கம்

| பாடத்திட்ட அமலாக்கம் | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| தொடக்கநிலை / பாடம் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| தமிழ் | 2024 | 2025 | 2026 | 2027 | 2028 | 2029 |
| உயர்தமிழ் | | | 2026 | 2027 | 2028 | 2029 |
| தாய்மொழி ஆதரவுத் திட்டம் | | | 2026 | 2027 | | |
| அடிப்படைத் தமிழ் | | | | | 2028 | 2029 |




# தமிழ் மொழிப்பாடக் கலைத்திட்டம்

## 1.1 தமிழ்மொழி கற்றல் கற்பித்தலுக்குரிய நோக்கங்கள்

தமிழ்மொழி கற்றல் கற்பித்தல் பின்வரும் இரண்டு நோக்கங்களை அடிப்படையாய்க் கொண்டுள்ளது:

- **கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய அடிப்படை மொழித்திறன்களோடு நடைமுறை வாழ்க்கையில் பெரிதும் பயன்படும் கருத்துப்பரிமாற்றத் திறன்களாகிய பேச்சுவழிக் கருத்துப்பரிமாற்றத் திறனிலும் எழுத்துவழிக் கருத்துப்பரிமாற்றத் திறனிலும் மாணவர்களுக்கு முறையாகப் பயிற்சியளித்தல்**

  – நம் மாணவர்கள் தம் மனத்தில் எழும் எண்ணங்களைத் தன்னம்பிக்கையுடன் பேச்சுவழியாகவும் எழுத்துவழியாகவும் வெளிப்படுத்தும் ஆற்றலைப் பெற்றிடச் செய்தல் வேண்டும். இது வாழ்க்கைக்கும் தொழிலுக்கும் தேவைப்படும் இன்றியமையாத திறனாகும்.

- **மரபுவழிக் கூறுகளையும் பண்பாட்டுக் கூறுகளையும் மாணவர்களுக்கு நன்கு விளக்குவதோடு நாட்டுருவாக்கத்திற்குத் தேவையான பண்புநலன்களையும் பண்பாட்டுக்கூறுகளையும் கைவரப்பெறச் செய்தல்**

  – சமூக உறுப்பினர்களுக்கிடையே நல்லுறவை வளர்ப்பதுடன் தனிநபர் ஒருவர் தம் பண்பாட்டு மரபுகளை உணர்ந்து போற்றுவதற்கும் மொழிக்கல்வி உதவுகிறது. மாணவர்கள் தம் பண்பாடு, வரலாறு, விழுமியங்கள் முதலியவற்றில் ஆழ்ந்த ஈடுபாடுகொண்டு போற்றுவதற்குத் தாய்மொழிக் கல்வி சிறந்தது.

### மொழித்திறன்களை ஒருங்கிணைத்தல்

நான்கு அடிப்படை மொழித்திறன்களோடு பேச்சுவழி, எழுத்துவழி ஆகிய கருத்துப்பரிமாற்றத் திறன்களையும் ஒருங்கிணைத்துக் கற்பிக்க வேண்டும். கொள்திறன்களாகிய கேட்டலையும் படித்தலையும் ஆக்கத்திறன்களாகிய பேசுதலையும் எழுதுதலையும் இயல்பாகவே ஒருங்கிணைத்துக் கற்பிப்பதுபோல் கருத்துப்பரிமாற்றத் திறன்களையும் ஒருங்கிணைத்துக் கற்பிக்க வேண்டும். அவ்வாறு கற்பிக்கும்போது, மாணவர்கள் இயல்பான கற்றல் சூழலில் தங்கள் மொழித்திறன்களை வளர்த்துக்கொள்வார்கள். அவ்வாறு அமையப்பெறும் மொழி கற்றல் நடவடிக்கைகள் ஆர்வமூட்டுவதாகவும் பயன்முனைப்புமிக்கதாகவும் விளங்கும்.

## பண்பாடும் விழுமியங்களும்

தாய்மொழிக் கல்வி என்பது மாணவர்களிடையே மொழித்திறன்களை வளர்ப்பதோடு மரபுவழிப் பண்புகளையும் அவர்களுக்கு ஊட்டுகின்றது; பண்பாட்டு அடையாளத்தையும் விழுமியங்களையும் அவர்களுக்கு உணர்த்துகின்றது. மாணவர்களின் அறிவுக்கும் அனுபவத்துக்கும் வயதுக்கும் ஏற்புடைய வகையில் கதைகள் வாயிலாகவும் அனுபவக்கல்வி வழியாகவும் அவர்களுக்கு இவற்றை வலியுறுத்துவது அவசியமாகும். இதனைப் படிப்படியாக நிறைவேற்றிட இப்பாடத்திட்டம் வழிகாட்டி உதவும்.

பின்வருவன விழுமியங்களை வலியுறுத்துவதற்குரிய நோக்கங்கள்:

மாணவர்கள் மதிப்பு, பொறுப்புணர்வு, மீளுந்தன்மை, நேர்மை, பரிவு, நல்லிணக்கம் முதலிய விழுமியங்களைப் பெற்று நல்ல பண்புநலன்கள் கொண்ட குடிமக்களாகத் திகழ்தல்

மாணவர்கள் தம் மரபுவழிச் சிந்தனைகளையும் பண்பாட்டுக் கூறுகளையும் புரிந்துகொண்டு நாட்டுருவாக்கத்திற்குத் தேவையான பண்புநலன்களைப் பெறச் செய்தல்


பிற இனத்தவரின் பண்பாட்டு மூலங்களையும் பழக்கவழக்கங்களையும் புரிந்துகொண்டு சமூக நல்லிணக்கத்தோடு நடந்துகொள்ளும் நல்லொழுக்கத்தை மாணவர்களிடையே வளர்த்தல்

மொழிப்பாடங்களில் விழுமியங்களைத் தனிப்படுத்திக் கற்பிக்காமல் பாட நடவடிக்கைகளுடன் ஒருங்கிணைத்துக் கற்பிக்கும் வழிமுறையை ஆசிரியர்கள் கையாள வேண்டும். மேலும், நற்பண்பு குடியியல் கல்விப் பாடங்கள் வாயிலாக அறிவுறுத்தப்படும் விழுமியங்களைத் தமிழ்ப் பாடங்களில் பொருத்தமான சூழலில் மீண்டும் வலியுறுத்த வேண்டும். மாணவர்களிடையே மொழியின்பால் ஈடுபாட்டை வளர்க்கவும் பண்பாட்டுணர்வை ஊட்டவும் இவை வழிவகுக்கும்.

## 1.2 தமிழ் மொழிப்பாடக் கலைத்திட்டம் 2024

2024-ஆம் ஆண்டில் அமலாக்கம் காணும் தொடக்கநிலைக்குரிய தமிழ் மொழிப்பாடக் கலைத்திட்டம் சில முக்கிய மேம்பாடுகளையும் புதிய கூறுகளையுங்கொண்டு திருத்தியமைக்கப்பட்டுள்ளது. **‘மகிழ்வுறக் கற்று மொழியைத் தன்னம்பிக்கையோடு பயன்படுத்துபவர்’** என்பதை மையமாகக் கொண்டமைந்துள்ளது இந்தப் புதிய மொழிப்பாடக் கலைத்திட்டம்.

### தொடக்கப்பள்ளித் தமிழ் மொழிப்பாடக் கலைத்திட்டப் பணிச்சட்டம்




**கற்றல் விளைவுகள்**

**தொடக்கநிலை**
மாணவர்கள் தங்கள் வயதிற்கும் அனுபவத்திற்கும் ஏற்புடைய பனுவல்களைக் கேட்டும் பார்த்தும் புரிந்துகொள்வர்; பேச்சுத்தமிழில் சரளமாக உரையாடுவர்; வயதிற்குப் பொருத்தமான பனுவல்களைப் படிப்பர்; தங்கள் அனுபவத்திற்கு ஏற்ற எளிய கட்டுரைகளை எழுதுவர்; பேச்சுவழியாகவும் எழுத்துவழியாகவும் கருத்துப்பரிமாறிக்கொள்வர். பண்பாடு தொடர்பான செய்திகளைப் புரிந்துகொள்வர்.

**உயர்நிலை**
மாணவர்கள் தங்கள் வயதிற்கும் அனுபவத்திற்கும் ஏற்புடைய பல்வகையான பனுவல்களைக் கேட்டும் பார்த்தும் தங்கள் புரிந்துணர்வை வெளிப்படுத்துவர். சூழலுக்கேற்பப் பேச்சுத்தமிழிலும் எழுத்துத்தமிழிலும் சரளமாகவும் பிறர் புரிந்துகொள்ளும்படியும் தன்னம்பிக்கையோடு பேசுவர்; கருத்துப்பரிமாறிக்கொள்வர். கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள், சமூக ஊடகச் செய்திகள் முதலானவற்றைப் படிப்பதோடு தங்களுடைய கருத்துகளைப் பல்வேறு வடிவங்களில் வெளிப்படுத்துவர்; பேச்சுவழியாகவும் எழுத்துவழியாகவும் கருத்துப்பரிமாற்றத்தைத் தொடங்கவும் தொடர்ந்து நிகழ்த்தவும் பொருத்தமான முறையில் நிறைவுசெய்யவும் அறிந்திருப்பர். பண்பாடு தொடர்புடைய செய்திகளைப் புரிந்துகொண்டு அவற்றைப் போற்றிப் பாராட்டுவர்.

**புகுமுக வகுப்பு**
மாணவர்கள் தங்கள் வயதிற்கும் அனுபவத்திற்கும் ஏற்ற பல்வகையான பனுவல்களைக் கேட்டும் பார்த்தும் தங்கள் புரிந்துணர்வை வெளிப்படுத்துவர். சூழலுக்கேற்பப் பேச்சுத்தமிழிலும் எழுத்துத்தமிழிலும் சரளமாகவும் தெளிவாகவும் பேசுவர்; திறம்படக் கருத்துப்பரிமாறிக்கொள்வர். கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள், சமூக ஊடகச் செய்திகள் முதலியவற்றைப் படிப்பதோடு அவை தொடர்பான கருத்துகளைப் பல்வேறு வடிவங்களில் வெளிப்படுத்துவர்; திறனாய்வுக் கண்ணோட்டத்துடன் ஆராயவும் அறிந்திருப்பர். பேச்சுவழியாகவும் எழுத்துவழியாகவும் நிகழும் கலந்துரையாடலில் பிறரின் கருத்துகளை வெவ்வேறு கோணங்களில் சீர்தூக்கிப் பார்த்துத் தம் கருத்துகளைப் பகிர்ந்துகொள்வர். தமிழ்ப் பண்பாட்டைப் போற்றிப் பாராட்டுவதோடு பிற இனப் பண்பாட்டோடு ஒப்புநோக்கிப் பார்க்கவும் அறிந்திருப்பர்.

**வீடு**

**இலக்கு**
சிங்கப்பூர் மாணவர்களிடையே தமிழை வாழும் மொழியாக்குதல்

**சமூகம்**

## தொடக்கப்பள்ளித் தமிழ் மொழிப்பாடக் கலைத்திட்டக் கூறுகள்

மொழிப்பாடக் கலைத்திட்டப் பணிச்சட்டத்தில் பாடத்திட்டமும் கற்பித்தல் முறைமையும் மதிப்பீடும் மொழிக் கல்விக்கு இன்றியமையாத கூறுகளாக அமைகின்றன. மாணவர்கள் தமிழ்மொழியைத் திறம்படப் பயன்படுத்த வேண்டுமெனில் பாடத்திட்டம் நெகிழ்வுத்தன்மைமிக்கதாகவும் கற்பித்தல் முறைமை ஆர்வமூட்டக்கூடியதாகவும் மதிப்பீடு அர்த்தமுள்ளதாகவும் அமைதல் அவசியம்.

### பாடத்திட்டம்

தமிழ் பயிலும் மாணவர்கள் பலதரப்பட்ட மொழிப்புழக்கமுள்ள வீட்டுச் சூழல்களிலிருந்து வருகின்றனர். மாணவர்களது மொழித்திறனிலும் வேறுபாடு இருப்பதை ஆய்வறிக்கையும் புள்ளிவிவரங்களும் தெளிவாகக் காட்டுகின்றன. இவற்றைக் கருத்திற்கொண்டு எல்லா மாணவர்களின் தேவைகளையும் நிறைவுசெய்யும் வகையில் இப்பாடத்திட்டம் நெகிழ்வுத்தன்மைமிக்கதாக வரையப்பட்டுள்ளது. இந்நெகிழ்வுத்தன்மை மாணவர்கள் தமிழை மகிழ்வுறக் கற்கவும் தன்னம்பிக்கையுடன் பயன்படுத்தவும் வழிவகுக்கும். மாணவர்கள் அச்சமின்றித் தங்கள் கருத்துகளைப் பரிமாறிக்கொள்வதோடு தயக்கமின்றி நண்பர்களோடும் சமூகத்தினரோடும் தமிழில் கலந்துரையாடும் திறனையும் வளர்த்துக்கொள்வர். இதன்மூலம் பள்ளியில் மட்டுமின்றிப் பள்ளிக்கு அப்பாலும் தமிழ்மொழியின் புழக்கத்தை அதிகரித்துச் சிங்கப்பூரில் தமிழை வாழும் மொழியாக நிலைத்திருக்கச் செய்ய இப்பாடத்திட்டம் துணைபுரியும்.

### கற்பித்தல் முறைமை

தமிழ்மொழி கற்றல் என்பது மாணவர்களுக்கு இனிய அனுபவமாக அமைய வேண்டும். அதற்கு ஏற்புடைய வகுப்பறைச் சூழலை உருவாக்கி ஆர்வமூட்டும் வகையில் கற்பித்தல் நிகழ்த்தப்பட வேண்டும். ஆர்வமூட்டும் கற்பித்தல் நடந்தேறுவதற்கு அர்த்தமுள்ள மொழி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அத்தகு மொழி நடவடிக்கைகள், மாணவர்கள் தம் அன்றாட வாழ்க்கையோடு தொடர்புபடுத்தக் கூடியவையாக அமைவது அவசியம். மாணவர்களின் தேவைகளையும் திறன்களையும் அறிந்து பல்வேறுபட்ட பயன்முனைப்புமிக்க கற்பித்தல் உத்திகளைப் பயன்படுத்தி ஆசிரியர் கற்பிக்க வேண்டுவது அவசியமாகிறது. அப்போதுதான் மாணவர்கள் தமிழ்மொழி கற்றலில் ஆர்வமும் ஈடுபாடும் கொள்வர். பள்ளியிலும் பள்ளி வாழ்க்கைக்கு அப்பாலும் தமிழ்மொழிப் புழக்கம் தடையின்றி நடைபெற வேண்டுமெனில் மாணவர்களுக்குத் தமிழ்மொழி கற்றல் மகிழ்வுறும் அனுபவமாக அமைதல் அவசியம்.

### மதிப்பீடு

மொழிப்பாடக் கலைத்திட்டத்தை வழிநடத்தும் முக்கியத் தூண்களுள் ஒன்று மதிப்பீடு. பாடத்திட்டம், பயிற்றுமுறை ஆகியவற்றோடு ஒருங்கிணைந்து இயங்கக்கூடிய இன்றியமையாத கூறாக அர்த்தமுள்ள மதிப்பீடு அமைகிறது. இது மாணவர்களது கற்றல் இடைவெளிகளை அடையாளங்காணவும் கற்றலில் அவர்கள் பெறும் தேர்ச்சிநிலையை முறையாகக் கண்டறிந்து கற்பித்தலை மேம்படுத்தவும் உதவும். மதிப்பீடானது மாணவரை மையப்படுத்தி அமைதல் அவசியம். அவ்வாறு அமையும் மதிப்பீடு சுய மதிப்பீட்டுக்கு வழிவகுத்து மாணவரைத் தம் கற்றலுக்குப் பொறுப்பேற்கச் செய்யும்.

## வழிகாட்டு கூறுகள்

இந்தப் புதிய மொழிப்பாடக் கலைத்திட்டம் பின்வரும் ஆறு வழிகாட்டு கூறுகளை அடிப்படையாய்க் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

### ஆறு வழிகாட்டு கூறுகள்

**தனிப்பயனாக்கப் பாடப்பொருள்களை இணைத்தல்**

மாணவர்களின் வேறுபட்ட தொடங்குநிலைகளுக்கேற்பவும் அவர்களின் கற்றல் தேவைகளைக் கருத்திற்கொண்டும் தனிப்பயனாக்க மொழிப்பாடக் கலைத்திட்டத்தை வடிவமைத்தல்

**திறன்களை வலுப்படுத்துதல்**

தம்மினமும் பல்லினமும் சார்ந்த பண்பாட்டுப் புரிந்துணர்வோடு நல்லொழுக்கத்தைக் கொண்ட தன்னம்பிக்கைமிக்க தாய்மொழித் திறனாளர்களாக உருவாக மாணவர்களது மொழித்திறன்களையும் 21-ஆம் நூற்றாண்டுத் திறன்களையும் வளர்த்தல்

**கற்றலை வலுப்படுத்துதல்**

மாணவர்களின் கற்றலை வகுப்பிலும் வகுப்பிற்கு அப்பாலும் வலுப்படுத்தும் விதமாக அவர்களின் மொழியறிவையும் (எ-டு: சொல்வளம், வாக்கிய அமைப்பு) திறன்களையும் மேம்படுத்துதல்

**மாணவர்களுக்கு உரிமையளித்தல்**

மொழி கற்றல் மாணவர்களுக்குப் பயன்மிக்கதாகவும் அர்த்தமுள்ளதாகவும் அமைய முறைசாரா மதிப்பீட்டுச் செயல்முறையை மேம்படுத்தி மாணவர்களைத் தம் கற்றலுக்குப் பொறுப்பேற்கச் செய்தல்

**மகிழ்வுறு கற்றலைத் தூண்டுதல்**

மகிழ்வுறு கற்றல் என்பது தாய்மொழி கற்றல் கற்பித்தலின் மையமாக இருப்பதை உறுதிப்படுத்திக்கொள்வதோடு, மாணவர்கள் உள்ளார்ந்த ஊக்கத்துடன் கற்கும் வகையில் மொழியின் பயன்பாட்டை வகுப்பறையிலும் அதற்கு அப்பாலும் விரிவுபடுத்துதல்


**மாணவர்களது கருத்துகளுக்கு மதிப்பளித்தல்**

கற்றல் கற்பித்தல் முறைமைகளை மேம்படுத்துவதன்வழி, மாணவர்களின் கற்றல் ஆர்வத்தை ஊக்குவித்தல். குறிப்பாக, ஆக்கத்திறன்களுள் ஒன்றாகிய பேச்சுத் திறனில் ஈடுபாட்டை அதிகரிக்க மாணவர்களின் கருத்துகளுக்கு மதிப்பளித்தல்

## மகிழ்வுறக் கற்று மொழியைத் தன்னம்பிக்கையோடு பயன்படுத்துபவர்

**மொழிப்பாடக் கலைத்திட்டம்:**

- திறன்நோக்குடையது
- அர்த்தமுள்ள விளையாட்டு வளங்கள் நிறைந்தது
- நடைமுறைக்கேற்ற சூழமைவுகளைக் கொண்டது
- பலதரப்பட்ட பயிற்றுவளங்கள் நிறைந்தது
- பண்பாட்டறிவைக் கண்டறியத் தூண்டுவது
- நிறைவான தொழில்நுட்பப் பயன்பாடு கொண்டது
- அனுபவ அறிவு சார்ந்தது




**மகிழ்வுறு கற்றல்:**

- அறிவார்வத்தைத் தூண்டத்தக்கது
- அர்த்தமுள்ள நடவடிக்கைகளைக் கொண்டது
- கற்றலுக்குப் பொறுப்பேற்கச் செய்வது
- சவால்மிக்க பணிகளில் ஈடுபடுத்துவது
- மனநிறைவு அளிப்பது

**தன்னம்பிக்கைமிக்க மாணவர்:**

- உற்சாகத்தை வெளிப்படுத்துவார்
- மகிழ்வுடன் பங்கெடுப்பார்
- கற்றவற்றைப் பயன்படுத்துவார்
- பாடப்பொருளைத் தொடர்புபடுத்திப் பார்ப்பார்
- அறிவார்வத்தோடு செயற்படுவார்
- மொழியை விரும்பிக் கற்பார்
- கற்றலை மகிழ்ந்து அனுபவிப்பார்

## 1.3 முக்கியக் கூறுகளும் முனைப்புகளும்

தாய்மொழி கற்றல் கற்பித்தலின் மையமாக மகிழ்வுறு கற்றல் அமைகிறது. இது கற்றலில் மாணவர்களின் உள்ளார்ந்த ஊக்கத்தை அதிகரிப்பதோடு மொழியை வகுப்பறைக்கு அப்பாலும் பயன்படுத்த ஊக்குவிக்கும். இவ்வாறு மாணவர்களின் பல்வேறு தொடங்குநிலைகளைப் புரிந்துகொண்டு, பாடப்பொருளை அவர்களின் கற்றல் தேவைகளுக்கு ஏற்றவாறும் நடைமுறைச் சூழலுக்குப் பொருந்துமாறும் அமைக்கப் புத்தாக்க முயற்சியாகச் சில புதிய கூறுகளும் முனைப்புகளும் இம்மொழிப்பாடக் கலைத்திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளன.


### 1 பல்லினப் பண்பாட்டறிவை வளப்படுத்திப் போற்றிப் பாராட்டச் செய்தல்

பண்பாட்டறிவும் அது தொடர்பான புரிந்துணர்வுங்கொண்ட மாணவர்களை உருவாக்க வேண்டும் என்னும் நோக்கில், 21-ஆம் நூற்றாண்டுத் திறன்களில் குறிப்பாகப் பல்லினப் பண்பாட்டுப் படிப்பறிவு, நுண்ணாய்வுச் சிந்தனைத் திறன், படைப்பாக்கச் சிந்தனைத் திறன் ஆகியவற்றைப் புதிய பாடத்திட்டம் பெரிதும் வலியுறுத்துகின்றது. இதன்மூலம், மாணவர்கள் வலுவான மொழித்திறன்களை வெளிப்படுத்துவதோடு நற்பண்பு குடியியல் பாடத்தில் வலியுறுத்தப்படும் கற்றல் பண்பியல்புகளையும் நுண்திறன்களையும் புலப்படுத்துவார்கள். பாடங்களுக்குப் பொருந்துகின்ற வகையில் பிற பண்பாட்டுக் கூறுகளை ஒருங்கிணைத்துக் கற்பிப்பதும் அவற்றைப் பற்றிய கலந்துரையாடல்களை மேற்கொள்வதும் தமிழ்மொழி கற்றலை வளப்படுத்தும்.

மாணவர்களைப் பிற சமூகப் பண்பாடு, சமயம் குறித்த கூருணர்வும் விழிப்புணர்வும் பெற்றவர்களாகவும் உலக நடப்புகளில் அக்கறை காட்டுபவர்களாகவும் நற்பண்புகளை நன்கு வெளிப்படுத்துபவர்களாகவும் துடிப்பான சமூக வாழ்வியல் நெறிகளைப் பெற்று விளங்குபவர்களாகவும் உருவாக்க, ஆசிரியர்கள் வகுப்பறைகளில் அவை தொடர்பான கலந்துரையாடல்களை வழிநடத்த வேண்டும். மேலும், மாணவர்களின் பின்புலத்தை மனத்திற்கொண்டு தேவையான அளவு பண்பாட்டுச் செய்திகளை ஒருங்கிணைத்துக் கற்பிப்பது அவசியம். இத்துடன், நுண்ணாய்வுச் சிந்தனையையும் படைப்பாக்கச் சிந்தனையையும் மாணவர்களிடையே வலுப்படுத்துவதன்வழியே புதியனவற்றை அறிந்துகொள்ளும் முனைப்பையும் அவற்றைப்பற்றிச் சிந்தித்துக் கருத்துகளைப் பரிமாறிக்கொள்ளும் திறனையும் படைப்பாக்கத் திறனையும் மேம்படுத்த இயலும். இதன்வழி மாணவர்கள் தாய்மொழியைத் திறம்படப் பயன்படுத்துபவர்களாகவும் தற்சிந்தனை ஆய்தல் வாயிலாக விழிப்புணர்வும் சுயசிந்தனைக் கட்டுப்பாடும் கொண்டவர்களாகவும் விளங்குவார்கள்.

### 2 மாணவர்கள் கற்றலில் ஆர்வங்கொள்ள உதவும் வழிகாட்டுதலுடன் கூடிய பன்முனைப்பாங்கு அணுகுமுறையை வலியுறுத்துதல்

வழிகாட்டுதலுடன் கூடிய பன்முனைப்பாங்கு அணுகுமுறை என்பது மாணவர்களின் பல்வேறு கற்றல் பின்புலத்தையும் ஆர்வநிலையையும் கருத்திற்கொண்டு அவர்கள் தொடக்கநிலைமுதல் மேல்நிலைவரை படிப்படியாக முன்னேறிச் செல்ல வழிவகுக்கிறது. பல்வேறு பாங்குகள் கொண்டமைந்த கற்றலின் வாயிலாக மாணவர்கள் தங்கள் மொழித்திறன்களை வளர்த்துக்கொள்ளும் வகையில் பாடங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. உரையாடல்வழிக் கற்பித்தல் என்னும் உத்திமுறை இப்பாடத்திட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இது மாணவர்களது பேசுதல், சிந்தித்தல், படித்தல் திறன்களை வளர்க்கவும் வலுப்படுத்தவும் உதவும்.




ஒரு மாணவர் மேற்காணும் வழிகளில் தம் கற்றலை ஆழப்படுத்திக்கொள்ளலாம். அதற்கேற்ப மாணவர்களின் பல்வேறு கற்றல் தேவைகளை நிறைவேற்றும் நோக்கத்தில் புதிய பாடவளங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, மாணவர்களின் படித்தல் திறனை வலுப்படுத்தப் பன்முனைப்பாங்கு அணுகுமுறையைப் பின்பற்றுவது பயனளிக்கும். மாணவர்களின் கற்றல் திறன்களுக்கேற்பவும் தேவைகளுக்கேற்பவும் வெவ்வேறு வடிவங்களிலும் வகைமைகளிலும் அமைந்த கதைப்புத்தகங்களைத் தேர்ந்தெடுத்து ஆசிரியர் வழிகாட்ட வேண்டும்.


## 3 மாணவர்களது நாட்டங்களுக்கேற்ப நடைமுறை சார்ந்த சூழமைவுகளையும் வளங்களையும் விரிவாக்குதல்

மாணவர்கள் விரும்பக்கூடிய நடைமுறைக்கேற்ற சூழல்களைக்கொண்ட பலதரப்பட்ட பனுவல்களைப் புதிய பயிற்றுவளங்களில் காணலாம். மாணவர்கள் விரும்பும் தலைப்புகளில் பரந்துபட்ட பனுவல்வகைகள் நடைமுறைச் சூழல்களில் வரையப்பட்டுள்ளன. (எ-டு: மாணவர்கள் எளிதில் தொடர்புபடுத்தக்கூடிய தலைப்புகளாகிய இயற்கை, அறிவியல், தொழில்நுட்பம், கலைகள் முதலியவை சார்ந்த பாடங்கள் இடம்பெறும். மேலும், உணவுப்பட்டியல், இணையவழிக் கருத்தாய்வு, இணையப் பதிவுகள், வரைபடங்கள் முதலிய பரந்துபட்ட வடிவங்களில் பனுவல்வகைகள் அமையும்.) மாணவர்களின் வாழ்க்கையோடு தொடர்புடைய பனுவல்கள் (எ-டு: அறிவிப்புகள், சுவரொட்டிகள், விளம்பரங்கள்) அவர்களைக் கற்றலில் ஈடுபாடுகொள்ளச் செய்வதுடன் அவர்களது மொழித்திறன்களை வளர்ப்பதற்கும் உதவும்.

## 4 தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தின் வாயிலாக வேறுபடுத்தப்பட்ட கற்பித்தல் அணுகுமுறை, கணினி விளையாட்டுகள் ஆகியவற்றின் பயன்பாட்டை அதிகரித்தல்

விளையாட்டுவழியே பாடத்தை வழிநடத்தும்போது மகிழ்வுறு கற்றல் அனுபவத்தை ஆசிரியர்களால் மாணவர்களுக்கு எளிதில் சேர்க்க இயலும். இது பயன்முனைப்புமிக்க வகையில் மாணவர்களின் கற்றலை ஆழப்படுத்த உதவும். பாரம்பரிய விளையாட்டுகள், சொல் விளையாட்டுகள் முதலியவை தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்படும்போது அவை மாணவர்களைப் பெரிதும் கவரும். மாணவர்களுக்கு உள்ளார்ந்த ஊக்கத்தையும் தன்முனைப்பையும் வழங்குவதோடு தன்னம்பிக்கையை அளித்து அவர்களின் பங்கேற்பை அதிகரிக்கவும் உதவும். மேலும், அவை மாணவர்கள் தங்கள் கற்றல் நிலைகளைப் புரிந்துகொள்ளவும் கற்றலை மேம்படுத்திக்கொள்ளவும் உதவும்.

## 1.4 நற்பண்பு குடியியல் கல்விப் (தாய்மொழி) பாடங்களோடான ஒருங்கிணைப்பு




தமிழ்மொழிப் பாடங்கள், நற்பண்பு குடியியல் கல்விப் (தாய்மொழி) பாடங்கள் இரண்டும் வரையறுத்துள்ள கற்றல் விளைவுகளை அடைய அவற்றில் இடம்பெற்றுள்ள பண்பாட்டுக் கதைகள், பாடல்கள், பழமொழிகள் முதலியவை துணைபுரிகின்றன. இதன்மூலம் அவ்விரு பாடங்களும் மாணவர்களுக்கு விழுமியங்களை வெளிப்படையாகக் கற்பிக்க ஒன்றோடொன்று தொடர்புடையவையாக இருக்கும். மேலும், தமிழ்மொழிப் பாடங்களைக் கற்பிக்கும்போது நிகழும் கற்பிக்கத்தகு தருணங்களின் வாயிலாகவும் குழுக் கலந்துரையாடலின்போதும் பிறருடன் இணக்கமாக ஒன்றிணைந்து செயற்படுதல், பன்முகப்பார்வையை மதித்தல், கூருணர்வோடு நடந்துகொள்ளுதல் ஆகியவற்றை மீண்டும் வலியுறுத்த வாய்ப்புகள் அமையும்.

## 1.5 சிறப்புக் கல்வித் தேவையுள்ள மாணவர்களுக்குரிய ஆதரவு

மாணவர்கள் அனைவரையும் உள்ளடக்கும் கல்விமுறையை உருவாக்குவதே கல்வி அமைச்சின் தொலைநோக்காகும். அதனால், கல்வி அமைச்சு சிறப்புக் கல்வித் தேவையுள்ள மாணவர்களுக்கும் ஆதரவு வழங்கி, எல்லா மாணவர்களுக்கும் கற்றல் வாய்ப்புகளைச் சமமாக வழங்குகிறது.

**ஒவ்வொரு பிள்ளையாலும் கற்க முடியும்**

சிறப்புத் தேவையுள்ள பிள்ளைகள் தங்கள் முழுமையான ஆற்றலை அடைவதற்கு உரிய நேரத்தில் பொருத்தமான ஆதரவைப் பெறுவர்.

**ஒவ்வோர் ஆசிரியரும் திறன்மிக்கவர்**

சிறப்புத் தேவையுடைய மாணவர்களுக்கு மட்டுமின்றிப் பல்வேறுபட்ட கற்றல் தேவையுடைய மாணவர்களுக்கும் வேண்டிய ஆதரவை வழங்குவதற்கும் பேணி வளர்ப்பதற்கும் ஆசிரியர்கள் திறன்பெற்றிருப்பர்.

**ஒவ்வொரு பள்ளியும் அனைவரையும் உள்ளடக்கும் பண்பாட்டைக் கொண்டிருக்கும்**

சிறப்புக் கல்வித் தேவையுள்ள மாணவர்கள் உட்பட பல்வேறுபட்ட கற்றல் தேவையுடைய மாணவர்களுக்கு ஆதரவு வழங்கும் முழுப் பள்ளி அணுகுமுறையை ஒவ்வொரு பள்ளியும் கொண்டிருக்கும்.

எல்லா மாணவர்களுக்கும் வாய்ப்புகள் வழங்கும் வண்ணம் தமிழ்ப் பாடங்களை ஆசிரியர்கள் வடிவமைத்துக் கற்பிப்பது மிகவும் அவசியமாகும்.

சிறப்புக் கல்வித் தேவையுள்ள மாணவர்களுக்குரிய ஆதரவு குறித்து மேலும் விவரங்கள் அறிய, SEN:se Online Community@Opal2.0 என்னும் இணைப்பைப் பார்க்கவும்.




# பாடப்பொருள்

## 2.1 கற்றல் களங்கள்

இப்பாடத்திட்டத்தில் கற்பிக்கப்படும் பாடங்கள் நான், குடும்பம், பள்ளி, சமூகம், நாடு, உலகம் என்னும் களங்களின் அடிப்படையில் அமைந்துள்ளன. குறிப்பிட்ட களத்தில் மாணவர்களின் சொல்வளத்தைப் பெருக்க இது ஏற்புடைய சூழலை அமைத்துத் தரும். களங்களின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்ட பாடங்கள் மாணவர்களின் வயதுக்கும் அனுபவத்திற்கும் ஏற்ப அமைந்திருக்கும். ஆசிரியர் பொருத்தமான களம், தலைப்பு, நடவடிக்கைகள், பயிற்றுகருவிகள் முதலியவற்றைத் தேர்ந்தெடுத்து மாணவர்களின் தேவைகளுக்கேற்பப் பாடங்களை நடத்த வேண்டும். பின்வரும் அட்டவணையில் தமிழ் கற்றல் கற்பித்தலுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஆறு களங்களும் அவற்றிற்குரிய துணைக்களங்களும் இடம்பெற்றுள்ளன.

| களங்கள் | துணைக்களங்கள் |
|---|---|
| **நான்** | • தோற்றம்<br>• விருப்பு வெறுப்புகள்<br>• பொழுதுபோக்குகள்<br>• எண்ணங்கள், உணர்வுகள்<br>• நல்லொழுக்கம், விழுமியங்கள்<br>• பழக்கவழக்கங்கள்<br>• உடல்நலமும் மனநலமும் |
| **குடும்பம்** | • குடும்ப உறுப்பினர்கள்<br>• குடும்பப் பிணைப்புகள்<br>• குடும்பக் கொண்டாட்டங்கள்<br>• கடமைகளும் பொறுப்புகளும் |
| **பள்ளி** | • பள்ளியின் சுற்றுப்புறம்<br>• பள்ளி விதிமுறைகள்<br>• பள்ளி நடவடிக்கைகள்<br>• பள்ளிக் கொண்டாட்டங்கள்<br>• பள்ளி முதல்வர், ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள் ஆகியோருடனான உறவு<br>• நண்பர்களைத் தெரிவுசெய்தல் |

| | |
|---|---|
| **சமூகம்** | • அண்டை அயலார் உறவு<br>• அக்கம்பக்க வசதிகள்<br>• சமூக நன்னெறிப் பண்புகள்<br>• இன/மத நல்லிணக்கம்<br>• பாரம்பரிய விழாக்கள்<br>• சமூக சேவை |
| **நாடு** | • நாட்டுப்பற்று<br>• சட்டதிட்டங்கள்<br>• தேசிய நிகழ்வுகள்<br>• முழுமைத் தற்காப்பு<br>• நாட்டுநடப்பு<br>• வரலாற்றுச் செய்திகள்<br>• நாட்டுத் தலைவர்கள்<br>• தேசிய சின்னங்கள்<br>• வேலை வாய்ப்புகள்<br>• தேசிய இயக்கங்கள் |
| **உலகம்** | • பன்னாட்டுக் கதைகள்<br>• அரசர்கள், கவிஞர்கள், புலவர்கள்<br>• அண்டை நாடுகள்<br>• உலகின் மனங்கவரும் இடங்கள்<br>• உலகப்புகழ் பெற்றவர்கள்<br>• உலகின் முக்கிய நிகழ்வுகள்<br>• அறிவியல், தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி<br>• கலைகள், நுண்கலைகள்<br>• இயற்கை<br>• ஊடகங்கள்<br>• உலக அமைதி<br>• உலகப் பொருளாதாரம்<br>• உலகச் சுகாதார நிறுவனம் |

## 2.2 தமிழ் எழுத்துகளைக் கற்பித்தல்

தமிழ்மொழி கற்றல் என்பது எழுத்துகளின் அறிமுகத்திலிருந்து தொடங்குகிறது. சிங்கப்பூர்த் தமிழ் மொழிப்பாடக் கலைத்திட்டம் எழுத்துகளின் அறிமுகத்தில் மாணவர்களுக்கு நல்ல அடித்தளத்தை உருவாக்கித் தருவதில் தனிக் கவனம் செலுத்துகிறது. உயிரெழுத்து, மெய்யெழுத்து, உயிர்மெய்யெழுத்து, ஆய்த எழுத்து எனத் தமிழ் எழுத்துகள் முறைப்படுத்திக் கற்பிக்கப்படுகின்றன.

### நேர்க்கோட்டு வரிவடிவமுறை

எழுத்துகளைக் கற்பிக்க நேர்க்கோட்டு வரிவடிவமுறையே சிங்கப்பூரில் பல ஆண்டுகளாகப் பின்பற்றப்பட்டு வருகிறது. எழுத்துகளைக் கற்றுக்கொள்வதோடு எளிதில் எழுதிப் பழகுவதற்கும் சொல்வளப் பெருக்கத்திற்கும் இம்முறை பயன்படுகிறது. இப்பாடத்திட்டத்திலும் நேர்க்கோட்டு வரிவடிவமுறையில் எழுத்துகளைக் கற்பிக்கும் நிலை தொடர்கிறது. ஒருங்கே நெடுங்கணக்கு வரிசைமுறையில் உயிரெழுத்துகள் ஒலிப்புநிலையில் தொடக்கத்திலேயே மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தப்படுகின்றன. உயிர்மெய்யெழுத்துகள், மெய்யெழுத்துகள் ஆகியவற்றின் அறிமுகத்திற்கு இடையே உயிரெழுத்துகளின் வரிவடிவமும் அவற்றைக் கொண்டமையும் சொற்களும் அறிமுகப்படுத்தப்படும்.

### தமிழ் எழுத்துகளைக் கற்பிப்பதற்குரிய கால அளவு

தமிழ்மொழிப் புழக்கம் அதிகமற்ற குடும்பப் பின்னணியிலிருந்து வருவோர் எண்ணிக்கையைக் கருத்திற்கொண்டு 2005-ஆம் ஆண்டு மறு ஆய்வின் முடிவில் தமிழ் எழுத்துகளைக் கற்பிப்பதற்கான கால அளவு 2 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டது. இந்நிலை 2024 பாடத்திட்டத்திலும் தொடர்கிறது.

### தமிழ் எழுத்துகளின் அறிமுகம்

1958-ஆம் ஆண்டுமுதல் 2015-ஆம் ஆண்டுவரை வெளிவந்த பாடத்திட்டங்களில் தமிழ் எழுத்துகளை அறிமுகப்படுத்திக் கற்பிக்கும் வரிசைமுறையில் தேவைக்கேற்பச் சில மாற்றங்கள் செய்யப்பட்டு வந்துள்ளன. அவற்றையெல்லாம் கவனமாகப் பரிசீலித்த பிறகு இப்பாடத்திட்டத்தில் பின்வரும் வரிசைமுறை பரிந்துரைக்கப்படுகிறது.

| தொடக்கநிலை 1 | தொடக்கநிலை 2 |
|---|---|
| ட, ட், டா, ப, ப், பா, ம, ம், மா | ‘ஊ’ உயிரெழுத்து |
| ர, ர், ரா,ச, ச், சா, க, க், கா | ஊகார உயிர்மெய்யெழுத்துகள் |
| த, த், தா, ந, ந், நா, வ, வ், வா | ‘எ’ உயிரெழுத்து |
| ‘அ, ஆ’ உயிரெழுத்துகள் | எகர உயிர்மெய்யெழுத்துகள் |
| ன, ன், னா | ‘ஏ’ உயிரெழுத்து |
| ண, ண், ணா | ஏகார உயிர்மெய்யெழுத்துகள் |
| ல, ல், லா, ள, ள், ளா, ழ, ழ், ழா | ‘ஐ’ உயிரெழுத்து |
| ய, ய், யா, ங, ங், ஙா | ஐகார உயிர்மெய்யெழுத்துகள் |
| ஞ, ஞ், ஞா, ற, ற், றா | ‘ஒ’ உயிரெழுத்து |
| ‘இ’ உயிரெழுத்து | ஒகர உயிர்மெய்யெழுத்துகள் |
| இகர உயிர்மெய்யெழுத்துகள் | ‘ஓ’ உயிரெழுத்து |
| ‘ஈ’ உயிரெழுத்து | ஓகார உயிர்மெய்யெழுத்துகள் |
| ஈகார உயிர்மெய்யெழுத்துகள் | ‘ஔ’ உயிரெழுத்து |
| ‘உ’ உயிரெழுத்து | ஔகார உயிர்மெய்யெழுத்துகள் |
| உகர உயிர்மெய்யெழுத்துகள் | ஆய்த எழுத்து |

இப்பாடத்திட்டத்தில் ட, ட், டா என நேர்க்கோட்டு வரிவடிவ வரிசைமுறையில் எழுத்துகள் அறிமுகப்படுத்தப்படுகின்றன. ஓர் எழுத்திற்கும் மற்றோர் எழுத்திற்கும் உள்ள நெருங்கிய வரிவடிவ ஒற்றுமையின் அடிப்படையில் ட, ப, ம என்ற வரிசையில் எழுத்துகள் தொடர்ந்து அறிமுகப்படுத்தப்படுகின்றன. ட, ட், ப, ப், ம, ம் எழுத்துகளின் அறிமுகத்தோடு டா, பா, மா என ஆகாரமேறிய உயிர்மெய்யெழுத்துகள் ஒருசீராகக் கற்பிக்கப்படும். இம்முறை குறில், நெடில் ஒலிப்பு வேறுபாட்டைத் தொடக்கத்திலேயே உணர்த்துவதோடு சொல்வளப் பெருக்கத்தை விரைவுபடுத்தி வாசிப்புப் பழக்கத்தை மாணவர்களிடையே ஊக்கப்படுத்தவும் உதவும்.

இப்பாடத்திட்டத்தில், 2015-ஆம் ஆண்டுப் பாடத்திட்டத்தைப் போலவே முதலில் அதிகப் புழக்கத்திலுள்ள எழுத்துகளைக் கற்பித்த பிறகு **அ, ஆ** ஆகிய உயிரெழுத்துகள் அறிமுகப்படுத்தப்படுகின்றன (மேலே உள்ள அட்டவணையைக் காண்க). ஏனைய உயிரெழுத்துகள், மெய்யெழுத்துகள், உயிர்மெய்யெழுத்துகள் மேற்குறிப்பிடப்பட்டுள்ள வரிசைமுறையில் படிப்படியாக அறிமுகப்படுத்தப்படும். எழுத்துகளின் அறிமுகத்திற்கு ஏதுவாக இசையுடன் கூடிய பாடல்கள் பயிற்றுவளங்களாக வழங்கப்படுகின்றன. இவற்றைப் பயன்படுத்தி மாணவர்கள் மனத்தில் எழுத்துகளின் ஒலிப்புநிலையை ஆழப் பதியச்செய்வதற்கு ஆசிரியர்கள் முயல வேண்டும். இவற்றைத் தொடர்ந்து ஒலி வேறுபாட்டை வலியுறுத்தும் பொருட்டு 'ன, ண, ல, ள, ழ' ஆகிய எழுத்துகள் கற்பிக்கப்படும்.

முதலாம் ஆண்டு இறுதிக்குள் மாணவர்களுக்கு 18 மெய்யெழுத்துகளும் அ, ஆ, இ, ஈ, உ ஆகிய 5 உயிரெழுத்துகளும் அவற்றைக்கொண்டு உருவாகும் உயிர்மெய்யெழுத்துகளும் கற்பிக்கப்படும். இரண்டாம் ஆண்டு ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ ஆகிய 7 உயிரெழுத்துகளும் ஏனைய உயிர்மெய்யெழுத்துகளும் ஆய்த எழுத்தும் கற்பிக்கப்படும்.

எழுத்துகளைக் கற்பிக்கத் துணைபுரியும் சில பயிற்றுவளங்கள் ஆசிரியருக்கு வழங்கப்படும். ஆசிரியர்கள் கூடுதல் நேரத்தை ஒதுக்கி உயிர்மெய்யெழுத்துகளை மிகச் சரியாக உச்சரிக்கக் கற்பிக்க வேண்டும். தொடக்கநிலையிலேயே இந்த எழுத்துகளைச் சரியான ஒலிப்புடன் கற்றுக்கொள்ளும் மாணவர்கள் பிற்காலத்தில் எழுத்துப்பிழையின்றி எழுதும் திறன் பெறுவர். அத்துடன் பிழையில்லாமல் வாசிப்பதற்கும் படிப்பனவற்றைச் சரியாகப் புரிந்துகொள்வதற்கும் இது அடித்தளமாக அமையும். ஷ, ஜ, ஹ, ஸ, ஸ்ரீ ஆகிய ஐந்து கிரந்த எழுத்துகள் தொடக்கநிலை மூன்றில் கற்பிக்கப்படும்.

மேலும் விவரங்கள் அறிய, ஆர்வமூட்டும் வகையில் எழுத்துகளை எழுதக் கற்பித்தல் என்னும் இணைப்பைப் பார்க்கவும்.

## 2.3 இலக்கணமும் மொழிமரபுகளும்

மொழிப்பாடம் என்பது திறன்சார்ந்த பாடம். மொழிப்பாடத்தில் பாடப்பொருளைவிட மொழித்திறன்களே சிறப்பிடம் பெறுகின்றன. மாணவர்கள் மொழித்திறன்களில் சிறந்து விளங்கப் போதிய இலக்கண அறிவு பெற்றிருத்தல் வேண்டும். மொழிப் பின்புலம் அதிகமற்ற மாணவருக்கு இலக்கணத்தை எளிமைப்படுத்திக் கற்பிக்க ஆசிரியர் பலவிதமான கற்பித்தல் அணுகுமுறைகளைக் கையாளலாம்.

தொடக்கநிலைப் பாடத்திட்டத்தில் தற்காலத் தேவை, பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் இலக்கணமும் மொழிமரபுகளும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இலக்கணக் கூறுகள் வகைப்படுத்தப்பட்டும் ஒன்றோடொன்று தொடர்புபடுத்தப்பட்டும் தரப்பட்டுள்ளன. இவற்றைத் தொடர் வாக்கியங்களிலும் சூழல் அடிப்படையிலும் வாசிப்புப் பனுவல்கள் வாயிலாகவும் கற்பித்தல் வேண்டும்.

### தொடக்கநிலை ஒன்றுமுதல் இரண்டுவரை

தொடக்கநிலை ஒன்று, இரண்டு ஆகிய இரு நிலைகளிலும் அடிப்படை மொழிக்கூறுகள் வகைப்படுத்திக் கற்பிக்கப்படும். மாணவர்களின் வயதுக்கும் அனுபவத்திற்கும் ஏற்ற சொற்களும் தொடர்களும் அறிமுகம் காணும். மாணவர்களுக்கு இலக்கணக் கூறுகள் வெளிப்படையாகக் கற்பிக்கப்படமாட்டா. கேட்டல்,

பேசுதல், படித்தல், பேச்சுவழிக் கருத்துப்பரிமாற்றம் முதலிய நடவடிக்கைகளின்மூலம் இலக்கணக் கூறுகள் பயன்பாட்டுநிலையில் மாணவர்களின் தேவைக்கேற்ப அறிமுகப்படுத்தப்படும். தொடக்கநிலை மூன்றாம் வகுப்புமுதல் எளிய இலக்கணக் கூறுகள் மாணவர்களின் வயதிற்கும் அனுபவத்திற்கும் ஏற்ற நிலையில் கற்பிக்கப்படும்.

**இலக்கணம், மொழிமரபுகள் பட்டியல் (தொடக்கநிலை 1 - 2)**
**– பின்னிணைப்பு 1-ஐ பார்க்கவும்**

### தொடக்கநிலை மூன்றுமுதல் ஆறுவரை

இலக்கணத்தையும் சொற்பயன்பாட்டையும் மொழிமரபுகளையும் கற்பிக்கும்போது பின்வருவனவற்றைக் கருத்திற்கொள்ள வேண்டும்.

- எளிமையிலிருந்து கடினத்திற்கும் அறிந்ததிலிருந்து அறியாததற்கும் செல்லுதல்
- விதி வருமுறையில் கற்பித்தல்
- மொழித்தேவையும் பயன்பாடும் கருதிக் கற்பித்தல்
- படங்கள், விளையாட்டுகள், கதைகள், தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் முதலிய வழிகளில் கற்பித்தல்
- அறிமுகம் கண்ட இலக்கணத்தையும் சொற்பயன்பாட்டையும் மொழிமரபுகளையும் பாடத்திருப்பத்தின்மூலம் மீண்டும் வலியுறுத்துதல்

தொடக்கநிலை 5, 6-இல் இடம்பெறும் இலக்கணமும் சொற்பயன்பாடும் மொழிமரபுகளும் தமிழ் பயிலும் மாணவர்களுக்கும் உயர்தமிழ் பயிலும் மாணவர்களுக்கும் பொதுவானவை.

**இலக்கணம், மொழிமரபுகள் பட்டியல் (தொடக்கநிலை 3 - 6)**
**– பின்னிணைப்பு 2-ஐ பார்க்கவும்**

## 2.4 செய்யுள், பழமொழிகள்

சொற்செறிவும் பொருட்செறிவும் ஓசையொழுங்கும் அமைய இயற்றப்படுவது செய்யுளாகும். செய்யுள் என்பது ஒரு கருத்தைப் பொருத்தமான சொற்களால் அழகுபடக் கூறுவது. செய்யுளில் வரும் சொற்கள் ஓசை நயமும் கருத்தாழமும் கொண்டு பொருள் பொதிந்த செய்திகளைப் படிப்பவர்களுக்கு உணர்த்துகின்றன. தமிழ்மொழியில் உள்ள எல்லா நீதி இலக்கியங்களும் செய்யுள் வடிவிலேயே அமைந்துள்ளன.

பெரியோரை மதித்தல், பெற்றோரைப் பேணுதல், நட்பைப் போற்றுதல், பிறருக்கு உதவுதல், செய்ந்நன்றி அறிதல், இன்னா செய்யாமை, விருந்தோம்பல் முதலான நம் பண்பாட்டுச் செய்திகளின் நிலைக்களனாக நீதி இலக்கியங்கள் திகழ்கின்றன. இவற்றுள் ஆத்திசூடி, உலகநீதி, கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை,

திருக்குறள், மூதுரை, நல்வழி முதலியவை குறிப்பிடத்தக்கவை. இவற்றில் உள்ள அறக்கருத்துகள் எக்காலத்திற்கும் பொருத்தமானவையாக, வாழ்க்கைக்கு இன்றியமையாதவையாக உள்ளன. எனவே, இவற்றை நம் மாணவர்களுக்கு உணர்த்துவது அவசியமாகும். இவை மாணவர்களின் பண்பு வளர்ச்சிக்கு உறுதுணையாக அமையும்.

இப்பாடத்திட்டத்தில் நம் மாணவர்களின் மொழிப் பின்புலத்தையும் சிங்கப்பூர்ச் சூழ்நிலையையும் கருத்திற்கொண்டு பொருத்தமான செய்யுள்களும் பழமொழிகளும் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. இவற்றை முறையாகக் கற்பிக்கவும் பொருளை உணர்த்தவும் கதைகள், நாடகங்கள், திரைப்படக் காட்சிகள், வாழ்வியல் சம்பவங்கள் முதலானவற்றைப் பயன்படுத்தலாம்.


**செய்யுள், பழமொழிகள் பட்டியல் (தொடக்கநிலை 2 - 6)**
**– பின்னிணைப்பு 3-ஐ பார்க்கவும்**

மேலும், விவரங்கள் அறிய, செய்யுள் கற்பித்தலில் பரிந்துரைக்கப்படும் படிநிலைகள் என்னும் இணைப்பைப் பார்க்கவும்.

## 2.5 மொழித்திறன்கள்

அடிப்படை மொழித்திறன்களுள் கேட்டலும் பேசுதலும் முதன்மையானவை. வாய்மொழித் திறன்கள் எனக் குறிக்கப்பெறும் இவற்றில் மாணவர்களுக்கு நல்ல அடித்தளம் அமைவது மொழி கற்றலுக்கு இன்றியமையாததாகும். இதனை அடியொற்றியே தமிழ் வகுப்பறைகளில் பேச்சுத்தமிழ் பெரிதும் ஊக்குவிக்கப்படுகின்றது. வாய்மொழித் திறன்களை நன்முறையில் வளர்த்துக்கொண்ட மாணவரே படித்தல் திறனையும் எழுதுதல் திறனையும் எளிதில் கைவரப்பெற இயலும். மொழித்திறன்களுள் கேட்டலும் படித்தலும் கொள்திறன்களாகும்; பேசுதலும் எழுதுதலும் ஆக்கத்திறன்களாகும்.

இன்றைய கல்விச் சூழலில், கருத்துப்பரிமாற்றத் திறன்களின் தேவையும் எதிர்பார்ப்பும் பெருகியுள்ளன. பேசுதல் திறனை வளர்க்கும் அதே வேளையில், பேச்சுவழிக் கருத்துப்பரிமாற்றத் திறனையும் வளர்க்க வேண்டியது அவசியமாகும். அது போலவே, எழுதுதல் திறனை வளர்க்கும்போதே, எழுத்துவழிக் கருத்துப்பரிமாற்றத் திறனையும் வளர்த்திட வேண்டும். இவ்விதம், கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல், பேச்சுவழிக் கருத்துப்பரிமாற்றத் திறன், எழுத்துவழிக் கருத்துப்பரிமாற்றத் திறன் என மொழித்திறன்கள் ஆறாகக் கருதப்பெறுகின்றன. இப்பாடத்திட்டம் இந்த ஆறு மொழித்திறன்களையும் மாணவர்களுக்குக் கற்பிக்கப் பரிந்துரைக்கிறது.




## ஒருங்கிணைக்கப்பெற்ற மொழித்திறன்கள்

மொழித்திறன்கள் தனித்து இயங்குவதில்லை. அன்றாட வாழ்க்கையிலும் இத்திறன்கள் ஒருங்கிணைந்த வகையிலேயே பயன்படுகின்றன. கேட்டல் திறனை மையமாகக்கொண்ட நடவடிக்கையில் பேசுதல் திறனும் இயல்பாகவே ஒருங்கிணைந்து வரும். அது போலவே, படித்தல் திறனோடு எழுதுதல் திறனை ஒருங்கிணைக்கலாம். இப்பாடத்திட்டம் ஒருங்கிணைக்கப்பட்ட மொழித்திறன்கள் சார்ந்த மொழி நடவடிக்கைகளையே பரிந்துரைக்கிறது. ஆறு மொழித்திறன்களையும் மொழி நடவடிக்கைக்கு உகந்தவாறு ஒருங்கிணைத்துக் கற்பிப்பதால் நிறைவான கற்றல் நிகழும். இவற்றோடு 21-ஆம் நூற்றாண்டுத் திறன்களையும் தேவைக்குத் தக்கவாறு ஆசிரியர்கள் ஒருங்கிணைத்துக் கற்பிக்க இப்பாடத்திட்டம் வழிகாட்டி உதவும்.

## கேட்டலும் நோக்கலும்

மொழி கற்றலில் கேட்டல் திறனே முதன்மை பெறுகிறது. அதுவே மற்றத் திறன் வளர்ச்சிக்கு வித்தாக அமைகிறது. கேட்டல் திறனில் நல்ல பயிற்சிபெறும் மாணவரால் பேசவும் படிக்கவும் எழுதவும் இயலும். நடைமுறை வாழ்வில் கேட்டலும் நோக்கலும் ஒருங்கே இடம்பெறுகின்றன. இவற்றை மனத்திற்கொண்டு மாணவர்களின் வேறுபட்ட திறன்களுக்கேற்பவும் மொழிப் பின்னணிக்கேற்பவும் பொருத்தமான கேட்டல் நடவடிக்கைகளை ஆசிரியர்கள் திட்டமிட்டு நடத்த வேண்டும்.

கேட்டல் நடவடிக்கைகளுக்குரிய பகுதிகளைத் தெரிவுசெய்யும்போது அவை மாணவர்களின் அறிவிற்கும் வயதிற்கும் அனுபவத்திற்கும் உட்பட்டவையாக இருக்கின்றனவா என்பதை உறுதிப்படுத்திக்கொள்வது நல்லது.

பொதுவாகக் கதைகள், பாடல்கள், உரையாடல்கள் முதலியவை மாணவர்களின் அடிப்படைக் கேட்டல் திறனை வளர்க்கத் துணைபுரிகின்றன.

சிற்றுரைகள், நேர்காணல் முதலான பல்வகைப் பகுதிகளை ஆசிரியர்கள் கேட்டல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தலாம்.

கருத்துப்பரிமாற்றம் பயன்முனைப்புமிக்க முறையில் நிகழ்ந்திடக் கேட்டலுடன் பேசுதல் திறனை ஒருங்கிணைத்தல் சிறப்பாகும். இவற்றோடு காட்சிக்கூறுகளைப் பார்க்கச் செய்தல் இந்தத் திறன்கள் மேலும் வலுப்பெற உதவும். ஒரு செய்தியை ஒலிவழியாகக் கேட்பதற்கும் காட்சிவழியாகப் பார்த்தறிந்து உணர்வதற்கும் அதிக வேறுபாடு உண்டு. காட்சிவழியாகக் கேட்டல் நடவடிக்கையை மேற்கொள்ளும்போது மாணவர்கள் தாம் செவியால் கேட்டவற்றையும் கண்ணால் பார்த்தவற்றையும் தம் முன்னறிவோடு தொடர்புபடுத்தி எளிதில் கருத்துப்பரிமாற்ற நடவடிக்கையில் தன்னம்பிக்கையோடு ஈடுபடுவர்.

வகுப்பறைக் கற்பித்தலின்போது பேச்சுத்தமிழ் மாணவர்களது மனத்தில் ஆழப் பதியும்படி கேட்டல் நடவடிக்கைகள் அமைதல் வேண்டும். மேலும், கேட்டல் நடவடிக்கைகளை வெறுமனே கேட்டதை நினைவுகூர்ந்து சொல்லும் நிலையினின்று வேறுபட்டுப் பொருள் விளக்கநிலையிலும் ஊகித்துணரும்நிலையிலும் அமைத்து மாணவர்களின் சிந்தனைத் திறனை வளப்படுத்தும் பயிற்சியாகவும் ஆசிரியர்கள் வடிவமைக்கலாம்.

கேட்டல், நோக்கல் ஆகிய திறன்களுக்குரிய கற்றல் கூறுகள் குறித்தும் அத்திறன்களை வளர்க்கப் பரிந்துரைக்கப்படும் சில வழிமுறைகள் குறித்தும் மேலும் விவரங்கள் அறிய, கற்றல் கூறுகள் என்னும் இணைப்பைப் பார்க்கவும்.

## கற்றல் அடைவுநிலைகள்

| எண் | கற்றல் அடைவுகள் | | | தமிழ் | | | | | | உயர்தமிழ் | | அடிப்படைத் தமிழ் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **கேட்டலும் நோக்கலும்** | | | | | | | | | | | | | |
| **மாணவர்கள் பல்வகையான கேட்டல், நோக்கல் வளங்களைக் கேட்டும் பார்த்தும் தக்க வகையில் புரிந்துணர்வை வெளிப்படுத்துவர்.** | | | | | | | | | | | | | |
| | கற்றல் விளைவுகள் | நுண்திறன்களும் வெளிப்பாடும் | | P1 | P2 | P3 | P4 | P5 | P6 | P5 | P6 | P5 | P6 |
| 1 | **எழுத்து, சொல், தொடர், கட்டளைகள் முதலியவற்றை வாய்மொழி, ஒலிப்பகுதி, ஒளிக்காட்சி முதலியவற்றின் வாயிலாகக் கவனமாகக் கேட்டும் பார்த்தும் தம் புரிந்துணர்வை வெளிப்படுத்துவர்.** | 1.1 | கட்டளைகளைக் கேட்டுத் தம் புரிந்துணர்வைத் தக்க வகையில் வெளிப்படுத்துதல். | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ |
| | | 1.2 | எழுத்து, சொல் ஆகியவற்றின் ஒலிப்பைக் கேட்டுத் தம் புரிந்துணர்வைத் தக்க வகையில் வெளிப்படுத்துதல். | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ |
| | | 1.3 | தொடர்களைக் கேட்டுத் தம் புரிந்துணர்வைத் தக்க வகையில் வெளிப்படுத்துதல். | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ |
| | | 1.4 | கூர்ந்து கேட்டும் உற்றுப் பார்த்தும் தம் புரிந்துணர்வைத் தக்க வகையில் வெளிப்படுத்துதல். | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ |
| | | 1.5 | ஒலிப்பு வேறுபாடு குறித்துத் தம் புரிந்துணர்வைத் தக்க வகையில் வெளிப்படுத்துதல். | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ |

## கேட்டலும் நோக்கலும்

**மாணவர்கள் பல்வகையான கேட்டல், நோக்கல் வளங்களைக் கேட்டும் பார்த்தும் தக்க வகையில் புரிந்துணர்வை வெளிப்படுத்துவர்.**

| எண் | கற்றல் அடைவுகள் | | | தமிழ் | | | | | | உயர்தமிழ் | | அடிப்படைத் தமிழ் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கற்றல் விளைவுகள் | நுண்திறன்களும் வெளிப்பாடும் | | P1 | P2 | P3 | P4 | P5 | P6 | P5 | P6 | P5 | P6 |
| 2 | **பாடல்கள், கதைகள், தகவல்கள் முதலியவற்றை வாய்மொழி, ஒலிப்பகுதி, ஒளிக்காட்சி முதலியவற்றின் வாயிலாகக் கவனமாகக் கேட்டும் பார்த்தும் தமது புரிந்துணர்வை வெளிப்படுத்துவர்.** | 2.1 | முன்னறிவோடு தொடர்புபடுத்தித் தம் புரிந்துணர்வைத் தக்க வகையில் வெளிப்படுத்துதல். | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ |
| | | 2.2 | அடுத்து வருவதை முன்னுரைத்துத் தம் புரிந்துணர்வைத் தக்க வகையில் வெளிப்படுத்துதல். | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ |
| | | 2.3 | ஒற்றுமை வேற்றுமைகளைக் கண்டறிந்து தம் புரிந்துணர்வைத் தக்க வகையில் வெளிப்படுத்துதல். | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ |
| | | 2.4 | மரபு, பண்பாடு, விழுமியம் சார்ந்த கூறுகளில் தம் புரிந்துணர்வைத் தக்க வகையில் வெளிப்படுத்துதல். | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ |
| | | 2.5 | காரண காரியத்துடன் தம் புரிந்துணர்வைத் தக்க வகையில் வெளிப்படுத்துதல். | | | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ |
| | | 2.6 | முடிவெடுக்கும் தம் திறனைத் தக்க வகையில் வெளிப்படுத்துதல். | | | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ |
| | | 2.7 | சான்றுகளைக்கொண்டு தம் புரிந்துணர்வைத் தக்க வகையில் வெளிப்படுத்துதல். | | | | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ |
| | | 2.8 | நுணுகி ஆராய்ந்து தம் புரிந்துணர்வைத் தக்க வகையில் வெளிப்படுத்துதல். | | | | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ |

## பேசுதல்

தொடர்புத்திறன் கேட்டலில் தொடங்கி, பேசுதல் திறனில் வளர்ச்சியடைகிறது. ஒரு மொழிக்கு அடிப்படையாக அமைவது பேச்சு. பேசப்படும் மொழிக்கே நீடித்த வாழ்வுண்டு. தமிழ்மொழி பேச்சுவழக்கு, எழுத்துவழக்கு என இரட்டை வழக்குடைய மொழியாகும். அன்றாட வாழ்க்கையில் ஒருவரோடு ஒருவர் தொடர்புகொள்ளப் பெரும்பாலும் பயன்படுவது பேச்சுவழக்கே. மாணவர்களின் மொழித்திறன்களுக்கு ஏற்ப அவர்களுக்குப் பேச்சுத்தமிழில் போதிய பயிற்சியை அளிப்பதோடு பேசிப் பழகுவதற்குரிய சூழல்களையும் வாய்ப்புகளையும் ஆசிரியர்கள் ஒருங்கே உருவாக்கித் தருவதில் முக்கியப் பங்களித்தல் வேண்டும்.

பேச்சுத்தமிழிலும் எழுத்துத்தமிழிலும் அமையப்பெற்ற பல்வேறு பனுவல்களை மாணவர்கள் கேட்டுக் கலந்துரையாடும் வகையில் கற்றல் கற்பித்தல் சூழல் அமைந்திருக்க வேண்டும்.

மாணவர்களின் வயதிற்கும் அனுபவத்திற்கும் ஏற்ற கதைகளைப் பகிர்ந்து அவற்றையொட்டிக் கலந்துரையாடல் இடம்பெறுமாறு செய்ய வேண்டும்.

பல்வேறு சூழல்களில் தெளிவாகவும் சரளமாகவும் தன்னம்பிக்கையுடனும் பேச்சுத்தமிழிலும் எழுத்துத்தமிழிலும் மாணவர்கள் பேசிப் பயிற்சிபெற வழிவகை செய்ய வேண்டும்.

முக்கியமாக இவ்விரு வழக்குகளுக்கிடையே உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை விளக்கி இவற்றிற்கிடையே உள்ள பாகுபாட்டினை மாணவர்களுக்கு ஆசிரியர் உணர்த்த வேண்டும்.

தமிழ்மொழியின் தனித்தன்மையைக் கட்டிக்காக்கப் பேச்சுத்தமிழில் பிறமொழிச் சொற்களைக் கலந்து பயன்படுத்தாதவாறு மாணவரை வழிநடத்திச் செல்ல வேண்டும். பேச்சுத்தமிழின் தாக்கம் எழுத்துத்தமிழில் இடம்பெறாதவாறும் கவனித்துக்கொள்ள வேண்டும். அதற்கு மாணவர்களுக்குத் தக்க பயிற்சியளிக்க வேண்டும்.

இவற்றை மனத்திற்கொண்டு பேசுதலுக்கான வகுப்பறைச் சூழலை அமைத்துக்கொடுப்பதோடு, ஆக்கபூர்வமான பேசுதல் நடவடிக்கைகளில் மாணவர்கள் அனைவரையும் வெற்றிகரமாக ஈடுபடுத்தும் உந்துசக்தியாக ஆசிரியர்கள் விளங்க வேண்டும்.

பேசுதல் திறனுக்குரிய கற்றல் கூறுகள் குறித்தும் அத்திறனை வளர்க்கப் பரிந்துரைக்கப்படும் சில வழிமுறைகள் குறித்தும் மேலும் விவரங்கள் அறிய, கற்றல் கூறுகள் என்னும் இணைப்பைப் பார்க்கவும்.

# கற்றல் அடைவுநிலைகள்

| பேசுதல் | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மாணவர்கள் பல்வேறு சூழல்களுக்கேற்பப் பேச்சுத்தமிழிலும் எழுத்துத்தமிழிலும் தெளிவாகவும் சரளமாகவும் தன்னம்பிக்கையுடனும் பேசுவர். | | | | | | | | | | | | | | |
| எண் | கற்றல் அடைவுகள் | | | தமிழ் | | | | | | உயர்தமிழ் | | அடிப்படைத் தமிழ் | |
| | கற்றல் விளைவுகள் | நுண்திறன்களும் வெளிப்பாடும் | | P1 | P2 | P3 | P4 | P5 | P6 | P5 | P6 | P5 | P6 |
| 1 | பல்வேறு சூழல்களுக்கேற்பத் தம் கருத்துகளைத் தயக்கமின்றிப் பேச்சுத்தமிழிலோ எழுத்துத்தமிழிலோ வெளிப்படுத்துவர். | 1.1 | தம் கருத்துகளைத் தயக்கமின்றி வெளிப்படுத்துதல். | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ |
| | | 1.2 | சூழல்களைப் (இடம், பொருள், ஏவல்) புரிந்துகொண்டு தம் கருத்துகளைத் தயக்கமின்றிப் பேச்சுவழி வெளிப்படுத்துதல். | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ |
| | | 1.3 | பேச்சுத்தமிழுக்கும் எழுத்துத்தமிழுக்கும் உள்ள வேறுபாட்டை அறிந்து பேசுதல். | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ |
| 2 | பல்வேறு சூழல்களுக்கேற்பச் சரியான உச்சரிப்புடனும் சொல்லழுத்தத்துடனும் தெளிவாகவும் சரளமாகவும் தன்னம்பிக்கையுடன் பேச்சுத்தமிழிலோ எழுத்துத்தமிழிலோ பேசுவர். | 2.1 | சரியான உச்சரிப்புடனும் சொல்லழுத்தத்துடனும் பேசுதல். | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ |
| | | 2.2 | தெளிவாகவும் சரளமாகவும் பேசுதல். | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ |
| | | 2.3 | சூழல்களுக்கேற்பப் பொருத்தமான சொற்களையும் தொடர்களையும் பயன்படுத்திப் பேச்சுத்தமிழிலோ எழுத்துத்தமிழிலோ தன்னம்பிக்கையோடு பேசுதல். | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ |
| | | 2.4 | தம் கருத்துகளை வெளிப்படுத்த எளிய வினாக்களை வினவுதல்; கேட்கப்படும் வினாக்களுக்கு விடையளித்தல். | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ |
| | | 2.5 | சூழல்களுக்கேற்பத் தம் கருத்துகளைத் தெளிவாகத் தொடர்புபடுத்திப் பேசுதல். | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ |

## பேசுதல்

**மாணவர்கள் பல்வேறு சூழல்களுக்கேற்பப் பேச்சுத்தமிழிலும் எழுத்துத்தமிழிலும் தெளிவாகவும் சரளமாகவும் தன்னம்பிக்கையுடனும் பேசுவர்.**

| எண் | கற்றல் அடைவுகள் | | | தமிழ் | | | | | | உயர்தமிழ் | | அடிப்படைத் தமிழ் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கற்றல் விளைவுகள் | நுண்திறன்களும் வெளிப்பாடும் | | P1 | P2 | P3 | P4 | P5 | P6 | P5 | P6 | P5 | P6 |
| 3 | **பல்வேறு சூழல்களுக்கேற்பக் கருத்துகளையும் உணர்வுகளையும் சிந்தனைகளையும் பயன்முனைப்புமிக்க வகையில் பேச்சுத்தமிழிலோ எழுத்துத்தமிழிலோ வெளிப்படுத்துவர்.** | 3.1 | சூழல்களுக்கேற்பத் தம் கருத்துகளைத் தெளிவாகத் தொடர்புபடுத்திப் பேசுதல். | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ |
| | | 3.2 | சூழல்களுக்கேற்பத் தம் உணர்வுகளையும் கருத்துகளையும் சிந்தனைகளையும் தக்க வகையில் வெளிப்படுத்துதல். | | | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ |
| | | 3.3 | கேட்டும், பார்த்தும், படித்தும் தம் புரிந்துணர்வைக் கேட்போர்க்கேற்பப் பொருள்படவும் நிரல்படவும் விளக்குதல். | | | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ |
| | | 3.4 | குறிப்பிட்ட கருப்பொருளில் முறையாகத் தொடங்கி, தொடர்ந்து, தேவையான இடங்களில் முக்கியமானவற்றை வலியுறுத்தி, நிறைவுசெய்து பேசுதல். | | | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | | |
| | | 3.5 | பொருத்தமான உரைக்குறிகளை (discourse markers) ஏற்புடையவாறு பயன்படுத்திப் பேசுதல். (எ-டு: குறிப்பாக, சரிதான், அப்படியா? நல்லது) | | | | | ★ | ★ | ★ | ★ | | |
| | | 3.6 | கருத்துகளைத் தக்க சான்றுகள் காட்டி வலியுறுத்திப் பேசுதல். | | | | | ★ | ★ | ★ | ★ | | |

## படித்தல்

ஒரு மொழியைத் தன்னம்பிக்கையுடன் பேசவும் எழுதவும் அம்மொழியில் சொல்வளத்தைப் பெருக்கிக்கொள்ளவும் படித்தல் திறன் அவசியமாகும். அச்சில் காணும் சொற்களைப் பொருளுணர்ந்து படிக்க மாணவர்களின் சொல்வளம் அந்தந்த வயதுக்கு ஏற்புடையதாக இருத்தல் முக்கியமாகும். இளம் வயதில் பிள்ளைகளுக்குப் பொருள்களின் பெயர்களை அறிமுகப்படுத்த அனுபவவழிக் கற்றலை மேற்கொள்ளலாம். (எ-டு: குறிப்பிட்ட இடங்களுக்கு அழைத்துச் செல்வது, சூழமைவுகளை அமைத்துக்கொடுப்பது). அவ்வாறு செய்வதால் மாணவரிடையே ஆழமான பொருளறிவையும் அனுபவரீதியான புரிந்துணர்வையும் வளர்க்கலாம். இத்தகைய செயற்பாடுகள் படித்தலுக்கு வலுவூட்டிப் படித்தல் திறனை வளர்க்க உதவுகின்றன. மாணவர்கள் பார்த்தும், கேட்டும், மெய்ந்நிகர்வழி அனுபவித்தும் கற்பவை படித்தலுக்கு நல்ல அடித்தளத்தை அமைத்துக்கொடுப்பதோடு ஆழமான புரிந்துணர்வையும் ஏற்படுத்தும்.

## படித்தல் வகைகள்






## வாய்விட்டுப் படித்தல்

எழுத்துகளைக் கண்ணால் காண்பதோடு வாயால் உச்சரித்துப் பொருள் உணரும் செயற்பாட்டினை வாய்விட்டுப் படித்தல் என்கிறோம். தொடக்கநிலை ஒன்றுமுதல் மூன்றுவரை வாய்விட்டுப் படித்தலுக்கே அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. வாய்விட்டுப் படிக்கும்போது சரியான உச்சரிப்பு, குரல் ஏற்ற இறக்கம், தெளிவு, சரளம் ஆகியவற்றைக் கவனத்திற்கொள்வது வாய்விட்டுப் படித்தல் திறனைச் செம்மைப்படுத்துவதற்குப் பேருதவியாக இருக்கும்.

## வாய்க்குள் படித்தல்

படிப்பனவற்றை ஒலி எழுப்பாமல் மனத்திற்குள்ளேயே படித்துப் பொருள் உணரும் செயற்பாட்டினை வாய்க்குள் படித்தல் என்கிறோம். இவ்வாறு படித்தல் மொழியறிவைப் பெறுவதற்கும் கருத்துகளை ஆழமாகப் பொருளுணர்ந்து புரிந்துகொள்வதற்கும் துணைபுரிகிறது. பல செய்திகளை மனத்திற்குள் படித்து அறிவைப் பெருக்கிக்கொள்வதற்கு வாய்க்குள் படித்தல் பெருந்துணையாக அமையும். இது அகண்ட படிப்பு, ஆழ்ந்த படிப்பு என்று இருவகைப்படும்.

### அகண்ட படிப்பு

கதைநூல்கள், துணைப்பாடநூல்கள், பொது அறிவு நூல்கள், சிறுகதைகள், மாத, வார இதழ்கள் எனப் பலதரப்பட்ட நூல்களை மகிழ்வுக்காகப் படித்தல் அகண்ட படிப்பு எனப்படும். இவ்வகையான படிப்பு, நூல் படிக்கும் பழக்கத்தையும் அறிவையும் மேன்மேலும் வளர்க்க உறுதுணையாக இருக்கிறது.

### ஆழ்ந்த படிப்பு

ஒரு பகுதியில் இடம்பெறும் ஆழமான கருத்துகளையும் விளக்கங்களையும் நன்கு புரிந்துகொள்வதற்கு ஆழ்ந்த படிப்பு பயன்படுகிறது. இத்துடன் சொற்றொடர் அமைப்புகள், சொல்லாட்சி, மொழியமைப்பு, மொழிநடைச்சிறப்பு முதலிய அனைத்து மொழிக்கூறுகளைப்பற்றிப் படித்தறியவும் ஆழ்ந்த படிப்பு துணைபுரிகிறது. துல்லியமான புரிந்துணர்வைப் பெறுவதே இவ்வகையான வாசிப்பின் இலக்காகும்.

தொடக்கநிலை வகுப்புகளில் வாய்விட்டுப் படித்தல், வாய்க்குள் படித்தல் ஆகியவற்றின் அவசியம் வலியுறுத்தப்பட வேண்டும். கீழ்த்தொடக்கநிலையில் பயிலும் மாணவர்களுக்கு வாய்விட்டுப் படித்தல் மூலமே படித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். வாய்விட்டுப் படித்தலில் நல்லதோர் அடித்தளத்தை உருவாக்கிய பின்னரே, வாய்க்குள் படித்தல் செயல்முறையைப் பிள்ளைகளுக்கு அறிமுகப்படுத்த வேண்டும்.

படித்தல் திறனுக்குரிய கற்றல் கூறுகள் குறித்தும் அத்திறனை வளர்க்கப் பரிந்துரைக்கப்படும் சில வழிமுறைகள் குறித்தும் மேலும் விவரங்கள் அறிய, கற்றல் கூறுகள் என்னும் இணைப்பைப் பார்க்கவும்.

## கற்றல் அடைவுநிலைகள்

**படித்தல்**

**மாணவர்கள் தங்கள் வயதிற்கும் அனுபவத்திற்கும் உட்பட்ட பலவகையான பனுவல்களைப் பொருளுணர்ந்து வாய்க்குள் படித்தும் வாய்விட்டுப் படித்தும் புரிந்துகொள்வர்; படித்து மகிழ்வர்.**

| எண் | கற்றல் அடைவுகள் | | | தமிழ் | | | | | | உயர்தமிழ் | | அடிப்படைத் தமிழ் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கற்றல் விளைவுகள் | நுண்திறன்களும் வெளிப்பாடும் | | P1 | P2 | P3 | P4 | P5 | P6 | P5 | P6 | P5 | P6 |
| 1 | தமிழ் எழுத்துகளை அடையாளங்கண்டு சரியாக உச்சரித்துப் படிப்பர். | 1.1 | எழுத்துகளைச் சரியாக அடையாளங்காணுதல். | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ |
| | | 1.2 | எழுத்துகளைச் சரியாக உச்சரித்துப் படித்தல். | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ |
| 2 | சொற்களைச் சரியாக உச்சரித்துப் பொருளுணர்ந்து படிப்பர். | 2.1 | எழுத்துகளைச் சரியாக உச்சரித்துப் பிழையற எழுத்துக்கூட்டிப் படித்தல். | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ |
| | | 2.2 | தனிச் சொற்களைச் சரியாக உச்சரித்தல்:<br>• குறில்-நெடில் வேறுபாடுணர்ந்து சரியாக உச்சரித்தல்.<br>• ஒலிவேறுபாட்டுச் சொற்களின் வேறுபாடு உணர்ந்து உச்சரித்தல்.<br>• எகர-ஒகர, ஏகார-ஓகார, ஏகார-ஐகார, டகர-தகர வேறுபாடு உணர்ந்து சொற்களைச் சரியாக உச்சரித்தல். | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ |
| | | 2.3 | சொற்களைப் பொருளுணர்ந்து படித்தல். | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ |
| 3 | சொற்றொடர்களையும் வாக்கியங்களையும் சரியாக உச்சரித்துச் சரளமாகவும் பொருள் விளங்குமாறும் படிப்பர். | 3.1 | சொற்றொடர்களையும் வாக்கியங்களையும் சரியாக உச்சரித்துப் படித்தல். | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ |
| | | 3.2 | முற்றுப்புள்ளி, வினாக்குறி ஆகிய அடிப்படை நிறுத்தற்குறிகளின் பயன்பாட்டை உணர்ந்து பொருத்தமான இடங்களில் நிறுத்திப் படித்தல். | | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ |
| | | 3.3 | சொற்றொடர்களையும் வாக்கியங்களையும் பொருள் விளங்குமாறு படித்தல். | | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ |

## படித்தல்

**மாணவர்கள் தங்கள் வயதிற்கும் அனுபவத்திற்கும் உட்பட்ட பலவகையான பனுவல்களைப் பொருளுணர்ந்து வாய்க்குள் படித்தும் வாய்விட்டுப் படித்தும் புரிந்துகொள்வர்; படித்து மகிழ்வர்.**

| எண் | கற்றல் அடைவுகள் | | | தமிழ் | | | | | | உயர்தமிழ் | | அடிப்படைத் தமிழ் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கற்றல் விளைவுகள் | நுண்திறன்களும் வெளிப்பாடும் | | P1 | P2 | P3 | P4 | P5 | P6 | P5 | P6 | P5 | P6 |
| 4 | **பனுவல்களைச் சரியாகவும் தெளிவாகவும் சரளமாகவும் பொருள் விளங்குமாறும் தன்னம்பிக்கையுடன் வாய்விட்டுப் படிப்பர்.** | 4.1 | பனுவலைச் சரியாகவும் தெளிவாகவும் சரளமாகவும் வாய்விட்டுப் படித்தல். | | | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ |
| | | 4.2 | ஏற்புடைய வேகம், தொனி, ஒலியளவு முதலான கூறுகளை உணர்ந்து பனுவலைப் படித்தல். | | | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ |
| | | 4.3 | பனுவலைத் தன்னம்பிக்கையுடனும் உயிரோட்டத்துடனும் வாய்விட்டுப் படித்தல். | | | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ |
| 5 | **பலவிதமான பனுவல்களை மேலோட்டமாகப் படித்துப் புரிந்துகொண்டு, தங்கள் புரிந்துணர்வை வெளிப்படுத்துவர்.** | 5.1 | பனுவலைச் சரியாகவும் தெளிவாகவும் சரளமாகவும் வாய்விட்டுப் படித்தல். | | | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ |
| | | 5.2 | பனுவலிலுள்ள சொற்றொடர்கள், பனுவலின் சாரம், அமைப்பு ஆகியவற்றைக்கொண்டு பனுவலின் வகையைக் கண்டறிந்து கூறுதல். | | | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ |
| | | 5.3 | பனுவலைத் தமது முன்னறிவோடு தொடர்புபடுத்திக் கூறுதல். | | | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ |
| | | 5.4 | மையக்கருத்தைக் கண்டறிந்து பனுவலின் சாரத்தைப் புரிந்துகொண்டு விளக்குதல். | | | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ |
| 6 | **பலவிதமான பனுவல்களை ஆழமாகப் படித்துத் தங்கள் புரிந்துணர்வை வெளிப்படுத்துவர்.** | 6.1 | பனுவலிலுள்ள முக்கியச் சொற்கள், சொற்றொடர்கள் முதலியவற்றை அடையாளங்கண்டு கூறுதல். | | | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ |
| | | 6.2 | பனுவலின் கருத்தை / கதையைக் காட்சிப்படுத்தித் தங்கள் புரிந்துணர்வைக் குறியீடுகள் / வரைபடம் / வாய்மொழி / எழுத்து முதலியவற்றின் வழியே வெளிப்படுத்துதல். | | | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ |

## படித்தல்

**மாணவர்கள் தங்கள் வயதிற்கும் அனுபவத்திற்கும் உட்பட்ட பலவகையான பனுவல்களைப் பொருளுணர்ந்து வாய்க்குள் படித்தும் வாய்விட்டுப் படித்தும் புரிந்துகொள்வர்; படித்து மகிழ்வர்.**

| எண் | கற்றல் அடைவுகள் | | | தமிழ் | | | | | | உயர்தமிழ் | | அடிப்படைத் தமிழ் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கற்றல் விளைவுகள் | நுண்திறன்களும் வெளிப்பாடும் | | P1 | P2 | P3 | P4 | P5 | P6 | P5 | P6 | P5 | P6 |
| 7 | **பன்முனைப்பாங்குப் பனுவல்கள் உள்ளிட்ட பலவகைப்பட்ட பனுவல்களைப் பயன்நோக்கிப் படித்துத் தங்கள் புரிந்துணர்வை வெளிப்படுத்துவர்.** | 7.1 | பொருள் விளக்கம், ஊகம் ஆகியவற்றின் அடிப்படையில் கதையில் அல்லது பனுவலிலுள்ள செய்திகளைத் தெளிவாகப் புரிந்துகொள்ளுதல். | | | | | ★ | ★ | ★ | ★ | | |
| | | 7.2 | பன்முனைப்பாங்குப் பனுவல்களையும் வேறு வடிவில் அமையப்பெற்ற பனுவல்களையும் (அட்டவணைகள், கதைகள், உரையாடல்கள், கடிதங்கள், தகவல் அறிக்கைகள், நாளேட்டுச் செய்திகள், விளம்பரங்கள், சுவரொட்டிகள், அறிவிப்புகள், கட்டளைக் குறிப்புகள், புள்ளிவிவரப் பட்டியல்கள்) படித்து, அவற்றிலுள்ள செய்திகளைத் தொடர்புபடுத்தியும் ஒருங்கிணைத்தும் கூறுதல். | | | | ★ | ★ | ★ | ★ | ★ | | |
| | | 7.3 | பனுவல்களிலுள்ள தகவல்களைப் படித்துப் புரிந்துகொண்டு அவற்றையொட்டிய எளிய கருத்துருப்படங்கள், சிந்தனை வரைபடங்கள் முதலானவற்றின் வழியே புரிந்துணர்வை வெளிப்படுத்துதல். | | | | ★ | ★ | ★ | ★ | ★ | | |
| | | 7.4 | பனுவலில் கூறப்பட்டுள்ள கருத்துகளைத் தம் முன்னறிவோடு தொடர்புபடுத்தித் தம் புரிந்துணர்வைத் தக்கவாறு வெளிப்படுத்துதல். | | | | ★ | ★ | ★ | ★ | ★ | | |

**படித்தல்**

**மாணவர்கள் தங்கள் வயதிற்கும் அனுபவத்திற்கும் உட்பட்ட பலவகையான பனுவல்களைப் பொருளுணர்ந்து வாய்க்குள் படித்தும் வாய்விட்டுப் படித்தும் புரிந்துகொள்வர்; படித்து மகிழ்வர்.**

| எண் | கற்றல் அடைவுகள் | | | தமிழ் | | | | | | உயர்தமிழ் | | அடிப்படைத் தமிழ் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கற்றல் விளைவுகள் | நுண்திறன்களும் வெளிப்பாடும் | | P1 | P2 | P3 | P4 | P5 | P6 | P5 | P6 | P5 | P6 |
| 8 | **பலவிதமான பனுவல்களை மனமகிழ்ச்சிக்காகப் படிப்பர்; பகுத்துணர்வர்.** | 8.1 | கதைகள், கட்டுரைகள், கவிதைகள் முதலானவற்றைப் படித்து அவற்றைக் குறித்துப் பிறருடன் பகிர்ந்துகொள்ளுதல். | | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | | |
| | | 8.2 | புத்தக மதிப்பாய்வு (book review) மேற்கொள்ளும் நோக்கில் கதைகள், கட்டுரைகள், கவிதைகள் முதலானவற்றைப் படித்துப் பகுத்துணர்ந்து தம் புரிந்துணர்வை வெளிப்படுத்துதல். | | | | ★ | ★ | ★ | ★ | ★ | | |

## எழுதுதல்

கேட்டல், படித்தல் ஆகியவற்றின்மூலம் மாணவர்கள் அறிந்துகொண்ட சொற்களையும் கருத்துகளையும் தொடர்களையும் எழுத்துவடிவில் தேவைக்கேற்ப வெளிப்படுத்துவதே எழுதுதலாகும். மேலும், பேச்சுவழி வெளிப்படும் எண்ணங்களைக் காரணகாரிய முறைப்படி இலக்கண வரம்புக்கு உட்படுத்தி உருவமளித்துப் படைப்பதும் எழுதுதலாகும். தொடக்கநிலையில் எழுத்துகளின் வரிவடிவங்களைக் கற்பித்தலே எழுதுதல் திறனின் முதற்படியாகும்.

## கட்டுரை எழுதுதல்

தொடக்கநிலை இரண்டாம் ஆண்டின் இறுதியில் மாணவர்கள் தாம் கற்ற சொற்களைக்கொண்டு ஆசிரியர் துணையுடன் எளிய வாக்கியங்களை எழுதும் திறன் பெற்றிருப்பார்கள். மூன்றாம் ஆண்டு இறுதிக்குள் மாணவர்கள் நிரல்பட எளிய வாக்கியங்களை உருவாக்குவார்கள். கட்டுரை எழுதுவதில் மாணவர்களின் தன்னம்பிக்கையை வளர்க்க, தனிப்படத்தையோ தொடர்படங்களையோ உதவிச்சொற்களுடன் பயிற்சியாகத் தருதல் வேண்டும். அதனைத் தொடர்ந்து அடுத்தடுத்த நிலைகளுக்குப் போகும்போது அவர்கள் சுயமாகக் கட்டுரை எழுத வழிகாட்டுதல் வேண்டும். தொடக்கநிலை மூன்றுமுதல் ஆறுவரை ஆண்டிறுதியில் மாணவர்கள் எந்த நிலையில் எத்தனைச் சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுத வேண்டும் என்னும் தகவல் பின்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது. மாணவர்களின் திறன்நிலையைக் கருத்திற்கொண்டு ஆசிரியர்கள் நெகிழ்வுத்தன்மையோடு கட்டுரைப் பயிற்சிகளை அளிக்கலாம்.

| பிரிவு | தமிழ் | | | | உயர்தமிழ் | |
|---|---|---|---|---|---|---|
| வகுப்பு | தொடக்கநிலை 3 | தொடக்கநிலை 4 | தொடக்கநிலை 5 | தொடக்கநிலை 6 | தொடக்கநிலை 5 | தொடக்கநிலை 6 |
| சொல்லளவு | 40 சொற்கள் | 60 சொற்கள் | 80 சொற்கள் | 100 சொற்கள் | 120 சொற்கள் | 150 சொற்கள் |

## சொல்வதெழுதுதல்

தொடக்கநிலையில் மாணவர்கள் சொற்களின் ஒலிவடிவத்தையும் வரிவடிவத்தையும் நன்கு அறிந்து அவற்றைப் பிழையற எழுதுவதற்குச் சொல்வதெழுதுதல் பயிற்சிகள் துணைபுரியும். ஒலிவேறுபாடு, குறில்-நெடில் வேறுபாடு, இனவெழுத்துகள் முதலியவற்றைத் தொடக்கநிலையில் மாணவர்கள் உணர்ந்து சொற்களைப் பிழையின்றி எழுத வேண்டும் என்பதே சொல்வதெழுதுதல் பயிற்சியளிப்பதன் முதன்மையான நோக்கமாகும். தனிச்சொற்பட்டியலைக் கொடுத்து மனனம் செய்து மாணவர்களை எழுதச் சொல்வதைவிடப் பயன்முனைப்புமிக்க கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்தியோ விளையாட்டு முறைகளின் வழியாகவோ மாணவர்கள் சொற்களைப் பிழையில்லாமல் எழுதுவதற்கு ஆசிரியர்கள் பயிற்சியளிக்க வேண்டும். அவ்வாறு செய்வது, மாணவர்களுக்கு மொழியின்பால் உள்ள ஈர்ப்பை மேம்படுத்த உதவும்.

எழுதுதல் திறனுக்குரிய கற்றல் கூறுகள் குறித்தும் அத்திறனை வளர்க்கப் பரிந்துரைக்கப்படும் சில வழிமுறைகள் குறித்தும் மேலும் விவரங்கள் அறிய, கற்றல் கூறுகள் என்னும் இணைப்பைப் பார்க்கவும்.

## கற்றல் அடைவுநிலைகள்

### எழுதுதல்

**மாணவர்கள் எழுத்துகளைத் தெளிவாகவும் வரிவடிவம் சிதையாமலும் எழுதுவர்; சரியான மொழியமைப்புடனும் படைப்பாக்கத் திறனுடனும் கருத்துகளை வெளிப்படுத்திக் கதை அல்லது கட்டுரை எழுதுவர்.**

| எண் | கற்றல் அடைவுகள் | | | தமிழ் | | | | | | உயர்தமிழ் | | அடிப்படைத் தமிழ் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கற்றல் விளைவுகள் | | நுண்திறன்களும் வெளிப்பாடும் | P1 | P2 | P3 | P4 | P5 | P6 | P5 | P6 | P5 | P6 |
| 1 | **எழுத்துகளைத் தெளிவாகவும் வரிவடிவம் சிதையாமலும் எழுதுவர்.** | 1.1 | எழுத்துகளின் வரிவடிவமறிந்து சரியாகவும் தெளிவாகவும் எழுதுதல். | ★ | ★ | | | | | | | | |
| | | 1.2 | சொற்களுக்கு இடையே சரியான இடைவெளிவிட்டு எழுதுதல். | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ |
| 2 | **படித்த சொற்களையும் தொடர்களையும் பனுவல்களையும் நினைவுகூர்ந்தோ வாசிக்கக் கேட்டோ சரியாக எழுதுவர்.** | 2.1 | ஒலி வடிவத்தையும் வரிவடிவத்தையும் தொடர்புபடுத்திச் சொற்களையும் தொடர்களையும் பிழையின்றி எழுத்துக்கூட்டி எழுதுதல்.<br>• குறில்-நெடில் வேறுபாடு<br>• ஒலி வேறுபாட்டுச் சொற்கள் (லகர-ளகர-ழகர, னகர-ணகர, ரகர-றகர)<br>• எகர-ஒகர, ஏகார-ஓகார, ஏகார-ஐகார, டகர-தகர வேறுபாடு | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ |
| | | 2.2 | வாசிக்கப்படும் பனுவலில் இடம்பெறும் சொற்களையும் தொடர்களையும் பிழையின்றி எழுதுதல்.<br>பின்வருவனவற்றைக் கருத்திற்கொள்ளுதல்:<br>• சூழமைவுக்கேற்ற சொல்லாட்சி<br>• படித்த இலக்கணக் கூறுகள் (எ-டு: வேற்றுமை உருபுகள்)<br>• நிறுத்தற்குறிகளின் பயன்பாடு | | | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ |

## எழுதுதல்

**மாணவர்கள் எழுத்துகளைத் தெளிவாகவும் வரிவடிவம் சிதையாமலும் எழுதுவர்; சரியான மொழியமைப்புடனும் படைப்பாக்கத் திறனுடனும் கருத்துகளை வெளிப்படுத்திக் கதை அல்லது கட்டுரை எழுதுவர்.**

| எண் | கற்றல் அடைவுகள் | | | தமிழ் | | | | | | உயர்தமிழ் | | அடிப்படைத் தமிழ் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கற்றல் விளைவுகள் | நுண்திறன்களும் வெளிப்பாடும் | | P1 | P2 | P3 | P4 | P5 | P6 | P5 | P6 | P5 | P6 |
| 3 | **சரியான மொழியமைப்பைப் பயன்படுத்தி எளிய வாக்கியங்களை எழுதுவர்.** | 3.1 | இலக்கணக்கூறுகளையும் மொழிக்கூறுகளையும் சரியாகப் பயன்படுத்தி எளிய வாக்கியங்களை எழுதுதல்:<br>• சரியான வாக்கிய இயைபுடன் எழுதுதல் (திணை, பால், எண், இடம், காலம்)<br>• குறில், நெடில் வேறுபாடுகளை உணர்ந்து எழுதுதல்<br>• எகர-ஒகர, ஏகார-ஓகார, ஏகார-ஐகார, டகர-தகர வேறுபாடுகளை உணர்ந்து எழுதுதல்<br>• ஒலி வேறுபாட்டுச் சொற்களைப் பொருள் பிறழாது சரியாக எழுதுதல்<br>• இணைப்புச் சொற்களைப் பயன்படுத்தி எழுதுதல் | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ |
| | | 3.2 | முற்றுப்புள்ளி, வினாக்குறி, காற்புள்ளி, அரைப்புள்ளி, மேற்கோள் குறி, உணர்ச்சிக்குறி முதலிய நிறுத்தற்குறிகளைப் பொருத்தமான இடங்களில் பயன்படுத்துதல். | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ |
| | | 3.3 | எழுத்து, சொல், மொழிப் பிழைகளின்றியும் கருத்துப்பிழையின்றியும் தனிவாக்கியம், கூட்டுவாக்கியம், கலவைவாக்கியம் முதலானவற்றை எழுதுதல். | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ |

## எழுதுதல்


**மாணவர்கள் எழுத்துகளைத் தெளிவாகவும் வரிவடிவம் சிதையாமலும் எழுதுவர்; சரியான மொழியமைப்புடனும் படைப்பாக்கத் திறனுடனும் கருத்துகளை வெளிப்படுத்திக் கதை அல்லது கட்டுரை எழுதுவர்.**

| எண் | கற்றல் அடைவுகள் | | | தமிழ் | | | | | | உயர்தமிழ் | | அடிப்படைத் தமிழ் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கற்றல் விளைவுகள் | நுண்திறன்களும் வெளிப்பாடும் | | P1 | P2 | P3 | P4 | P5 | P6 | P5 | P6 | P5 | P6 |
| 4 | படம், படத்தொடர், தலைப்பு, சூழல் முதலியவற்றையொட்டிக் கருத்துகளைத் திரட்டியும் ஒழுங்குபடுத்தியும் திட்டமிட்டும் கதை அல்லது கட்டுரையை எழுதுவர். | 4.1 | பாடப்பொருளைப் புரிந்துகொண்டு கருத்துகளைத் திரட்டி எழுதுதல். | | | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | | |
| | | 4.2 | பாடப்பொருளைப் புரிந்துகொண்டு கருத்துகளைத் திட்டமிட்டு நிரல்பட எழுதுதல். | | | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | | |
| | | 4.3 | பொருத்தமான தொடக்கத்தையும் முடிவையும் எழுதுதல். | | | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | | |
| | | 4.4 | பாடப்பொருளையொட்டிக் கருத்துத்தொடர்பு வெளிப்படும்படி கருத்துகளைத் தொகுத்து எழுதுதல். | | | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | | |
| 5 | படைப்பாக்கத் திறனுடன் பொருத்தமான மொழிநடையைக் கொண்டு கருத்துகளையும் சிந்தனைகளையும் எழுதுவர். | 5.1 | படிப்போரின் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் கதைப்பின்னலை (தொடக்கம், வளர்ச்சி, முடிவு) உருவாக்கி எழுதுதல். | | | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | | |
| | | 5.2 | தேவைக்கேற்பப் பொருத்தமான இணைமொழிகளையும் அடைமொழிகளையும் இனிய தொடர்களையும் மேற்கோள்களையும் பயன்படுத்தி எழுதுதல். | | | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | | |

## 2.6 இருவழிக் கருத்துப்பரிமாற்றத் திறன்கள்

ஒருவர் தம் கருத்தைத் தெரிவிப்பதற்குத் தலைசிறந்த கருவியாக இருப்பது மொழியாகும். இருவர் அல்லது அதற்கும் மேற்பட்டவர்களிடையே நடைபெறும் கருத்துப்பகிர்வே இருவழிக் கருத்துப்பரிமாற்றமாகும். அது பேச்சுவழியாகவும் எழுத்துவழியாகவும் நிகழலாம். மாணவர்கள் தாய்மொழியை இயல்பான வாழ்க்கைச் சூழல்களில் பயன்முனைப்புமிக்க வகையில் பயன்படுத்த இருவழிக் கருத்துப்பரிமாற்றத் திறன்கள் அவசியமாகின்றன.

ஒருவர் தம் எண்ணங்களையும் கருத்துகளையும் மற்றவருடன் முறையாகப் பரிமாறிக்கொள்வதற்கு மொழிப் பயன்பட வேண்டும். மாணவர்கள் தமிழைப் பள்ளியிலும் பள்ளிக்கு அப்பாலும் தயக்கமின்றித் தன்னம்பிக்கையோடு பயன்படுத்தும்போதுதான் அவர்கள் மொழியாற்றல் மிக்கவர்களாகத் திகழ முடியும். ஒரு மொழியின் கருத்துப்பரிமாற்றம் முதலில் பேச்சுமூலமே வெளிப்பட வேண்டும். பேச்சுவழிக் கருத்துப்பரிமாற்றத் திறனை மேம்படுத்தப் பேச்சுத்தமிழ் பயன்படுகிறது. பேச்சில் திறன் பெற்ற ஒருவரால் எழுத்தின்வழி எளிதாகக் கருத்துப்பரிமாற்றம் செய்ய இயலும். ஆசிரியர்கள் மாணவர்களின் தேவைகளையும் தயார்நிலையையும் கருத்திற்கொண்டு நெகிழ்வுத்தன்மையுடன் மொழியைக் கற்பித்தல் வேண்டும். கற்பித்தலுக்கு உகந்த அகச்சூழலையும் புறச்சூழலையும் வழங்குவது மாணவர்கள் தமிழ்மொழியை ஆர்வத்துடன் கற்கவும் அதைத் திறம்படப் பயன்படுத்தவும் வழிவகுக்கும்.



இருவழிக் கருத்துப்பரிமாற்றத் திறன்களுக்குரிய கற்றல் கூறுகள் குறித்தும் அத்திறன்களை வளர்க்கப் பரிந்துரைக்கப்படும் சில வழிமுறைகள் குறித்தும் மேலும் விவரங்கள் அறிய, கற்றல் கூறுகள் என்னும் இணைப்பைக் காண்க.

## கற்றல் அடைவுநிலைகள் (இருவழிக் கருத்துப்பரிமாற்றத் திறன்கள்)

| பேச்சுவழிக் கருத்துப்பரிமாற்றம் | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மாணவர்கள் சூழல்களுக்கு ஏற்பப் பொருத்தமான முறையில் பேச்சுவழிக் கருத்துப்பரிமாற்றத்தில் ஈடுபடுவர். | | | | | | | | | | | | | | |
| எண் | கற்றல் அடைவுகள் | | | தமிழ் | | | | | | உயர்தமிழ் | | அடிப்படைத் தமிழ் | |
| | கற்றல் விளைவுகள் | நுண்திறன்களும் வெளிப்பாடும் | | P1 | P2 | P3 | P4 | P5 | P6 | P5 | P6 | P5 | P6 |
| 1 | **கருத்துப்பரிமாற்றத்தைத் தொடங்கவும், தொடர்ந்து நிகழ்த்தவும், சரியான முறையில் நிறைவுசெய்யவும் அறிந்திருப்பர்.** | 1.1 | கருத்துப்பரிமாற்றத்தைப் பொருத்தமான முறையில் தொடங்குதல். | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ |
| | | 1.2 | கருத்துகளைத் தெளிவாகக் கூறிக் கருத்துப்பரிமாற்றத்தைத் தொடர்தல். | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ |
| | | 1.3 | உரைக்குறிகளைப் பயன்படுத்திக் கருத்துப்பரிமாற்றத்தைத் தொடர்தல். | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ |
| | | 1.4 | கருத்துப்பரிமாற்றத்தைப் பொருத்தமாக நிறைவுசெய்தல். | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ |
| 2 | **பயன்முனைப்புமிக்க வகையில் இணக்கமாகக் கருத்துப்பரிமாற்றத்தை நிகழ்த்துவர்.** | 2.1 | கருத்துப்பரிமாற்றத்தின்போது பிறர் கூறும் கருத்துகளுக்கு முக்கியத்துவமளித்தல்; மதிப்பளித்தல்; பலவகையான கருத்துகளைப்பற்றி இணக்கமாகக் கலந்துரையாடுதல். | | | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ |
| | | 2.2 | பிறர் கூறும் கருத்துகளைக் கவனமாகக் கேட்டு அவற்றுக்கேற்றவாறு தம் கருத்துகளைப் பொருத்தமான தருணத்தில் சரியான முறையில் எடுத்துரைத்தல். | | | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ |
| | | 2.3 | பிறர் கூறும் கருத்துகளுள் பொருத்தமானவற்றை ஏற்றுக்கொள்ளுதல்; பொருந்தாதவற்றைக் காரணத்துடன் மறுத்துரைத்தல். | | | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ |
| | | 2.4 | பிறர் கருத்துகளைக் கூறும்பொழுது தெளிவுபெறுவதற்காகத் தக்க தருணத்தில் இடையிட்டு வினாக்கள் எழுப்புதல்; பொருத்தமான முறையில் கருத்துரைத்தல். | | | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ |
| | | 2.5 | பிறர் எழுப்பும் வினாக்களுக்குப் பொருத்தமான முறையில் பதிலுரைத்தல். | | | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ |


## எழுத்துவழிக் கருத்துப்பரிமாற்றம்

**மாணவர்கள் சூழலுக்கேற்பப் பொருத்தமான மொழியமைப்பையும் வடிவத்தையும் பயன்படுத்தி எழுத்துவழியே கருத்துப்பரிமாறிக்கொள்வர்.**

| எண் | கற்றல் அடைவுகள் | | | தமிழ் | | | | | | உயர்தமிழ் | | அடிப்படைத் தமிழ் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கற்றல் விளைவுகள் | நுண்திறன்களும் வெளிப்பாடும் | | P1 | P2 | P3 | P4 | P5 | P6 | P5 | P6 | P5 | P6 |
| 1 | **பொருத்தமான வடிவத்தைப் பயன்படுத்தி எழுத்துவழியே கருத்துப்பரிமாறிக் கொள்வர்.** | 1.1 | பொருத்தமான வடிவத்தைப் பயன்படுத்தி எழுத்துவழியே கருத்துப்பரிமாறிக்கொள்ளுதல் (எ-டு: குறிப்பு, குறுஞ்செய்தி, மின்னஞ்சல், வலைப்பூ, கருத்துக்களம் முதலியவை). | | | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ |
| | | 1.2 | சரியான மொழியமைப்பைப் பயன்படுத்தித் தெளிவாக எழுத்துவழியே கருத்துப்பரிமாறிக்கொள்ளுதல். | | | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | ★ |
| | | 1.3 | கருத்துப்பரிமாற்றத்தைப் பொருத்தமான முறையில் தொடங்குதல்; தொடர்தல்; முறையாக நிறைவுசெய்தல். | | | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | | |
| | | 1.4 | சூழலுக்கேற்பத் தங்கள் கருத்துகளையும் உணர்வுகளையும் பொருத்தமான முறையில் வெளிப்படுத்தி எழுத்துவழிக் கருத்துப்பரிமாறிக்கொள்ளுதல். | | | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | | |
| 2 | **தேவைக்கும் சூழலுக்கும் ஏற்ப மறுமொழி எழுதுவர்.** | 2.1 | எழுப்பப்படும் வினாக்களுக்கும் கருத்துகளுக்கும் பொருத்தமான முறையில் பதிலுரை எழுதுதல்.<br>• பிறரின் கருத்துகளுக்கு மதிப்பளிக்கும் வகையில் பதிலுரை எழுதுதல்.<br>• மாற்றுக் கருத்தை முன்வைத்தல். | | | ★ | ★ | ★ | ★ | ★ | ★ | | |

## 2.7 21-ஆம் நூற்றாண்டுத் திறன்கள்

மாணவர்களின் மொழித்திறன்களை வளர்ப்பதோடு ஏனைய திறன்களையும் வளர்க்க வேண்டிய கடப்பாடு ஆசிரியர்களைச் சார்ந்துள்ளது. வாழ்க்கைச் சவால்களைச் சந்திக்கவும் எதிர்கொள்ளவும் மாணவர்களுக்குப் பாட அறிவு, மொழித்திறன்கள் ஆகியவற்றோடு 21-ஆம் நூற்றாண்டுத் திறன்களும் மிகவும் அவசியமாகின்றன. இத்திறன்களைத் தனித்துக் கற்பிக்காமல் வகுப்பிலும் வகுப்பிற்கு அப்பாலும் நடைபெறும் அனைத்துக் கற்றல் நடவடிக்கைகளின் வாயிலாக ஒருங்கிணைப்பதோடு மொழித்திறன்கள், கற்றல் பண்பியல்புகள், விழுமியங்கள் ஆகியவற்றை மாணவர்களிடத்தே வளர்த்தலும் மிகவும் அவசியமாகின்றன.




இத்திறன் வளர்ச்சியின் வாயிலாக மாணவர்கள் ஒவ்வொருவரும் படைப்பாளராகவும் இணைப்பாளராகவும் பங்களிப்பாளராகவும் இயங்குவர். அது எவ்வாறெனில், மாணவர்கள் நிச்சயமற்ற எதிர்காலத்தின்போது புதிய மதிப்பினை உருவாக்குவர்; மாறுபட்ட கருத்துடைய மக்களை ஒருங்கிணைத்திட வேறுபாடுகளுக்கிடையேயும் பாலம் அமைத்திடுவர்; புதிய வாய்ப்புகளைப் பயன்படுத்திடுவர்; சமுதாயப் பின்னணி எவ்வாறிருப்பினும் அதனைப் பொருட்படுத்தாது அதற்குத் தொடர்ந்து பங்களிப்பர். இத்தகையோராய் நம் மாணவர்கள் உருவாகிட 21-ஆம் நூற்றாண்டுத் திறன்கள் அவசியமாகின்றன.

## நுண்ணாய்வு, தகவமைவு, படைப்பாக்கச் சிந்தனை

| நுண்ணாய்வுச் சிந்தனை | தகவமைவுச் சிந்தனை | படைப்பாக்கச் சிந்தனை |
|---|---|---|
| • சரியான காரணங்களின் அடிப்படையில் முடிவெடுத்தல்<br>• சிந்தனையை மேம்படுத்தவும் கண்காணிக்கவும் ஒழுங்கமைக்கவும் தற்சிந்தனை ஆய்தலைப் பயன்படுத்துதல் | • தொடர்புபடுத்துவதற்கும் புதிய நுண்ணறிவைப் பெறுவதற்கும் பல்வேறு சூழமைவுகளையும் சூழ்நிலைகளையும் மதிப்பிடுதல்<br>• ஒருவர் தம் கண்ணோட்டத்தையும் உத்திகளையும் மாற்றியமைத்துக்கொள்வதன் வாயிலாகச் சிக்கல்களையும் தெளிவற்ற சூழல்களையும் நிர்வகித்தல் | • வாய்ப்புகளை ஆராய்தலும் புதுமையான பயன்மிக்க யோசனைகளை உருவாக்குதலும்<br>• புதுமையான பயன்மிக்க தீர்வுகளை வடிவமைப்பதற்கு யோசனைகளை மதிப்பிடுதலும் செம்மைப்படுத்துதலும் |

## கருத்துப்பரிமாற்றம், உடனிணைந்து செயலாற்றுதல், தகவல்சார் திறன்கள்

| கருத்துப்பரிமாற்றம் | உடனிணைந்து செயலாற்றுதல் | தகவல்சார் திறன்கள் |
|---|---|---|
| • பயன்முனைப்புடன் தகவல்களைக் கருத்துப்பரிமாறிக்கொள்ளுதல்; இணைந்து ஆக்கநிலையில் பொருள் புரிந்துகொள்ளுதல்<br>• பல்வேறு கண்ணோட்டங்களுடன் ஒத்துணர்வோடு ஈடுபடுதல் | • கூட்டு இலக்குகளுக்குப் பங்காற்றக் குழுநிலையில் செயலாற்றுதல்; பயன்முனைப்புடன் பணியாற்றுதல்<br>• இலக்குகளை அடைவதற்குக் குழுவால் நிர்ணயிக்கப்பட்ட பொறுப்புகளையும் பணிகளையும் கூட்டாக வரையறுத்தல்; ஒப்பந்த நோக்குடன் கலந்துரையாடுதல் | • மின்னிலக்கம் சார்ந்ததும் சாராததுமாகிய தகவல்களையும் வளங்களையும் தேடுவதற்குப் பயன்முனைப்புமிக்க உத்திகளைப் பயன்படுத்துதல்; பகுத்தாய்தலின் வாயிலாகப் பெறப்படும் தகவலின் துல்லியத்தையும், நம்பகத்தன்மையையும் ஏற்புடைமையையும் மதிப்பிடுதல்<br>• மின்னிலக்கம் சார்ந்ததும் சாராததுமாகிய தகவல்களை நெறிமுறையுடனும் பொறுப்புடனும் உருவாக்கிப் பகிர்ந்துகொள்ளுதல்; நிகழ்நிலைத் தளங்களில் உடன்பாடான நிலையைக் கட்டிக்காத்தல் |

**குடியியல் படிப்பறிவு, உலகளாவிய படிப்பறிவு, பல்லினப் பண்பாட்டுப் படிப்பறிவு**

| குடியியல் படிப்பறிவு | உலகளாவிய படிப்பறிவு | பல்லினப் பண்பாட்டுப் படிப்பறிவு |
|---|---|---|
| • தனிநபர், சமூகம், தேசிய முக்கியத்துவம் ஆகியவற்றின் விழுமியங்கள், இலட்சியங்கள், சிக்கல்கள் பற்றிய புரிந்துணர்வை வெளிப்படுத்துதல்<br>• பள்ளி, சமூகம், நாடு ஆகியவற்றின் மேம்பாட்டிற்குத் துடிப்புடனும் ஆக்கத்துடனும் பங்காற்றுதல் | • உலகளாவிய சிக்கல்கள், தொடர்பிணைப்புகள், போக்குகள் ஆகியவற்றைப் பற்றிய விழிப்புணர்வுடன் சூழமைவு அடிப்படையில் கண்ணோட்டங்களை அமைத்துக்கொள்ளுதல்<br>• சிங்கப்பூரிலும் அதற்கு அப்பாலும் உலகளாவிய சிக்கல்கள் குறித்து மின்னிலக்கத்தளத்தை உள்ளடக்கிய வெவ்வேறு தளங்களில் மக்களுடன் தன்னம்பிக்கையோடு கருத்துப்பரிமாற்றத்தில் ஈடுபடுதல் | • சொந்த அடையாளத்தோடு பிறரது அடையாளத்தையும் பண்பாட்டுப் பின்புலம் குறித்த விழிப்புணர்வையும் வெளிப்படுத்தி அவற்றைப் போற்றிப் பாராட்டுதல்<br>• சமுதாய ஒற்றுமையை மேம்படுத்தும் நோக்கில் பலதரப்பட்ட சமுதாய, பண்பாடு, சமய சமூகங்களைச் சேர்ந்த மக்களோடு கலந்துரையாடும்போது கூருணர்வையும் திறந்த மனப்பான்மையையும் வெளிப்படுத்துதல் |

21-ஆம் நூற்றாண்டுத் திறன்களை நடைமுறைப்படுத்துதல் குறித்து மேலும் விவரங்கள் அறிய, Developing 21st Century Competencies (21CC) in Students@Opal2.0 என்னும் இணைப்பைப் பார்க்கவும்.

## சிந்தனைத் திறன்கள்

சிந்தனைக் காட்சி வெளிப்பாடு என்னும் அணுகுமுறை சிந்தனை வழக்கமுறைகளின் பயன்பாட்டினை ஊக்குவிக்கிறது. இது சரியான விடையை மட்டும் கருத்திற்கொள்வதற்குப் பதிலாகச் சிந்திக்கும் செயல்முறைக்கு மதிப்பளிக்கின்றது. நமது சிந்தனைகள் பெரும்பாலும் கண்ணுக்குப் புலப்படாதவை. அதனால், இவ்வணுகுமுறையின் மைய நோக்கம் சிந்தனைக் காட்சியைப் புலப்படுத்துவதாகும். இந்த அணுகுமுறை வகுப்பறைகளிலும் பிற கற்றல் சூழல்களிலும் சிந்தனையை அதிகம் வெளிப்படுத்தக்கூடிய பல முக்கிய வழிகளை உள்ளடக்கியது. இது, 21-ஆம் நூற்றாண்டில் கற்போருடைய ஈடுபாடு, புரிந்துணர்வு, தன்னுரிமை முதலியவற்றை ஊக்குவிக்கிறது. சிந்தனைக் காட்சி என்பது மாணவர்களின் சிந்திக்கும் இயல்புகளை வளர்க்கும் அதே வேளையில் அவர்கள் கற்றுக்கொள்ளும் தலைப்புகள் பற்றிய புரிந்துணர்வை ஆழப்படுத்தக் கற்பிக்கும் ஆய்வு அடிப்படையிலான அணுகுமுறையாகும்.

மேலும் விவரங்கள் அறிய, சிந்திக்கும் நடைமுறைகள் என்னும் இணைப்பைப் பார்க்கவும்.

மாணவர்களைத் திறன்மிக்க சிந்தனையாளர்களாக உருவாக்கப் பெஞ்சமின் புளூம் என்னும் கல்வியாளரின் கோட்பாடு (Bloom's Taxonomy) உதவுகிறது. ஆறு அறிவுசார் இலக்குகளை மையமாகக்கொண்ட இக்கோட்பாட்டின் அடிப்படையில் மாணவர்களிடம் சிந்தனையைத் தூண்டும் வினாக்களைக் கேட்பதன்மூலம் அடிப்படைநிலைமுதல் மேனிலைச் சிந்தனைத் திறன்வரை வளர்க்க இயலும் என்று கருதப்படுகிறது.

### புளூம் என்னும் கல்வியாளரின் கோட்பாடு (Bloom's Taxonomy)

**மேனிலைச் சிந்தனைத் திறன்**

- உருவாக்குதல்
- மதிப்பிடுதல்
- பகுத்தாய்தல்
- பயன்படுத்துதல்
- புரிந்துணர்தல்
- நினைவுகூர்தல்

**அடிப்படைநிலைச் சிந்தனைத் திறன்**

| வகைகள் | விளக்கம் |
|---|---|
| நினைவுகூர்தல் | தகவல்களை நினைவுத் திரைக்குக் கொணர்தல் |
| புரிந்துணர்தல் | பல வழிகளில் பெற்ற கருத்துகளைப் புரிந்துகொண்டு விளக்குதல் |
| பயன்படுத்துதல் | தகவல்களைப் பகுத்தாய்ந்து அதன் அமைப்பினையும் தொடர்பினையும் புரிந்துகொள்ளுதல் |
| பகுத்தாய்தல் | கற்றுக்கொண்டதைப் புதிய இடத்தில் அல்லது சூழலில் பொருத்திப் பார்த்தல் |
| மதிப்பிடுதல் | சிந்தனைகளையும் தகவல்களையும் சீர்தூக்கிப் பார்த்தல் |
| உருவாக்குதல் | பல்வேறு கருத்துகளை ஒன்றிணைத்துப் புதுக் கருத்துகள், சிந்தனைகள், அமைப்புகள், படைப்புகள் முதலியவற்றை உருவாக்குதல் |

## தகவல் தொடர்புத் தொழில்நுட்பம்

மொழிக் கல்விக்குத் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத் தேவையும் பயனும் இன்றியமையாதவையாகும். தொழில்நுட்பத்தின் முக்கியப் பயன்களாகக் கருதப்படும் ஆக்கம், உடனிணைந்து செயற்படுதல், தொடர்பு ஆகியன வாழ்நாள் கற்றலுக்கு அவசியமாகும். ஆகவேதான், இப்பாடத்திட்டம் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தை மொழி கற்றலில் ஒரு முக்கியக் கூறாக இணைத்துள்ளது. வகுப்பறைச் சூழலிலும் அதற்கு அப்பாற்பட்டும் கற்றலில் நெகிழ்வுத்தன்மையை உருவாக்கத் தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் பெரிதும் உதவுகிறது. மேலும், மொழி கற்றலில் மாணவர்களின் ஆர்வத்தை வளர்க்கவும் மொழி நடவடிக்கைகளில் அவர்களின் ஈடுபாட்டைப் பெருக்கவும் மாணவர்களின் கற்றல் தேவைகளுக்கேற்பப் பாடத்தை வடிவமைக்கவும் தொழில்நுட்பம் ஒரு சிறந்த வழியாகும்.

பயன்முனைப்புமிக்க வகையில் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதன்வழி, மாணவர்கள் தங்கள் தொழில்நுட்பத் திறன்களை வளர்த்துக்கொள்வதோடு, இணைய நன்னடத்தையைக் கவனத்திற்கொண்டு பொறுப்புமிக்க தகவல் தொடர்புத் தொழில்நுட்பப் பயனீட்டாளர்களாகவும் உருவாகுவர்.

## இணைய நன்னடத்தை

இன்றையச் சூழலில் மொழி கற்றல் என்பது இணையத்தைப் பெரிதும் சார்ந்துள்ளது. மாணவர்கள் பல்வேறு ஊடகங்கள் வாயிலாகவும் சமூக வலைத்தளங்கள் வாயிலாகவும் தகவல்களை எளிதில் பெறுகின்றனர். அவ்வாறு இணையத்தைப் பயன்படுத்தும்போதும் தகவல்களைப் பெறும்போதும் மாணவர்கள் பொறுப்புமிக்க பயனீட்டாளர்களாகத் திகழ்வதற்கு ஆசிரியர்கள் பின்வருவனவற்றை வலியுறுத்துதல் வேண்டும்.

**மாணவர்கள்:**

- தனிநபர் விவரங்கள் குறித்த ரகசியங்களைக் கட்டிக்காத்தல்
- இணையத்தில் கண்ணியத்தோடு நடந்துகொள்ள அறிந்திருத்தல்
- முறைகேடான பதிவுகளையும் இணையப் பக்கங்களையும் தவிர்க்க அறிந்திருத்தல்
- மனம் புண்படும் வகையில் இணையத்தில் கேலி செய்தல் நிகழும்போது தகுந்த முறையில் அவற்றை எதிர்கொள்ள அறிந்திருத்தல்
- இணையத்தில் காப்புரிமை, பதிப்புரிமை பற்றிய தகவல்களைப் புரிந்துகொண்டு அவற்றிற்கேற்றவாறு செயற்பட அறிந்திருத்தல்

## மாணவர் கற்றல் தளம்

21-ஆம் நூற்றாண்டுத் திறன்களை அடிப்படையாகக்கொண்டு இணையத்தின் துணையோடு மொழிக் கல்வி நடந்தேற மாணவர் கற்றல் தளம் அமைக்கப்பட்டுள்ளது. வெவ்வேறு நிலைகளிலுள்ள மாணவர்களைச் சுயமுனைப்புடன் தங்கள் கற்றலுக்குப் பொறுப்பேற்கச் செய்வதோடு அவர்கள் தொழில்நுட்பத்தை அர்த்தமுள்ள வகையில் பயன்படுத்திப் பிறரோடு உடனிணைந்து கற்கவும் இத்தளம் பெருந்துணைபுரிகிறது.

## தட்டச்சுப் பயிற்சி

இன்றைய சூழலில் எழுத்துவழிக் கருத்துப்பரிமாற்றத்திற்குத் தகவல் தொடர்புக் கருவிகள் அதிகம் பயன்படுகின்றன. இதனைக் கருத்திற்கொண்டு நம் பாடத்திட்டத்தில் தட்டச்சுப் பயிற்சிக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், கணினி சார்ந்த எழுத்துமுறைத் தேர்வுகள் உயர்நிலைப்பள்ளிகளிலும் தொடக்கக் கல்லூரிகளிலும் நடந்தேறி வருகின்றன. இதனால், தொடக்கப்பள்ளியிலேயே தமிழில் தட்டச்சுப் பயிற்சியைப் பொருத்தமான காலகட்டத்தில் படிப்படியாக மாணவர்களுக்கு அறிமுகப்படுத்துவது மிகவும் அவசியமாகும். தொடக்கநிலை மூன்றாம் வகுப்பு மாணவர்களுக்குப் பாடவேளைக்கு அப்பால் குறைந்தது ஆறு மணிநேரம் தட்டச்சுப் பயிற்சி வழங்கப்பட வேண்டும் எனப் பரிந்துரைக்கப்படுகிறது. மாணவர் கற்றல் தளத்தில் காணும் தட்டச்சுப் பயிற்சிகளை மாணவர்கள் செய்வதன்வழி அவர்கள் போதிய தட்டச்சுப் பயிற்சி பெறுவதை உறுதிசெய்துகொள்ள முடியும்.

| தொடக்கநிலை | கற்றல் அடைவுநிலைகள் |
|---|---|
| 1, 2 | தமிழ் விசைப்பலகையில் உள்ள எழுத்துகளைப் பார்த்து அடையாளங்கண்டுகொள்வர். |
| 3 | எளிய சொற்களையும் சொற்றொடர்களையும் தட்டச்சிடப் பழகுவர். |
| 4 | சிறிய வாக்கியங்களையும் சிறு பனுவல்களையும் தட்டச்சிடுவர். |
| 5, 6 | நீண்ட பகுதிகளைத் தட்டச்சிடுவர். |





# கற்பித்தல் முறைமை

## 3.1 மகிழ்வுறு கற்றல்

பாடங்களுக்கென வகுத்துக்கொண்ட நோக்கங்களை நிறைவேற்றுதலே கற்பித்தலின் இலக்காகும். அதற்கு ஆதாரமாகப் பயன்முனைப்புமிக்க கற்பித்தல் முறைமைகள் அமைகின்றன. பாடப்பொருளுக்கும் எதிர்பார்க்கும் கற்றல் அடைவுநிலைகளுக்கும் பொருந்துகின்ற வகையில் ஆசிரியர்கள் பல்வேறு கற்பித்தல் முறைமைகளைப் பயன்படுத்திப் பாடங்களைத் திட்டமிட்டு நடத்தவேண்டும். அவ்வாறு செய்யும்போது மாணவர்களது பின்புலம், மொழித்திறன், வகுப்பறைச் சூழல் முதலியவற்றை ஆசிரியர்கள் அவசியம் கருத்திற்கொள்ள வேண்டும். மாணவர்கள் மொழி கற்றலில் முழுமையாக ஈடுபடவும் இனிய அனுபவங்களைச் சேர்க்கவும் கற்பித்தல் முறைமைகள் பெருந்துணைபுரியும். மேலும், மாணவர்களுக்கு ஏற்புடைய திறன்மிகு கற்பித்தல் முறைமைகள் கையாளப்படும்போது, துடிப்புமிக்க வகுப்பறைச் சூழல் அமையும்; அது பயன்முனைப்புமிக்க கற்பித்தலுக்கும் மகிழ்வுறு கற்றலுக்கும் வித்திடும்.


## 3.2 சிங்கப்பூர்க் கற்பித்தல் முறைமை




உலகளாவிய கற்பித்தல் முறைகளை ஆராய்ந்து, அவற்றுள் சிங்கப்பூர்க் கற்றல் சூழலுக்கு ஏற்புடையவனவற்றைக் கண்டறிந்து, ஆய்வு நெறிப்படியும் கோட்பாடுகளின் அடிப்படையிலான கற்பித்தலைக் கொண்டும் **சிங்கப்பூர்க் கற்பித்தல் முறைமை** உருவாக்கப்பட்டுள்ளது. சிங்கப்பூர்ச் சூழலைப் பிரதிபலிக்கும் வண்ணம், இக்கற்பித்தல் முறைமை ஆர்க்கிட் மலர் வடிவத்தைக் கொண்டு அமைந்துள்ளது. சிங்கப்பூர்க் கற்பித்தல் முறைமை என்பது நம் சிங்கப்பூர்ப் பள்ளிகளில் பயன்மிகு கற்பித்தலும் கற்றலும் எவ்வாறு நடைபெறுகின்றன என்பதை வெளிப்படுத்துகின்றது. மேலும், மாணவர்களது கற்றலும் ஆசிரியர்களது கற்பித்தலும் குறித்த சிங்கப்பூர்க் கல்வியாளர்களின் நம்பிக்கைகளைக்கொண்டு இது வரையப்பட்டுள்ளது.

## கற்பித்தல் முறைமைகள்

கற்பித்தல் முறைமைகள் நான்கு **கற்பித்தல் செயல்முறைகளைக்** கொண்டு அமையப்பெற்றுள்ளன. அவற்றின் வாயிலாகக் **கற்பித்தலுக்கு முன்பு, கற்பித்தலின் போது, கற்பித்தலுக்குப் பின்பு ஆகிய ஒவ்வொரு சூழலிலும்** செயற்படுத்தத் தக்க கற்பித்தல் செயல்முறைகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.




அச்செயல்முறைகளை முறையே பின்பற்றியும் அவற்றைக் குறித்துச் சிந்தனை மறு ஆய்விலும் ஆசிரியர்கள் ஈடுபடுதல் வேண்டும். அப்போது, அவற்றின் தொடர்பாக வழங்கப்பட்டுள்ள இருபத்துநான்கு கற்பித்தல் கூறுகளைப் பொருத்திப் பார்ப்பதுடன், கற்பித்தல் செயற்பாடுகளைக் கருத்திற்கொண்டும் மாணவர்களின் கற்றல் தேவைகளுக்கேற்ப ஆசிரியர்கள் தங்கள் பாடங்களில் இவற்றைப் பயன்படுத்துவது அவசியமாகும்.

24 கற்பித்தல் கூறுகளுக்கான விளக்கங்கள் குறித்து மேலும் விவரங்கள் அறிய, Singapore Teaching Practice @ Opal 2.0 என்னும் இணைப்பைப் பார்க்கவும்.

## வேறுபடுத்தப்பட்ட கற்பித்தல்

மாணவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் பண்பாட்டுப் பின்புலம், நாட்டங்கள், திறன்கள், கற்றல் தேவைகள், கற்றல் பின்புலம் ஆகியவற்றின் அடிப்படையில் வேறுபடுகின்றனர். மாணவர்களிடையே இருக்கும் இந்தப் பன்முகத்தன்மையை நன்கு உணர்ந்து, அவர்களை மையமாகக்கொண்டு வடிவமைக்கப்படும் கற்பித்தலே வேறுபடுத்தப்பட்ட கற்பித்தல் என்பதாகும். சிங்கப்பூர் மொழிப்பாடக் கலைத்திட்டக் கோட்பாட்டில் குறிக்கப்பட்டிருக்கும் ‘ஒவ்வொரு பிள்ளையும் கற்க விரும்பும்; ஒவ்வொரு பிள்ளையாலும் கற்க முடியும்’ என்னும் நம்பிக்கைக்கேற்ப ஆசிரியர்கள் ஒவ்வொரு மாணவரின் கற்றல் தேவைகளுக்கு ஏற்பவும் அறிவுத்திறனுக்கு ஏற்பவும் கற்பித்தல் நடவடிக்கைகளை வடிவமைப்பது அவசியமாகும். இவ்வாறு ஆசிரியர்கள் செயற்படும்போது, கற்றல் ஒவ்வொரு மாணவருக்கும் அர்த்தமுள்ளதாக அமையும்.

வேறுபடுத்தப்பட்ட கற்பித்தலை மேற்கொள்ள ஆசிரியர்கள், சிங்கப்பூர்க் கற்பித்தல் முறைமையில் குறிப்பிடப்பட்டுள்ள கீழ்க்காணும் கூறுகளை ஆழமாகப் புரிந்துகொள்வது அவசியமாகும்:

- பாடப்பொருளையும் பாடநோக்கத்தையும் புரிந்துகொள்ளுதல்
- மாணவர்களையும் கற்றலையும் புரிந்துகொள்ளுதல்
- கற்பித்தல் வழிமுறைகளைப் புரிந்துகொள்ளுதல்

இவற்றைக் கருத்திற்கொண்டு ஆசிரியர்கள் பாடத்தைத் திட்டமிடும்போது, வேறுபடுத்தப்பட்ட கற்பித்தலில் எவற்றை வேறுபடுத்தலாம் என்பதில் நல்ல தெளிவு பெற்றிருப்பதும் அவசியமாகும். பாடப்பொருள், செயற்பாடு, வெளிப்பாடு, கற்றல் சூழல் ஆகிய நிலைகளில் வேறுபடுத்தப்பட்ட கற்பித்தல் நடைபெறும்.

### பாடப்பொருள்

**எதைக் கற்பிக்க வேண்டும்?**

மாணவர்களுக்கு எதைக் கற்பிப்பது என்பதையும் எத்தகைய மொழித்திறன்களில் பயிற்றுவிக்க வேண்டும் என்பதையும் முடிவுசெய்வது பாடப்பொருளாகும்.

### செயற்பாடு

**எப்படிக் கற்பிப்பது?**

மாணவர்களைப் பயன்முனைப்புமிக்க கற்றலில் ஈடுபடுத்துவதற்கு ஆசிரியர்கள் தகுந்த கற்றல் செயற்பாடுகளை வடிவமைக்க வேண்டும்.

### வெளிப்பாடு

**எத்தகைய கற்றல் நாட்டம்? எப்படி மதிப்பிடுவது?**

பலதரப்பட்ட மொழி நடவடிக்கைகளின் வாயிலாக மாணவர்கள் தம் கற்றலை வெளிப்படுத்த, ஆசிரியர்கள் வாய்ப்புகளை உருவாக்கித் தருவது கற்றல் கற்பித்தலில் முக்கியப் படிநிலையாகும்.

### கற்றல் சூழல்

**எப்படிப்பட்ட கற்றல் சூழல்?**

வகுப்பறைச்சூழலை அகச்சூழல் என்றும் புறச்சூழல் என்றும் பிரித்துப் பார்க்கலாம். மாணவர்களின் தனிநிலைக் கற்றலும் குழுநிலைக் கற்றலும் தரமாக அமைவதற்கு ஆசிரியர்கள் முறையான வகுப்பறை உத்திகளைக் கையாள வேண்டும். ஆதரவும் பாதுகாப்புமிக்க கற்றல் சூழலும் அமையும்போது சிறந்த கற்றல் கற்பித்தல் நடைபெறும்.

அறிதல்-புரிதல்-செய்தல் (KUD), ராஃப்ட் (RAFT), டியர்ட் (Tiered), திங்க்-டெக்-தோ (Think-Tac-Toe), பல்நோக்கு எண்ணத்துளிகள் (Multiple-Entry-Journal), பல்வகை நுண்ணறிவுத் திறன்கள் (MI), கூடிக்கற்றல் அமைப்புமுறைகள் (Cooperative Learning Structures) முதலிய கற்பித்தல் உத்திகளோடு பொருத்தமான வேறு பல உத்திகளையும் ஆசிரியர்கள் கையாண்டு மாணவர்களின் கற்றல் தேவைகளைக் கருத்திற்கொண்டு பாடத்தை வடிவமைத்துக் கற்பிக்கலாம்.

அதன்பின், அப்பாடத்தின் செயலாக்கத்தின்போது மாணவரின் கற்றல் இடைவெளிகளை அடையாளங்கண்டு அவற்றைக் குறைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அப்போதுதான் கற்றலுக்கு ஏதுவான சூழல் அமைந்து, மாணவரின் தன்னம்பிக்கை வலுப்பெறும். கற்பித்தலின்போது சேகரிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் ஆசிரியர்கள் பலதரப்பட்ட கற்றல் வாய்ப்புகளை மாணவர்களுக்கு உருவாக்கித் தர வேண்டும். இவ்வகையில் ஒவ்வொரு மாணவரின் முழு ஆற்றலையும் வளர்த்து, பிள்ளைகளை நாட்டிற்குப் பயனுள்ள குடிமக்களாகவும், துடிப்புடன் பங்களிக்கக்கூடியவர்களாகவும் உருவாக்க வேறுபடுத்தப்பட்ட கற்பித்தல் வழிவகுக்கும்.

மேலும் விவரங்கள் அறிய, வேறுபடுத்தப்பட்ட கற்பித்தல் என்ற இணைப்பைப் பார்க்கவும்.

## உடனிணைந்து கற்றல் அமைப்புமுறைகள்

உடனிணைந்து கற்றல் அமைப்புமுறைகள் எனப்படுவது இருவர் அல்லது இருவருக்கு மேற்பட்டோர் குழுநிலையில் மற்றக் குழுக்களோடு கற்றலில் இணைந்து செயற்படுவதாகும். இந்த அமைப்புமுறை மாணவர்கள் அதிகமாக ஒன்றிணைந்து கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுப் பொறுப்புகளை நிறைவேற்றிக் கற்றலில் துடிப்புமிக்கவராகத் திகழ வழிவகுக்கிறது. தம் குழுவிலுள்ள பிற மாணவரின் செயற்பாட்டுக்குத் துணைபுரிந்து சிக்கல்களுக்குத் தீர்வு காணுதல், பணிகளை முழுமைப்படுத்துதல், தயாரிப்பை உருவாக்குதல் முதலான திறன்களை வளர்ப்பதற்கும் இந்த உடனிணைந்து கற்றல் அமைப்புமுறைகள் துணைபுரிகின்றன. ஒவ்வொரு மாணவரும் தமது திறனுக்கேற்ப இயங்குவதற்கும் தனித்திறன்களை வளர்த்துக்கொள்வதற்கும் ஆர்வங்கொள்வர். உடனிணைந்து கற்றல் ஐந்து அடிப்படைக் கூறுகளை உள்ளடக்கியுள்ளது. அவை: உடன்பாட்டு நிலையில் ஒருவர் மற்றொருவரைச் சார்ந்திருத்தல் (Positive Interdependence), தனிநிலையிலும் குழுநிலையிலும் பொறுப்பேற்றுக்கொள்ளுதல் (Individual and group accountability), தனிநபர் திறன்களும் சிறு குழுவில் இயங்கும் திறன்களும் பெறுதல் (Interpersonal and small group skills), நேருக்கு நேர் கருத்துப்பரிமாறுதலை ஊக்குவித்தல் (Face-to-face promotive interaction), குழுவாகச் செயற்படுதல் (Group processing).

மேலும் விவரங்கள் அறிய, உடனிணைந்து கற்றல் என்னும் இணைப்பைப் பார்க்கவும்

## கூடிக்கற்றல் அமைப்புமுறைகள்

கூடிக்கற்றல் அமைப்புமுறைகள் என்பது பல்வேறு கற்பித்தல் நடவடிக்கைகள் இடம்பெறுகையில், மாணவர்களைப் பல்வேறு கற்றல் பணிகளில் ஈடுபடுத்திச் சிறிய குழுக்களாக இணைத்துச் செயற்படுவதற்குத் துணைபுரிபவையாகும். இவ்வகையான அமைப்புமுறைகள் மாணவர்களிடையே சுயமாகக் கற்கும் திறன், மற்றவர்களுடன் இணக்கமாகச் செயற்படும் திறன், சமூகத் திறன் முதலியவற்றை வளர்க்கின்றன. அவற்றுடன் பிறரோடு கூடிப் பழகிச் செயற்படுவதற்கும் பகிர்ந்து பொறுப்பேற்பதற்கும் ஊக்குவிக்கின்றன. கூடிக்கற்றலில் குறிப்பிட்ட வகுப்பறை நுட்பங்கள் (Techniques) கையாளப்பெற்று ஒருவரையொருவர் சார்ந்திருந்து கற்கின்ற ஒத்திசைவை (Inter-dependence) வளர்க்கிறது. இவ்வாறு மாணவர்கள் கருத்துப்பரிமாற்றத்தில் ஈடுபட்டு, ஒன்றுபட்ட சமூகமாகப் புத்தறிவு உருவாக்கம் பெற்று மேம்படுகிறார்கள். மேலும், தனிப்பட்ட கருத்துப்பரிமாற்றம் (Communication) இடம்பெறுவதற்கான முக்கிய நான்கு கூறுகளான மொழிப்பணிகள் (Language Tasks), தொடர்புக்கான விருப்பம் (Willingness to Communicate), வேறுபடும் பாணிகள் (Style Differences), குழு இயக்கவியல் (Group Dynamics) ஆகியவற்றைச் சார்ந்தே நடந்தேறும்.

உடனிணைந்து கற்றல், கூடிக்கற்றல் ஆகிய இரண்டுக்கும் முக்கிய வேறுபாடுகள் உள்ளன. உடனிணைந்து கற்றல் என்பது இணையாகவோ குழுவாகவோ இணைந்து பணிபுரிந்து குறிப்பிட்ட பொதுவான இலக்குகளை (common goals) அடைவதற்கு உதவும். கூடிக்கற்றலோ ஒன்றிணைந்து பணிபுரிந்து பகிரப்பட்ட இலக்குகளை (shared goals) அடைவதற்குத் துணைபுரியும்.

## மின்வழிக் கற்பித்தல் முறைமை

மின்வழிக் கற்பித்தல் என்பது தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திக் கற்றலில் மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்ட உதவும் வழிமுறையாகும். இத்தகு கற்பித்தல் வகுப்பறைப் பங்கேற்பு, தொடர்பிணைப்பு, எண்ணப்பிரதிபலிப்பு ஆகியவற்றை வளர்ப்பதற்கு வழிகோலும்.

### பங்கேற்பு

மின்வழிக் கற்பித்தல் முறைமை வாயிலாக வேறுபட்ட வீட்டுச் சூழல்களிலிருந்து வரும் மாறுபட்ட தொடங்குநிலைகளைக் கொண்ட மாணவர்களை ஒரே நேரத்தில் கற்றலில் ஈடுபடுத்த முடியும்.

### தொடர்பிணைப்பு

மாணவர்கள் சகமாணவர்களுடன் இணைந்து கற்றலில் ஈடுபடும்போது தங்கள் வகுப்பிலும் வகுப்பிற்கு அப்பாலும் கூடுதலான அளவில் தொடர்பிணைப்பை வளர்த்துக்கொள்ள முடியும். இது மாணவர்கள் தங்களின் புத்தறிவைப் பெருக்கிக்கொள்ள உதவுவதோடு புதிய சாத்தியப்பாடுகளைக் கண்டறிந்து உடனிணைந்து செயற்படவும் வாய்ப்பை ஏற்படுத்தித் தரும்.

**எண்ணப்பிரதிபலிப்பு**

ஆசிரியர் தொழில்நுட்பத்துடன் கூடிய பாடத்தைக் கற்பிக்கும்போது, மாணவர்கள் தற்சிந்தனை ஆய்தலில் ஈடுபடவும், கற்றல் குறித்துச் சிந்திக்கவும் உரிய காலத்தில் வழங்கப்படும் கருத்துத்தெரிவிப்பைப் பெறவும், தங்கள் ஆற்றல்பற்றிய கூடுதல் விழிப்புணர்வைப் பெறவும் முடியும். இதனால் மாணவர்களுக்குத் தம் கற்றலை அடுத்தடுத்த நிலைகளுக்கு முன்னெடுத்துச் செல்லும் அனுபவமும் கிடைக்கும்.

இந்த மின்வழிக் கற்பித்தல் முறைமை பற்றிய கோட்பாடுகளை விளக்கவும் செயற்படுத்தவும் பின்வரும் நான்கு கூறுகள் அடையாளங்காணப்பட்டுள்ளன. அவை:

**1. ஆக்கச் சீரமைவு**

மொழிப்பாடக் கலைத்திட்டம் பரிந்துரைத்துள்ள கற்றல் விளைவுகள், வகுப்பில் அல்லது வகுப்புக்கு வெளியே நிகழும் கற்றல் கற்பித்தல்சார் நடவடிக்கைகள், மதிப்பீடு ஆகிய மூன்று கூறுகளை உள்ளடக்கியது.

**2. கற்றல் அனுபவங்கள்**

கைவரப்பெறுதல், வினவல், கலந்துரையாடல், உடனிணைந்து செயற்படுதல், பயிற்சியளிப்பு, படைப்பு என அறுவகைப்படும் கற்றல் அனுபவங்களை ஆசிரியர்கள் மாணவர் கற்றல் தளத்திலோ பிற தளங்களிலோ வடிவமைத்து நடத்தலாம்.


**3. துடிப்புமிக்க கற்றல் செயற்பாடுகளும் கற்றல் கருத்துப்பரிமாற்றங்களும்**

கற்போர் கற்றல் அனுபவங்களை இலகுவாகவும் ஆழமாகவும் பெறவேண்டுமானால், கற்றல் செயற்பாடுகளும் கற்றல் கருத்துப்பரிமாற்றங்களும் பொருத்தமானவையாகவும் முறையானவையாகவும் நிகழ்வதை ஆசிரியர்கள் உறுதிசெய்ய வேண்டும்.

**4. தொழில்நுட்பத்தின் முக்கியப் பயனாக்கங்கள்**

மின்வழிக் கற்பித்தல் முறைமை ஒருங்கிணைக்கப்பட்ட பாடத்தில் கற்போர் பின்புலம், பாடக் குறிக்கோள்கள், கற்பித்தல் முறைமைகள், மதிப்பீட்டு முறைமைகள் முதலியவற்றைக் கருத்திற்கொண்ட பிறகே தொழில்நுட்பத்தின் முக்கியப் பயனாக்கங்களை ஆசிரியர்கள் தெரிவுசெய்ய வேண்டும். தொழில்நுட்பத்தைச் சரியான முறையில் கையாண்டால்தான் கற்றல் கற்பித்தலின் தரநிலை அதிகரிக்கும் என்பதை அவர்கள் உணரவேண்டும்.

## மாணவர் கற்றல் தளத்தின் கற்பித்தல் முறைமை சார்ந்த ஆதார நடவடிக்கை 2.0

| முதற்கட்டம் | இரண்டாம் கட்டம் | மூன்றாம் கட்டம் |
|---|---|---|
| **கற்றல் விளைவுகளை அமைத்தல்** | **தொழில்நுட்பத்தோடுகூடிய துடிப்புமிக்க கற்றலை வடிவமைத்தலும் வழிநடத்தலும்** | **தரமான கற்றலை மதிப்பிடுதல்** |
| 1. இந்தப் பாடத்தலைப்பில் என் மாணவர்களின் புரிந்துணர்வுக்குத் தேவையான மையக் கருத்தமைவுகள், திறன்கள், மனப்போக்குகள், விழுமியங்கள் யாவை?<br>2. என் மாணவர்கள் அவசியம் வளர்த்துக்கொள்ள வேண்டிய 21-ஆம் நூற்றாண்டுத்திறன்கள் (புதிய ஊடகப் படிப்பறிவுகள் உட்பட) யாவை?<br>3. மாணவர்கள் கற்கின்றனர் என்பதை அறிவுறுத்தும் வெற்றிக்கான அளவைகள் யாவை?<br>4. என் மாணவர்கள் கற்கின்றனர் என்பதைக் கண்டறிய எத்தகைய சான்றாதாரத்தை நான் பயன்படுத்தலாம்?<br>5. மாணவர்கள் கற்றல் விளைவுகளை அடைவதற்கு எந்தக் கற்றல் அனுபவ வகைமை உதவும்?<br>6. நான் தொழில்நுட்பத்தின் துணைகொண்டு எங்ஙனம்:<br>• கற்றலுக்கான மதிப்பீட்டிற்குத் துணைபுரிவது<br>• கருத்தமைவு மாற்றத்தை வளர்ப்பது<br>• வேறுபடுத்துதலை வழங்குவது<br>• ஒருசேரக் கற்றலை வழிநடத்துவது<br>• ஓர்ந்துணரும் அறிவை வளர்ப்பது<br>• தனிப்பயனாக்குதலுக்கு வழிவகுப்பது<br>• கற்றலுக்குரிய ஆதார நடவடிக்கையை வடிவமைப்பது | 7. தொழில்நுட்பத்தோடுகூடிய துடிப்புமிக்க கற்றலை ஊக்குவிக்கும் வகையில் நான் எவ்வாறு கற்றல் நடவடிக்கைகளை வடிவமைப்பேன்?<br>• கற்றலைச் செயற்படுத்துவதன்வழி<br>• சிந்தித்தலையும் கலந்துரையாடலையும் வளர்ப்பதன்வழி<br>• கற்றல் வெளிப்பாட்டினை வழிநடத்தும்வழி<br>• கண்காணித்தலையும் கருத்துத்தெரிவிப்பையும் வழங்குவதன்வழி<br>8. தொழில்நுட்பக் கூறுகளின் உதவியோடு எவ்வாறு துடிப்பான கற்றலுக்கு ஏற்ற வகையில் நான் கருத்துப்பரிமாற்றங்களை வழிநடத்துவது?<br><br> | 9. தொழில்நுட்பத்தோடுகூடிய கற்றலின் சான்றாதாரம் எவ்வாறு கற்றல் விளைவுகள் அடையப்பெற்றன என்பதைக் காட்டும்?<br>10. தொழில்நுட்பத்தோடு வடிவமைக்கப்பட்ட கற்றல் நடவடிக்கைகள் எவ்வகையில் பயன்முனைப்புமிக்கவையாக அமைந்துள்ளன? |

**ஆக்கச் சீரமைவு**

**கற்றல் அனுபவங்கள்**

**தொழில்நுட்பத்தின் முக்கியப் பயனாக்கங்கள்**

**துடிப்புமிக்க கற்றல் செயற்பாடுகளும் கற்றல் கருத்துப்பரிமாற்றங்களும்**

இந்த நான்கு கூறுகளையும் மின்வழிக் கற்பித்தலை அடியொற்றி வடிவமைக்கப்பட்ட பாடங்களில் காண முடியும். இவை எவ்வாறு மாணவர் கற்றல் தளத்தின் கற்பித்தல் முறைமை சார்ந்த ஆதார நடவடிக்கை 2.0-இல் இடம்பெறுகின்றன என்பதை இந்த அட்டவணையில் காணலாம்.

மேலும் விவரங்கள் அறிய, மின்வழிக் கற்பித்தல் முறைமை என்னும் இணைப்பைப் பார்க்கவும்.

## 3.3 உரையாடல்வழிக் கற்பித்தல்

உரையாடல்வழிக் கற்பித்தல் என்பது கற்றல் கற்பித்தலை உரையாடலின்வழி மேற்கொள்வதாகும். இது ஆசிரியரை மையப்படுத்துவதாக அமையாமல், ஆசிரியர்-மாணவர் இருவரையும் உள்ளடக்குவதாக அமையும். இக்கற்பித்தலின்போது நிகழும் உரையாடல் வரையறுக்கப்பட்ட பாடத்தோடு தொடர்புடையதாகவும் அதைப்பற்றி மாணவர்களின் புரிந்துணர்வை ஆழப்படுத்துவதாகவும் அமைந்திருக்கும். இக்கற்பித்தல் முறைமை மாணவர்களின் சிந்தனைத் திறனை மேம்படுத்துவதற்கும் அவர்களது அறிவை விரிவுசெய்வதற்கும் உதவுகின்றது.

மாணவரை மையப்படுத்தும் இக்கற்பித்தல் முறைமை ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களின் கற்றல் தேவைகளை முழுமையாகப் புரிந்துகொண்டு அதற்கேற்பப் பாடங்களை வடிவமைக்கவும் உதவுகின்றது. உரையாடல்வழிக் கற்பித்தல் மாணவர்களுக்குக் கற்றலில் முழு உரிமையை அளிப்பதோடு அவர்களைப் பொறுப்புமிக்கவர்களாகவும் உருவாக்குகிறது. மாணவர்கள் வகுப்பு நிலையிலும் குழுநிலையிலும் சிந்தித்து வினாக்கள் எழுப்பவும் விடையளிக்கவும் இம்முறைமை உதவுகிறது. ஆசிரியர்கள் மாணவர்கள் கூறும் கருத்தை மதிப்பீடு செய்பவர்களாகவும் சிந்திக்கும் திறனை மேம்படுத்துபவர்களாகவும் இருக்க வேண்டும்.

உரையாடல்வழிக் கற்பித்தல், வகுப்பில் தரமான இருவழிக் கருத்துப்பரிமாற்றம் நிகழ வழிவகுக்கும். எனினும், இதைப் பேசுதல் திறனுக்கு மட்டுமே பயன்படுத்தாமல் முழுமையானதொரு கற்பித்தல் அணுகுமுறையாகக் கையாள வேண்டும். உரையாடல்வழிக் கற்பித்தல் ஆசிரியரின் வினாவுக்கு விடை கூறும் விதத்திலோ ஆசிரியர் கூறுவதைக் கேட்டுச் சொல்லும் விதத்திலோ அமையக்கூடாது என்பதை ஆசிரியர்கள் நினைவிற்கொள்ள வேண்டும்.

உரையாடல்வழிக் கற்பித்தலில் வகுப்பறையை வழிநடத்துவதற்குப் பின்வருவனவற்றைக் கருத்திற்கொள்ள வேண்டும்.




**மற்றவர் கூறுவதைச் செவிமெடுத்தல்**



**செவிமெடுத்ததைப்பற்றிச் சிந்தித்தல்**



**மற்றவர்கள் சிந்திக்க நேரம் அளித்தல்**



**மாற்றுக்கருத்துகளுக்கு மதிப்பளித்தல்**

## கேள்வி கேட்பதற்குரிய படிநிலைகள்:

பாட நேரத்தின்போது தரமிக்க இருவழிக் கருத்துப்பரிமாற்றம் நிகழ ஆசிரியர்கள் பொருத்தமான இடங்களில் நிறுத்தி மாணவர்களிடம் கேள்விகள் கேட்க வேண்டும். அந்தக் கேள்விகள் மாணவர்களின் சிந்திக்கும் திறனைத் தூண்டுவதோடு படிப்படியாக அவர்களின் உயர்சிந்தனைத் திறன்களை மேம்படுத்துவதற்கு வழிவகுப்பவையாகவும் அமைய வேண்டும்.

## உரையாடல்வழிப் படித்தல் PEER உத்திமுறை

| | |
|---|---|
| **தூண்டுதல்** **Prompt** | பாடத்தை அறிமுகப்படுத்தும்போது அதைப்பற்றிக் கேள்விகள் கேட்டு மாணவர்களின் முன்னறிவைத் **தூண்டுதல்**. |
| **மதிப்பிடுதல்** **Evaluate** | உரையாடலின்போது மாணவர்கள் கூறும் பதிலை **மதிப்பீடு** செய்து பாராட்டுதல். |
| **விரிவாக்குதல்** **Expand** | மாணவர்கள் கூறும் கருத்துகளை ஆசிரியர் **விரிவுபடுத்திக்** கூறுதல். |
| **திரும்பச் சொல்லுதல்** **Repeat** | கதையிலுள்ள படங்களையும் சொற்களையும் மீண்டும் காட்டிக் கருத்துகளை **முழுமையாக மீண்டும் கூறுதல்**; மாணவர்கள் கூறும் சரியான சொற்களையும் தொடர்களையும் மீண்டும் கூறுதல். |


## உரையாடல்வழிப் படித்தல்

ஒரு மொழியைக் கற்கத் தொடங்கும் காலத்தில் பிள்ளைகளுக்கு அடிக்கடி கதைகளைப் படித்துக் காட்டுவது அவசியமாகும். வழக்கமாகப் பெற்றோரும் ஆசிரியர்களும் கதைகளைப் படித்துக்காட்டும்போது பிள்ளைகள் கூர்ந்து கேட்டுக்கொண்டிருப்பார்கள். உரையாடல்வழிப் படித்தலில் கதை கூறுபவரும் கதை கேட்பவரும் உரையாடிக்கொள்ள வேண்டும். ஆசிரியர்களும் பெற்றோர்களும் பிள்ளைகளைக் கதை கூறுபவர்களாக வளர்த்துக்கொள்ள உதவ வேண்டும். அவர்கள் பிள்ளைகள் கூறும் கதையைக் கூர்ந்து கவனிப்பவர்களாகவும் வினாக்கள் கேட்பவர்களாகவும் பார்வையாளர்களாகவும் இருக்க வேண்டும்.

ஒருவர் கூறும் கதையைக் கேட்பது மட்டுமன்றி உற்சாகமாகப் பங்கேற்கவும் முயலும் பிள்ளையால்தான் எளிதில் வாசிப்புத்திறனைக் கைவரப்பெற இயலும். அதற்கு உரையாடல்வழிப் படித்தல் உதவுகிறது. கதைப் புத்தகத்தின் தலைப்பு, அதன் ஒவ்வொரு பக்கத்திலும் உள்ள படங்கள் முதலானவற்றைச் சுட்டிக்காட்டி, அவற்றைப்பற்றி மாணவர்களிடம் உரையாடுவதற்கு, உரையாடல்வழிப் படித்தல் உத்திமுறை உதவுகின்றது.

ஆசிரியர் துணையோடு வாசிக்கும் உரையாடல்வழிப் படித்தலின்போது PEER, CROWD ஆகிய முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றின் வாயிலாக வினாக்கள் எழுப்பிக் கலந்துரையாடும்போது மாணவர்களது சொல்வளமும் பேச்சுத்திறனும் மேம்படும்.

**உரையாடல்வழிப் படித்தல்**




மேலும் விவரங்கள் அறிய உரையாடல்வழிக் கற்பித்தல் என்னும் இணைப்பைப் பார்க்கவும்.

## 3.4 வினவல்வழிக் கற்றல்

வினவல்வழிக் கற்றல் என்பது ஆக்க அணுகுமுறையை (constructivist approach) அடிப்படையாகக் கொண்டமைந்த கற்றல் முறைமையாகும். ஆசிரியர் பாடத்தைக் கருத்து விளக்கநிலையில் நிகழ்த்தாமல் வினாக்கள் தொடுப்பதன் வழியாகவும், சிக்கல்களை அடையாளங்காண்பதன் வழியாகவும் சூழ்நிலையை முன்வைப்பதன் வழியாகவும் வழிநடத்திச் செல்வார். வினவல்வழியாகப் பல வினாக்களைத் தொடுத்துச் சிக்கலுக்குரிய பகுதியைக் கண்டறியச் செய்வார். இதன்வழியே, மாணவர்களின் பாடப்பொருளறிவை வளப்படுத்துவார். வினவல்வழிக் கற்றலின்போது ஆசிரியர்கள் மாணவர்களது சிந்தனையைத் தூண்டுபவராகவும் வழிகாட்டியாகவும் செயற்பட்டு, விரும்பத்தக்க கற்றல் விளைவுகளை அடைய ஆதரவு வழங்குவார்கள். மாணவர்களும் வினாக்கள் எழுப்புவதன்மூலம் கற்றலில் ஈடுபடுவர். இம்முறை உயர்சிந்தனைத் திறன்களின் வளர்ச்சிக்குப் பெரிதும் பொருந்துவதாகும்.

வினவல்வழிக் கற்பித்தலில் ஆசிரியர் முதலில் கற்பிக்க விரும்பிய பாடத்தின் நோக்கத்தை உறுதிசெய்தல் வேண்டும். மாணவர்கள் ஊக்கத்தோடும் துடிப்போடும் வினவலில் ஈடுபடும் வண்ணம் ஆர்வமூட்டும் வகையில் பாடத்தை வழிநடத்திச் செல்லுதல் வேண்டும். மாணவர்கள் இயல்பாக உடனிணைந்து கற்றலில் ஈடுபடும் வண்ணம் வினவல் நடவடிக்கைகளை வடிவமைத்து நடத்துதல் வேண்டும். பலவகையான வினாக்களின் பயன்பாடு மாணவர்களின் கற்றலை ஆழப்படுத்துவதோடு கருத்துரு அறிவு உருவாக்கத்திற்கும் துணைபுரிகின்றது. இது மாணவர்களின் தற்சிந்தனை ஆய்தலை மேம்படுத்துகிறது. வினவல்வழிக் கற்றலில் மாணவர்களின் தயார்நிலைக்கேற்பச் செயற்பணிகளை அர்த்தமுள்ளதாக அமைப்பதன்வழி மாணவர்களின் திறன் மேம்பாடு காண்கிறது.

ஆய்வாளர், Lam, E.(2004) பரிந்துரை செய்த வினவல்வழிக் கற்றலுக்கான 5E கற்றல் சுழற்சியைக் காண்க.

**ஈடுபடுத்துதல்** (Engagement) → **தேடுதல்** (Exploration) → **விளக்குதல்** (Explanation) → **விரிவுபடுத்துதல்** (Elaboration) → **மதிப்பிடுதல்** (Evaluation)

மாணவர்களின் முன்னறிவு, முன்னனுபவம், தேவை, நாட்டம், ஈர்ப்பு ஆகியவற்றை உறுதிசெய்துகொண்டு மாணவர்களை வினவல்வழிக் கற்றலுக்குத் தயார்படுத்துவதற்கும் ஆர்வங்கொள்ளச் செய்வதற்கும் இவ்விரு நிலைகள் உதவுகின்றன.

இம்மூன்று நிலைகள் மாணவர்களின் சிந்தனை வளர்ச்சிக்கும் கற்றலை ஆழப்படுத்துவதற்கும், தற்சிந்தனையை மேம்படுத்துவதற்கும் துணைபுரிகின்றன. மாணவர்கள் பாடப்பொருளையொட்டி விளக்கமளிக்க முற்படும்போதும், அதை விரிவுபடுத்தும்போதும், மதிப்பீடு செய்யும்போதும் வினவல்வழிக் கற்றலில் ஈடுபடுகின்றனர்.

5E கற்றல் சுழற்சியின்படி, அறிவுநிலையில் இயங்கும் மாணவர்கள் பன்முகப் பார்வையோடும் (விளக்குதல், பொருள்கொள்ளுதல், பயன்படுத்துதல், நோக்குதல், ஒத்துணர்தல், தன்னை அறிதல்) புரிந்துணர்வோடும் இயங்குவது மிகவும் முக்கியம்.

மேலும் விவரங்கள் அறிய, வினவல்வழிக் கற்றல் என்னும் இணைப்பைப் பார்க்கவும்.

இவ்வியலில் கூறப்பட்டுள்ள கற்பித்தல் முறைமைகள் யாவும் பரிந்துரைக்கப்பட்ட கற்பித்தல் முறைமைகளே. இவற்றை ஆசிரியர்கள் தங்கள் வகுப்பறைக் கற்பித்தலைத் திட்டமிடவும் மேற்கொள்ளவும் வழிகாட்டிகளாகப் பயன்படுத்திக்கொள்ளலாம். இவற்றுடன் வேறு சில பொருத்தமான கற்பித்தல் முறைமைகளையும் பயன்படுத்தி, வகுப்பறையில் மகிழ்வுறு கற்றல் நிலவவும் மாணவர்களின் மொழித்திறன்களை மேம்படுத்தவும் ஆசிரியர்கள் முற்படலாம்.




# மதிப்பீடு

# சிங்கப்பூர் மொழிப்பாடக் கலைத்திட்டக் கோட்பாட்டில் மதிப்பீடு

கற்பவரை மையப்படுத்தும் சமச்சீரான மதிப்பீடு மாணவர்களின் முழுமையான கற்றலுக்கு வழிவகுக்கிறது. சிங்கப்பூர்க் கற்பித்தல் முறைமையில் மதிப்பீடும் கருத்துத்தெரிவிப்பும் இன்றியமையாத இடத்தைப் பெறுகின்றன. அதன்படி மதிப்பீடு என்பது புரிந்துணர்வை உறுதிப்படுத்துதல், கருத்துத்தெரிவித்தல், அர்த்தமுள்ள செயற்பணிகளை அமைத்தல், சுயமுனைப்புக்கற்றலை ஆதரித்தல் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

மதிப்பீடு பற்றிய மேல் விவரங்களைப் பெற, Assessment Portal @ Opal2.0 என்னும் இணைப்பைப் பார்க்கவும்.

## 4.1 முழுமையான மதிப்பீடு

ஒரு பாடக்கலைத்திட்டம் முழுமைபெற மதிப்பீடு இன்றியமையாததாகும். கற்றலையும் கற்பித்தலையும் மதிப்பீடு ஒருங்கிணைக்கிறது. மதிப்பீடு வழங்கும் கருத்துகள் கற்றலையும் கற்பித்தல் நடைமுறைகளையும் மேம்படுத்துவதற்குத் துணைபுரிகின்றன. பாடத்திட்டம், கற்பித்தல் முறைகள் ஆகிய இரண்டோடு இணைந்து இயங்கக்கூடிய இன்றியமையாத கூறாக மதிப்பீடு அமைந்துள்ளது. கற்றல் கற்பித்தலின் பயன்விளைவை அறிய உதவும் மதிப்பீடு, கற்பித்தலுக்கு முன்பும் கற்பித்தலின்போதும் கற்பித்தலுக்குப் பின்பும் நிகழவேண்டும். இது மாணவர்களின் மொழித்திறன்களையும் சிந்தனைத் திறன்களையும் வளர்ப்பதில் முக்கியப் பங்காற்றுவதால், ஆசிரியர்கள் மதிப்பீட்டினைக் கவனமாகச் செயற்படுத்த வேண்டும். கற்றலுக்கான மதிப்பீட்டை வலியுறுத்தும் முறைசாரா மதிப்பீடும் கற்றலை மதிப்பிடும் முறைசார்ந்த மதிப்பீடும் முறையாக அமையும்போது மதிப்பீடு அர்த்தமுள்ளதாகிறது. இவ்விரு மதிப்பீட்டையும் மேற்கொள்ளும்போது ஆசிரியர்கள் அவற்றுக்கிடையே சமச்சீர்மையைக் கருத்திற்கொள்ள வேண்டும். இத்தகைய மதிப்பீடு மாணவர்களது கற்றல் இடைவெளிகளை அடையாளங்காணவும் கற்றலில் அவர்கள் பெறும் தேர்ச்சிநிலையை முறையாகக் கண்டறிந்து கற்பித்தலை மேம்படுத்தவும் உதவும்.

## 4.2 சமச்சீரான மதிப்பீடு

மாணவரை முன்னிலைப்படுத்தி அமைவதே சமச்சீரான மதிப்பீடு. அது மாணவர்கள் தங்களைத் தாங்களே சுய மதிப்பீடு செய்வதற்கும் தங்கள் கற்றலுக்குப் பொறுப்பேற்பதற்கும் வழிவகுக்கிறது. பாடத்திட்டம், பாடக்களங்கள், கற்றல் விளைவுகள், பயிற்றுமுறைகள், பள்ளித் தேவைகள் முதலானவற்றைக் கருத்திற்கொண்டு மதிப்பீட்டைச் சரியாகத் திட்டமிடுவது சமச்சீரான மதிப்பீட்டுக்கு வழிவகுக்கும். சமச்சீராக நிகழும் மதிப்பீடு, கற்றல் இலக்குகளை அடைவதில் மாணவர்கள் எந்நிலையில் இருக்கின்றனர் என்பதைக் கண்டறிவதற்குச் சான்றாக அமையும்.

## கற்பவரை முன்னிலைப்படுத்தும் சமச்சீரான மதிப்பீடு, மாணவர்களது:




கற்பித்தலோடு மதிப்பீட்டை ஒருங்கிணைத்துத் திட்டமிடவும் அதற்கேற்ற கற்பித்தல் உத்திகளையும் மதிப்பீட்டுப் பணிகளையும் தேர்ந்தெடுத்து வடிவமைக்க வேண்டும். கற்பவரை முன்னிலைப்படுத்தும் சமச்சீரான மதிப்பீட்டைத் திட்டமிடும்போது, அது முழுமையானதாகவும் ஏற்புடையதாகவும் நம்பகத்தன்மையுடையதாகவும் இருப்பதைப் பின்வரும் கூறுகளின்வழி உறுதிசெய்ய வேண்டும்:

- மதிப்பீட்டின் நோக்கத்தைத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.
- மாணவரின் பின்புலம், கற்றல் தேவை, தொடங்குநிலை ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு பொருத்தமான மதிப்பீட்டுப் பணிகளை வடிவமைக்க வேண்டும்.
- ஒரு குறிப்பிட்ட திறனில் மாணவர்களை மதிப்பிடுவதற்குமுன் அந்தத் திறனில் பயிற்சி அளிப்பதற்கும் பயிற்சி பெறுவதற்கும் போதுமான கால அளவு இருப்பதை உறுதிசெய்தல் வேண்டும்.
- மாணவர்களது கற்றலையும் செயற்பாட்டையும் மேம்படுத்துவதற்குரிய தரமான கருத்துத்தெரிவிப்பை வழங்க வேண்டும்.
- கற்றலையும் மதிப்பீட்டையும் தொடர்புபடுத்தி, ஒவ்வொரு கற்றல் ஆண்டிற்கும் நிலைக்கும் ஏற்புடைய பொருத்தமான தேர்வு விவர அட்டவணைகளைத் தயாரிக்க வேண்டும்.
- முறைசாரா, முறைசார்ந்த மதிப்பீடுகளை நிகழ்த்துவதற்குப் பொருத்தமானதாகவும் முழுமையானதாகவும் உள்ள பகுப்பாய்வு மதிப்பீட்டுக் கருவிகளைத் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்த வேண்டும்.

## 4.3 மதிப்பீட்டின் வகைகள்

மதிப்பீடு என்பது **முறைசாரா மதிப்பீடு, முறைசார்ந்த மதிப்பீடு** என இருவகைப்படும். ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களை மதிப்பிட எத்தகைய மதிப்பீட்டைப் பயன்படுத்த வேண்டும் என்பது மதிப்பீட்டின் நோக்கத்தைப் பொறுத்தே அமையும்.

### 4.3.1 முறைசாரா மதிப்பீடு

முறைசாரா, முறைசார்ந்த என்னும் இருவகை மதிப்பீட்டு முறைகளுள் எத்தருணத்தில் எதனைப் பயன்படுத்துவது என்னும் தெளிவு ஆசிரியர்களுக்கு இருப்பது மொழி கற்றல் கற்பித்தலில் இன்றியமையாததாகக் கருதப்படுகிறது. கற்றல் கற்பித்தலும் முறைசாரா மதிப்பீடும் பின்னிப்பிணைந்து செயற்படுகின்றன. இம்மதிப்பீடு மாணவர்கள் வரையறுக்கப்பட்ட கற்றல் குறிக்கோள்களையும் அடைவுநிலைகளையும் அடையப் பெரிதும் உதவும். கற்பித்தலின்போதே நிகழும் முறைசாரா மதிப்பீடு மாணவர்கள் மொழித்திறன்களில் பெற்றுள்ள வளர்ச்சிநிலை, கற்றலில் எதிர்நோக்கும் இடர்ப்பாடுகள் முதலானவற்றை ஆசிரியர்கள் தொடர்ந்து கண்காணிப்பதற்கும் அதற்கேற்பத் தம் கற்பித்தலைத் திட்டமிடுவதற்கும் உதவுகிறது. மாணவர்களின் கற்றலை மேம்படுத்த அவர்களைத் தற்சிந்தனை ஆய்தலில் ஈடுபடுத்துவதற்கும் முறைசாரா மதிப்பீடு உதவுகிறது.

**முறைசாரா மதிப்பீட்டைச் செயற்படுத்துவதற்குரிய சில உத்திமுறைகள்**

- வினா எழுப்புதல்
- கருத்துத்தெரிவித்தல்
- உற்றுநோக்கல்
- கருத்துரையாடல்
- சுய மதிப்பீடு / சக மாணவர் மதிப்பீடு / ஆசிரியர் மதிப்பீடு / பெற்றோர் மதிப்பீடு
- செயல்திறன் மதிப்பீடு
- செயல்திறன் கோப்பு

**மதிப்பீட்டுக் கருவிகள்**

வகுப்பறையில் மாணவரின் கற்றலும் ஆசிரியரின் கற்பித்தலும் மேம்படவும் அவற்றில் ஆக்கபூர்வமான மாற்றங்களைக் கொண்டுவரவும் மதிப்பீட்டுக் கருவிகள் உதவுகின்றன. மதிப்பீட்டுக் கருவிகள்:

- தகுதிநிலை விளக்கக்குறிப்புகள்
- சரிபார்ப்புப் பட்டியல்
- படிவங்கள் (கருத்துரு, உற்றுநோக்கல், எண்ணப்பிரதிபலிப்பு முதலியவை)
- போக்குவரத்து விளக்கு வண்ணங்கள், கட்டைவிரல் உத்தி
- மாதிரிப்படைப்புகள்

## சுய மதிப்பீடும் சக மாணவர் மதிப்பீடும்

சுய மதிப்பீடு மாணவர்களின் தனிநிலை வளர்ச்சிக்கும் சக மாணவர் மதிப்பீடு பிறரைப்பற்றிக் கருத்துத்தெரிவிக்கும்போது கூருணர்வுடன் செயற்படுவதற்கும் உதவுகின்றன. கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரைச் சுய மதிப்பீட்டிலும் சக மாணவர் மதிப்பீட்டிலும் ஈடுபடுத்துவது அவர்கள் தத்தம் கற்றல் நிலைப்பாட்டினை உறுதிசெய்வதற்கு உதவுகிறது. ஆசிரியர் வழங்கும் தகுதிநிலை விளக்கக்குறிப்புகளின் அடிப்படையில் தம்மையும் சக மாணவரையும் மதிப்பீடு செய்யும்போது மாணவர்கள் தங்கள் கற்றல்நிலையை உறுதிப்படுத்திக்கொள்கின்றனர்.

## தகுதிநிலை விளக்கக் குறிப்புகள்

மதிப்பிடுவதற்குரிய அளவைகளும் மாணவர்கள் அடைய வேண்டிய செயல்திறன்களுக்குரிய தகுதிநிலைகளும் அவற்றுக்கான விளக்கங்களும் தகுதிநிலை விளக்கக்குறிப்புகளில் இடம்பெற வேண்டும். ஒவ்வொரு வகுப்பிற்கும் உரிய மாணவர்கள் அடைய வேண்டிய கற்றல் திறன்களைக் கருத்திற்கொண்டு தகுதிநிலை விளக்கக்குறிப்புகளை வடிவமைத்தல் அவசியமாகும். கற்றலில் மாணவர்களின் முன்னேற்றத்தைக் கண்டறிய உதவும் தகுதிநிலை விளக்கக்குறிப்புகள், சுய மதிப்பீட்டிற்கும் சக மாணவர் மதிப்பீட்டிற்கும் ஏற்புடைய மதிப்பீட்டுக் கருவியாகச் செயற்படும்.

## சரிபார்ப்புப் பட்டியல்

சரிபார்ப்புப் பட்டியல் என்பது குறிப்பிட்ட நோக்கத்திற்காக மாணவர்களின் மொழித்திறன்களையோ செயற்பாடுகளையோ மதிப்பிடவும் கண்காணிக்கவும் உதவுகின்றது. பட்டியலில் இடம்பெற வேண்டிய வினாக்களையும் விளக்கங்களையும் தம் வகுப்பிற்கேற்ப ஆசிரியர் மாணவர்களுடன் கலந்துரையாடியும் கருத்துதிர்ப்புச் செய்தும் உருவாக்கலாம்.

## கருத்துத்தெரிவிப்பு

கருத்துத்தெரிவிப்பு என்பது மாணவர்கள் கற்றல் குறிக்கோள்களுக்கு ஏற்ப எவ்வாறு செயற்பட்டுள்ளனர் என்பதற்கான தகவல்களையும் மேம்பாட்டிற்கான ஆலோசனைகளையும் தெரிவிப்பதாகும். இது கற்றலின்போதும் கற்றலுக்குப் பிறகும் நடைபெறும். ஆசிரியர்கள் தம் கருத்தை வாய்மொழியாகவும் எழுத்துவழியாகவும் மாணவர்களுக்குத் தெரிவிக்கலாம். மாணவர்களின் கற்றலுக்கு அடிப்படையாக விளங்கும் கருத்துத்தெரிவிப்பை உரிய நேரத்தில் வழங்கும்போது அது மாணவர்களின் கற்றலை மேம்படுத்தும்.

## மதிப்பீடு - கருத்துத்தெரிவிப்பு - கற்றல் சுழற்சி

கற்பித்தலோடு மதிப்பீட்டையும் ஒருங்கிணைத்து ஆசிரியர் ஒரு தொகுதியைத் திட்டமிடும்போது மதிப்பீடு - கருத்துத்தெரிவிப்பு - கற்றல் ஆகியவற்றின் சுழற்சியைக் கருத்திற்கொள்ள வேண்டும்.

**மதிப்பீடு - கருத்துத்தெரிவிப்பு - கற்றல் சுழற்சி**

**கற்றலுக்குத் திட்டமிடுதல்**

- மாணவர்களின் பின்புலத்தையும் கற்றல் விளைவுகளையும் அடையாளங்கண்டு திட்டமிடுதல்.
- கற்பித்தல் உத்திகளையும் மதிப்பீட்டுப் பணிகளையும் தேர்ந்தெடுத்து வடிவமைத்தல்.

**கற்றலுக்கு ஆதரவு வழங்குதல்**

- கற்றல் விளைவுகளையும் எதிர்பார்ப்புகளையும் பகிர்ந்துகொள்ளுதல்
- பயன்மிகு பயிற்றுமுறைகளின்வழி மாணவரைக் கற்றலில் ஈடுபடுத்தல்
- மாணவரின் கற்றல் வளர்ச்சி தொடர்பான தகவல்களைச் சேகரித்தல்

**கற்றலை மதிப்பிடுதல்**

- சேகரிக்கப்பட்ட சான்றுகளின் அடிப்படையில் மேம்பாட்டுக்கேற்ற கருத்துத்தெரிவிப்பைத் தக்க சமயத்தில் வழங்குதல்

**கற்றலை மேம்படுத்துதல்**

- கற்றல் கற்பித்தல் தொடர்பான எண்ணப் பிரதிபலிப்பினை மேற்கொள்ளுதல்; கற்றலை மேம்படுத்துதல்

## மின்வழி மதிப்பீடு

மின்வழி மதிப்பீடு என்பது மின்னியல் முறைகளைக்கொண்டு நிகழும் மதிப்பீடாகும். தற்போது கற்றல் கற்பித்தல், வகுப்பறையில் மட்டுமன்றி இல்லம் சார்ந்த கற்றல் (HBL), மின்வழிக் கற்றல் (E-learning), மெய்ந்நிகர் (Virtual) முதலான வழிகளிலும் நிகழ்கிறது. இவ்விதம் நிகழும் கற்றலை மதிப்பிடும் மதிப்பீட்டு நடவடிக்கைகளும் பல்வேறு மின்னியல் முறைகளின் வழியாக நடத்தப்படுகின்றன. மாணவர்களின் கற்றலில் பெரும்பங்கு வகிக்கும் மாணவர் கற்றல் தளம் (SLS) மட்டுமன்றிப் பிற மின்னியல் தளங்களையும் ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களை மதிப்பிடப் பயன்படுத்துகின்றனர். இத்தகைய மதிப்பீடு, முறைசாரா மதிப்பீட்டிற்கு உகந்ததாக அமையும்.

### 4.3.2 முறைசார்ந்த மதிப்பீடு

முறைசார்ந்த மதிப்பீடு மாணவர்களின் கற்றலை மதிப்பிடுவதாகும். இது மொழிப்பாடக் கலைத்திட்டத்தில் வரையறுக்கப்பட்ட கற்றல் அடைவுநிலைகளில் மாணவர்கள் தேர்ச்சி அடைந்துள்ளனரா என்பதைக் கண்டறிவதற்குப் பயன்படுகிறது. கற்றலுக்குப் பிறகு நிகழும் இம்மதிப்பீட்டு முறை, பெரும்பாலும் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் மேற்கொள்ளப்படும். முறைசார்ந்த மதிப்பீட்டில் தேர்வுகள் இன்றியமையாதவை. தேர்வுத்தாள்களைத் திட்டமிடுதல், தயாரித்தல், தரப்படுத்துதல் ஆகியவற்றில் ஆசிரியர்கள் கவனம் செலுத்துவது தேர்வுகளின் தரத்தை உயர்த்துவதோடு நம்பகத்தன்மையையும் கட்டிக்காக்கும். தகுதிச் சான்று வழங்குதல், தரவரிசைப்படுத்துதல், அடுத்த நிலைக்குச் செல்லுதல், தர அளவைகளை வழங்குதல் முதலான மதிப்பீட்டுச் செயற்பாடுகள் முறைசார்ந்த மதிப்பீட்டில் இடம்பெறும்.

## 4.4 மதிப்பீட்டில் முத்தரப்பினரின் பங்கு



ஆசிரியர்

- கற்றல் கற்பித்தலை வடிவமைத்தலும் செயற்படுத்துதலும் மேம்படுத்துதலும்
- மாணவர்களின் தேவைக்கும் செயல்திறனுக்கும் ஏற்பத் தமது கற்பித்தல் செயல்முறைகளை வடிவமைத்துக்கொள்ளுதல்



மாணவர்

- 21-ஆம் நூற்றாண்டுக்குத் தேவையான பலதரப்பட்ட நுண்திறன்களின் வளர்ச்சியையும் மனப்போக்கையும் கொண்டவர்களாக உருவாகுதல்



பெற்றோர்

- பிள்ளைகளின் கற்றல் குறித்த தரவுகளையும் வளர்ச்சிநிலையையும் அறிந்து, அவர்களின் முன்னேற்றத்திற்குத் தக்க முறையில் வழிகாட்டுதல்

## 4.5 வாழ்நாள் கற்றலை நோக்கிச் செல்லுதல் (அர்த்தமுள்ள மதிப்பீடு)

கற்பவரை முன்னிறுத்தும் சமச்சீரான மதிப்பீடு மாணவரின் கற்றலை மேம்படுத்தவும் அவர்களின் அடைவுநிலையைக் கண்டறியவும் பயன்படுகிறது. வகுப்பறையில் நிகழும் முறைசாரா மதிப்பீடும் முறைசார்ந்த மதிப்பீடும் சமநிலையில் நிகழ்வதை ஆசிரியர்கள் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். தாய்மொழி கற்றல் என்பது வாழ்நாள் கற்றல் பயணமாக அமைய வேண்டும். தேசியநிலைத் தேர்வு, இப்பயணத்தின் இறுதி இலக்கு எனக் கருதாதிருப்பது வலியுறுத்தப்படுகின்றது. ஆசிரியர்கள் அர்த்தமுள்ள மகிழ்வுறு கற்றல் அனுபவங்களை மாணவர்களுக்கு வழங்குவதில் கவனம் செலுத்தவேண்டும். அவ்வாறன்றி, தேசியநிலைத் தேர்வுகளை மட்டுமே கருத்திற்கொண்டு கற்றல் கற்பித்தலை மேற்கொள்ளும் மனப்போக்கைத் தவிர்த்தல் வேண்டும். ஆகவே, மாணவரை மையப்படுத்தி நிகழும் கற்றலும் கற்பித்தலும் இயல்பான மதிப்பீட்டிற்கு வழிவகுப்பதோடு மாணவர்களின் கற்றலையும் அர்த்தமுள்ளதாக்கும்.

# பின்னிணைப்பு

# பின்னிணைப்பு 1

## இலக்கணம், மொழிமரபுகள் பட்டியல்
## (தொடக்கநிலை 1 - 2)

### வெளிப்படையாகக் கற்பித்தல்

| தலைப்புகள் | 1 | 2 |
|---|---|---|
| **எழுத்து அறிமுகம்** | | |
| உயிரெழுத்து | ✓ | → |
| மெய்யெழுத்து | ✓ | → |
| உயிர்மெய்யெழுத்து | ✓ | → |
| ஆய்த எழுத்து | | ✓ |
| குறில், நெடில் | ✓ | → |
| இனவெழுத்து | ✓ | → |
| **நிறுத்தற்குறிகள்** | | |
| முற்றுப்புள்ளி ( . ) | ✓ | → |
| வினாக்குறி ( ? ) | ✓ | → |
| **மொழி மரபுகள்** | | |
| உறவுமுறைப் பெயர்கள் | | ✓ |
| ஆண்பால், பெண்பால் | ✓ | → |
| இளமைப்பெயர்கள் | | ✓ |
| உயிரினங்களின் ஒலிகள் | | ✓ |
| தொழிலாளர் பெயர்கள் | | ✓ |
| எதிர்ச்சொற்கள் | | ✓ |
| திசைப்பெயர்கள் | | ✓ |
| நிறங்கள் | | ✓ |
| வடிவங்கள் | | ✓ |
| கிழமைகள் | | ✓ |
| சுவைகள் | | ✓ |

## பயன்பாட்டு நிலையில் அறிமுகம் செய்தல்

| தலைப்புகள் | 1 | 2 |
|---|---|---|
| **சொற்கள்** | | |
| பெயர்ச்சொல், வினைச்சொல் | ✓ | → |
| உடன்பாட்டு ஏவல் வினைமுற்று | | ✓ |
| எதிர்மறை ஏவல் வினைமுற்று | | ✓ |
| தெரிநிலை வினைமுற்று | | ✓ |
| குறிப்பு வினைமுற்று (எளிய சொற்கள் மட்டும்) | | ✓ |
| சுட்டுப்பெயர் | ✓ | → |
| **சொற்கள்** | | |
| ஒருமை, பன்மை: கள், ங்கள் | ✓ | → |
| ற்கள், க்கள் | | ✓ |
| மூவிடப்பெயர்: தன்மை, முன்னிலை, படர்க்கை | ✓ | → |
| எழுவாய், பயனிலை, இயைபு | | ✓ |
| வேற்றுமை உருபுகள்: எழுவாய் வேற்றுமை | ✓ | → |
| ஐ, ஆல், ஒடு, கு, இல், இடம் | | ✓ |
| வினாப்பெயர்: யார் | ✓ | → |
| என்ன, எப்படி, எது, ஏன், எங்கே, எப்போது | | ✓ |
| பதிலிடுபெயர் | ✓ | → |
| அடைமொழி | ✓ | → |
| **சொல் பயன்பாடு** | | |
| எண்ணுப்பெயர் (1-10) (11-20) (10, 20, ....100) | | ✓ |
| ஓரெழுத்து ஒரு மொழி | | ✓ |

# பின்னிணைப்பு 2

## இலக்கணம், மொழிமரபுகள் பட்டியல்
## (தொடக்கநிலை 3 - 6)

| தலைப்புகள் | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|
| **எழுத்து அறிமுகம்** | | | | |
| உயிரெழுத்து | → | → | → | → |
| மெய்யெழுத்து | → | → | → | → |
| உயிர்மெய்யெழுத்து | → | → | → | → |
| ஆய்த எழுத்து | → | → | → | → |
| கிரந்த எழுத்து (ஜ, ஹ, ஷ, ஸ, ஸ்ரீ) | ✓ | → | → | → |
| இனவெழுத்து | → | → | → | → |
| குறில் / நெடில் | → | → | → | → |
| **சொற்கள்** | | | | |
| உயர்திணை, அஃறிணை | ✓ | → | → | → |
| ஐம்பால் (ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால்) | ✓ | → | → | → |
| ஒருமை, பன்மை: கள், ங்கள் | → | → | → | → |
| ற்கள், ட்கள், க்கள் | ✓ | → | → | → |
| மூவிடப்பெயர்: தன்மை, முன்னிலை, படர்க்கை<br>எழுவாய், பயனிலை இயைபு | ✓ | → | → | → |
| பதிலிடுபெயர் | ✓ | → | → | → |
| காலங்கள்: இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் | ✓ | → | → | → |
| எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் | ✓ | ✓ | → | → |
| வேற்றுமை உருபுகள்: எழுவாய் வேற்றுமை | ✓ | → | → | → |
| ஐ, கு | ✓ | → | → | → |
| ஆல், உடன், ஒடு | ✓ | → | → | → |
| இன், இலிருந்து, இடமிருந்து, இல், இடம் அது, உடைய | | ✓ | → | → |
| விளி வேற்றுமை | | ✓ | ✓ | → |
| பெயரடைமொழி | | ✓ | → | → |
| வினையடைமொழி | | | → | → |
| பெயரெச்சம் | | | ✓ | → |
| வினையெச்சம் | | | ✓ | → |
| இணைப்புச் சொல்: ஆனால், அதனால், அப்போது, உம் | ✓ | → | → | → |
| வினைமுற்றை வினையெச்சமாக்குதல் | | | ✓ | → |
| வினைமுற்றைப் பெயரெச்சமாக்குதல் | | | ✓ | → |

| தலைப்புகள் | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|
| **நிறுத்தற்குறிகள்** | | | | |
| முற்றுப்புள்ளி, வினாக்குறி ( . ? ) | → | → | → | → |
| காற்புள்ளி ( , ) | ✓ | → | → | → |
| மேற்கோள்குறி ( “ ” ) | | ✓ | → | → |
| உணர்ச்சிக்குறி ( ! ) | | ✓ | → | → |
| **வலி மிகும் இடங்கள்** | | | | |
| வல்லின மெய் மிகும் இடங்கள் (இரண்டாம், நான்காம் வேற்றுமை விரி வகை மட்டும்) | | | ✓ | → |
| **சொல் பயன்பாடு** | | | | |
| ஒலி வேறுபாட்டுச் சொற்கள் | ✓ | ✓ | ✓ | ✓ |
| ஒரு பொருள் பல சொல் | | ✓ | | ✓ |
| ஒரு சொல் பல பொருள் | ✓ | | ✓ | |
| ஒரு, ஓர் | | ✓ | → | → |
| இரட்டைக் கிளவி | | ✓ | → | → |
| அடுக்குத்தொடர் | | ✓ | → | → |
| சில, சிலர், பல, பலர் | | ✓ | → | → |
| ஆகிய, முதலிய | | | ✓ | → |
| நிரல் அல்லது வரிசை உணர்த்தும் சொற்கள்: முதலில், அடுத்து, பிறகு, முன், பின், மேலும் | ✓ | → | → | → |
| **மொழி மரபுகள்** | | | | |
| ஆண்பால், பெண்பால் | ✓ | → | → | → |
| தொழிலாளர் பெயர்கள் | ✓ | → | → | → |
| எதிர்ச்சொற்கள் | | ✓ | → | → |
| பொழுதுகள் | | ✓ | → | → |
| இணைமொழிகள்* | ✓ | ✓ | ✓ | ✓ |

**✓ அறிமுகம் செய்தல்** **→ மறுபார்வையிடுதல்**

*தொடக்கநிலை மூன்றுமுதல் ஒவ்வோர் ஆண்டும் 5 இணைமொழிகள் அறிமுகப்படுத்தப்படும்.

# பின்னிணைப்பு 3

## செய்யுள், பழமொழிகள் பட்டியல்
## (தொடக்கநிலை 2 - 6)

### தொடக்கநிலை 2

**ஆத்திசூடி**

1. அறம் செய விரும்பு
2. ஆறுவது சினம்
3. இயல்வது கரவேல்
4. ஈவது விலக்கேல்
5. உடையது விளம்பேல்
6. ஊக்கமது கைவிடேல்
7. எண் எழுத்து இகழேல்
8. ஏற்பது இகழ்ச்சி
9. ஐயம் இட்டு உண்
10. ஒப்புரவு ஒழுகு
11. ஓதுவது ஒழியேல்
12. ஔவியம் பேசேல்

### தொடக்கநிலை 3

**ஆத்திசூடி**

1. செய்வன திருந்தச் செய்
2. சோம்பித் திரியேல்
3. தந்தை தாய்ப் பேண்
4. தேசத்தோடு ஒத்து வாழ்
5. நன்மை கடைப்பிடி
6. நூல் பல கல்
7. நோய்க்கு இடங்கொடேல்
8. மீதூண் விரும்பேல்
9. மேன்மக்கள் சொற்கேள்
10. வைகறைத் துயில் எழு

**உலகநீதி**

1. சேராத இடந்தனிலே சேர வேண்டாம்
2. நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்
3. போகவிட்டுப் புறஞ்சொல்லித் திரிய வேண்டாம்
4. மனம்போன போக்கெல்லாம் போக வேண்டாம்
5. மூத்தோர்சொல் வார்த்தைகளை மறக்க வேண்டாம்

## தொடக்கநிலை 4

### கொன்றைவேந்தன்

1. ஊக்கம் உடைமை ஆக்கத்திற்கு அழகு
2. கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி
3. தேடாது அழிக்கின் பாடாய் முடியும்
4. நல்லிணக்கம் அல்லது அல்லற்படுத்தும்
5. நுண்ணிய கருமமும் எண்ணித் துணிக

### வெற்றிவேற்கை

1. அறிஞர்க்கு அழகு கற்றுணர்ந்து அடங்கல்
2. கல்விக்கு அழகு கசடற மொழிதல்
3. சுடினும் செம்பொன் தன்னொளி கெடாது
4. பெருமையும் சிறுமையும் தான்தர வருமே
5. வணிகர்க்கு அழகு வளர்பொருள் ஈட்டல்

### பழமொழிகள்

1. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்
2. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு
3. ஆழம் அறியாமல் காலை இடாதே
4. ஆனைக்கும் அடி சறுக்கும்
5. இளமையில் சோம்பல், முதுமையில் வறுமை
6. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு
7. கற்றது கைம்மண்ணளவு; கல்லாதது உலகளவு
8. சிறு துளி பெரு வெள்ளம்
9. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்
10. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்

## தொடக்கநிலை 5

## தமிழ்

### திருக்குறள்

| | |
|---|---|
| 1. செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்<br>செயற்கரிய செய்கலா தார் | 26 |
| 2. அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்<br>இழுக்கா இயன்றது அறம் | 35 |
| 3. ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்<br>சான்றோன் எனக்கேட்ட தாய் | 69 |
| 4. அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்<br>என்பும் உரியர் பிறர்க்கு | 72 |
| 5. மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து<br>நோக்கக் குழையும் விருந்து | 90 |

| | | |
|---|---|---|
| | 6. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது<br>அன்றே மறப்பது நன்று | 108 |
| | 7. யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்<br>சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு | 127 |
| | 8. சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க<br>சொல்லிற் பயனிலாச் சொல் | 200 |
| | 9. தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்<br>தன்னையே கொல்லும் சினம் | 305 |
| | 10. கற்க கசடறக் கற்பவை கற்றபின்<br>நிற்க அதற்குத் தக | 391 |
| | **பழமொழிகள்** | |
| | 1. அன்பு இருந்தால் ஆகாததும் ஆகும்<br>2. இளமையில் கல்வி சிலையில் எழுத்து<br>3. உடையவன் பாராத வேலை ஒரு முழம் கட்டை<br>4. எரிகிற விளக்கானாலும் தூண்டுகோல் வேண்டும்<br>5. ஒருவர் பொறை இருவர் நட்பு<br>6. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்<br>7. கெடுவான் கேடு நினைப்பான்<br>8. தன் கையே தனக்கு உதவி<br>9. பதறாத காரியம் சிதறாது<br>10. பலநாள் திருடன் ஒருநாள் அகப்படுவான் | |
| **தொடக்கநிலை 5**<br><br>**உயர்தமிழ்** | **திருக்குறள்** | |
| | 1. ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்<br>தீதுண்டோ மன்னும் உயிர்க்கு | 190 |
| | 2. ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்<br>எய்துவர் எய்தாப் பழி | 137 |
| | 3. பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்குஇன்னா<br>பிற்பகல் தாமே வரும் | 319 |
| | 4. பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்<br>தொகுத்தவற்றுள் எல்லாம் தலை | 322 |
| | 5. செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்<br>செல்வத்துள் எல்லாம் தலை | 411 |
| | **மூதுரை** | |
| | 1. நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க<br>நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே – நல்லார்<br>குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோடு<br>இணங்கி இருப்பதுவும் நன்று | |
| | 2. அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவைபோல்<br>உற்றுழித் தீர்வார் உறவல்லர் – அக்குளத்தில்<br>கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே<br>ஒட்டி உறுவார் உறவு | |

## தொடக்கநிலை 6

## தமிழ்

### திருக்குறள்

| | |
|---|---|
| 1. மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை என்நோற்றான் கொல்எனுஞ் சொல் | 70 |
| 2. பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு அணியல்ல மற்றுப் பிற | 95 |
| 3. காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும் ஞாலத்தின் மாணப் பெரிது | 102 |
| 4. நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம் என்றும் இடும்பை தரும் | 138 |
| 5. ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப் பொன்றுந் துணையும் புகழ் | 156 |
| 6. இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண நன்னயம் செய்து விடல் | 314 |
| 7. கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு மாடல்ல மற்றை யவை | 400 |
| 8. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு | 423 |
| 9. முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை இன்மை புகுத்தி விடும் | 616 |
| 10. சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம் சொல்லிய வண்ணம் செயல் | 664 |

### பழமொழிகள்

1. ஆக்கப் பொறுத்தவன் ஆறப் பொறுக்க வேண்டும்
2. ஒருகை தட்டினால் ஓசை எழும்புமா?
3. கனவில் கண்ட பொருள் கைக்குக் கிட்டுமா?
4. காலம் பொன் போன்றது
5. நிழலின் அருமை வெயிலில் தெரியும்
6. நிறைகுடம் நீர் தளும்பாது
7. பகுத்தறியாமல் துணியாதே
8. மனம் உண்டானால் வழி உண்டு
9. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்
10. வெள்ளம் வருமுன் அணைகோல வேண்டும்

| தொடக்கநிலை 6 உயர்தமிழ் | திருக்குறள் | |
|---|---|---|
| | 1. சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்<br>கோடாமை சான்றோர்க் கணி | 118 |
| | 2. உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்<br>கள்ளத்தால் கள்வேம் எனல் | 282 |
| | 3. இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த<br>வகுத்தலும் வல்ல தரசு | 385 |
| | 4. அஞ்சுவ தஞ்சாமை பேதைமை அஞ்சுவது<br>அஞ்சல் அறிவார் தொழில் | 428 |
| | 5. ஞாலம் கருதினுங் கைகூடுங் காலம்<br>கருதி இடத்தாற் செயின் | 484 |
| | **நல்வழி** | |
| | 1. ஆற்றுப் பெருக்கற்று அடிசுடும்அந் நாளுமவ்வாறு<br>ஊற்றுப் பெருக்கா லுலகூட்டும் – ஏற்றவர்க்கு<br>நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும்<br>இல்லையென மாட்டார் இசைந்து | |
| | 2. ஆன முதலில் அதிகஞ் செலவானால்<br>மானம் அழிந்து மதிகெட்டுப் – போனதிசை<br>எல்லார்க்கும் கள்ளனாய் ஏழ்பிறப்பும் தீயனாய்<br>நல்லார்க்கும் பொல்லனாம் நாடு | |

Ministry of Education
SINGAPORE

ISN: 978-981-18-9249-3